Vol.9, Issue 2 | Annual Subscription ₹ 600
Rotary News, July 2026, Chennai

ஜூலை 2026

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

Rotary | PROUD BNI MEMBER

PS



## Pankaj Shah

COL Representative District 3131 2026-28
RI Convention Promotion Chair : Taipei, 2025-26
DRFC RID 3131 RY 2025-26
ARRFC ZONE 7 RY 2023-25
District Membership Chair 2022-25
District Learning Facilitator 2024-25
District Governor 2021-22
Charter Member : Rotary Club of Pune Sarasbaug

+91 98220 57299
rotary.pankajshah@gmail.com

Personal Secretary : 81490 57299 | Email : secretary.pankajshah@gmail.com

GDM RRFM

Shree Ganesh Dal & Besan Mills - Shirwal
Ramtilak Roller Flour Mills (p) Ltd. - Chakan
Mandar Health And Hygiene Pvt. Ltd. - Phaltan
M/s. Arun Narayandas Shah - Lonand
Shree Ganesh Shelters - Pune
M/s Deepchand Venichand Shah, Pune.

**Head Office**
Tel : +91 20 24404900 (30 lines)
Call Center : 7888039303.
admin@ramtilak.com

www.ramtilak.com | www.ganeshdal.com
• ISO 9000:2015 • ISO 22000:2015

SCAN for the Location

**Corporate Office:**
Shop No. 243,
Chatrapati Shivaji Market Yard,
Gultekadi, Pune,
Maharashtra-411037

CRESCO HEALTHCARE
**Multibrand Pathology**
www.crescohealthcare.com

**PATHOLOGY HOME COLLECTION**
**MEDICAL STORE - CHEMIST AND DRUGGIST**

To avail the services
**89564 66801/2/3/4/5**

Download Cresco app

**PATHOLOGY PARTNERS**

Grant Medical Foundation Ruby Hall Clinic | DMH | Bharati Vidyapeeth's Bharati Hospital and Research Centre | Sahyadri Speciality Labs | Trutest Laboratories | Metropolis The Pathology Specialist

# உள்ளே




12

அழைப்பிற்கு செவிசாய்த்தல்



22

கிராமப்புறப் பெண்களுக்கு தையல் திறன் பயிற்சி



32

பெண்மையைக் கொண்டாடிய இந்தூர் ரோட்டேரியன்கள்



50

ரோட்டரியின் கூட்டு முயற்சியால் வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தும் கிராமப்புறபள்ளி



54

7 தம்பதிகள் திருமணத்திற்கு உதவிய ராஜ்புரா ரோட்டேரியன்கள்



56

சென்னையில் உருவாகும் பசுமைப் புரட்சி



Rotary

A publication of Rotary Global Media Network


## முக்கிய அறிவிப்பு

### ஆண்டு சந்தா கட்டணத் திருத்தம்

அன்பார்ந்த சந்தாதாரர்களே,

ரோட்டரி நியூஸ் இதழின் ஆண்டு சந்தா கட்டணம் ஜூலை 1, 2026 முதல் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது:

- அச்சுப் பதிப்பு: **₹600**
- மின்னணு பதிப்பு: **₹360**

இதற்கேற்ப உங்கள் சந்தா ரசீது அனுப்பி வைக்கப்படும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், தாமதமின்றி இதழை உடனுக்குடன் பெறவும், ரோட்டேரியன்கள் **மின்னணு** (e-version) **பதிப்பைத்** தேர்வு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


உங்கள் தொடர்ந்த ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## ஒரு அற்புதமான ஜூன் இதழ்!

*சமீபத்திய தேர்வு முறைகேடுகள், வேலைவாய்ப்பு நெருக்கடிகள் மற்றும் பிற வாழ்க்கைச் சவால்களால் பெரிதும் கலக்கம் அடைந்துள்ள இளம் தலைமுறையினரிடையே நிலவும் அமைதியின்மையைக் கருத்தில் கொள்ளும்போது ஜூன் மாத இதழின் தலையங்கம் மிகவும் பொருத்தமானதாக அமைந்துள்ளது.*

*நமது உலகளாவிய வலையமைப்பு, வளங்கள் மற்றும் 12 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழில்முறை உறுப்பினர்கள் இளைஞர்களைத் தலைமைத்துவம் மற்றும் நேர்மறையான மாற்றத்தை நோக்கி சிறந்த முறையில் வழி நடத்த உதவுகிறது. வெவ்வேறு தலை முறையினரை இணைப்பதன் மூலம், அமைதி, சேவை மற்றும் தொழில்முறை வளர்ச்சிக்கான அடித்தளத்தை நம்மால் உருவாக்க முடியும். சந்தியா ராவின் 'மாங்கா மாஜிக்' என்னும் வார்த்தைகள் உலகம் பத்தியில், தேவதத்தருக்கு புத்தர் அளித்த அறிவுரை இடம்பெற்றுள்ளது. இது ரோட்டரியின் நான்கு வழிச் சோதனையுடன் ஒத்துப்போகிறது.*

*RI தலைவர் ஒலாயின்கா பாபலோலா, சென்னையில் உள்ள ரோட்டரி நியூஸ் டிரஸ்ட் அலுவலகம் மற்றும் ரோட்டரி சங்கங் களுக்கு மேற்கொண்ட பயணம் மற்றும் மே மாத இதழில் வெளியான அவரது நேர்காணல் குறித்த விரிவான செய்திகள் சரியான நேரத்தில் வந்துள்ளன. இந்த கட்டுரைகள் வரும் ஆண்டில் இந்த அமைப்பிற்குத் தலைமை தாங்கப் போகும் ஒரு மனிதரின் மனநிலையை ஒவ்வொரு ரோட்டேரியனும் அறிந்துகொள்ள உதவும்.*




*N அந்த்ரி வேதி*
*RC ஹைதராபாத் மெகா சிட்டி — D 3150*

*ஜூன் மாத தலையங்கம் ஒரு முக்கியமான எச்சரிக்கையை விடுக்கிறது. நம் உலகை வடிவமைப்பதில் இளைஞர்களின் குரலுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நேரம் இது. அவர்களின் தாக்கத்திற்கு நம்மிடம் புதிய சான்றுகள் உள்ளன. சமீபத்தில் தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தலில், 18 முதல் 39 வயதுக்கு உட்பட்ட வாக்காளர்கள், நடிகரும், த.வெ.க. தலைவரும், தற்போதைய முதல்வருமான ஜோசப் விஜய்யின் வெற்றியில் முக்கியப் பங்காற்றினர்.*

*இளைஞர்கள் சக்தி என்பது எதிர்காலத்திற்கான வாக்குறுதி மட்டுமல்ல, அது நிகழ்காலத்தின் ஒரு வலிமையான சக்தி. ஆனால், அந்த சக்திக்கு சரியான திசையும், ஆக்கப்பூர்வமான ஈடுபாடும் தேவை. முறையாக வழிநடத்தப்பட்டால், செயலற்ற தன்மையால் ஏற்படும் பேரழிவுகளை நாம் தவிர்க்கலாம். ரோட்டரி செயல்களின் முன்னெடுப்பு, மண்டல அளவிலான கருத்தரங்குகளில் ரோட்ராக்டர்களுக்கு வாய்ப்பளிப்பதன் மூலம் அவர்களை வலுப்படுத்த முடியும். அவர்களின் குரல் வெறும் அங்கீகாரமாக இல்லாமல் செவிமடுக்கப்பட வேண்டும்.*

*RI இயக்குநர் K P நாகேஷ் இதை மிகச் சரியாக குறிப்பிட்டார். உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை ஆகியவை வெறும் உத்திசார் ஆவணங்களால் மட்டும் கிடைத்துவிடுவதில்லை. சங்கத்தின் செயல்பாடுகளில் உறுப்பினர்களின் தனிப்பட்ட ஈடுபாடு, தாங்கள் மதிக்கப்படுகிறோம் என்ற உணர்வு மற்றும் உண்மையான தோழமை ஆகியவை தேவைப்படுகின்றன. இவையே பிணைப்புகளையும், சவால்களை ஒரு அணியாக இணைந்து*

சுயசார்பை நோக்கிப் பயணிக்கும் பார்வையற்றோர் என்ற கட்டுரையைப் படித்த பிறகு, 1981 முதல் ரோட்டேரியனாக இருப்பதிலும், மக்களுக்குச் சேவை செய்வதிலும் நான் பெருமை அடைகிறேன். பார்வையற்றோருக்குப் பயிற்சி அளித்து அவர்களைச் சமூகத்தின் முக்கிய நீரோட்டத்தில் இணைப்பதற்காக கொச்சி குளோபல் ரோட்டரி சங்கம், திட்டம் சூர்யாவைத் தொடங்கியுள்ளது. அவர்களுக்கு கணினி பயிற்சி அளிப்பதோடு வேலைவாய்ப்புகளையும் பெற்றுத்தரும் பயிற்சியாளர்களுக்கு நன்றி.

T D பாடியா, RC தில்லி, மயூர் விஹார் — D 3012

மே மாத இதழில் வெளியான இடஒதுக்கீட்டுச் சிக்கல் தலையங்கமும், சகோதரர்களைப் போல காட்சியளிக்கும் RI தலைவர் ஒலாயின்கா பாபலோலா மற்றும் RID M முருகானந்தம் ஆகியோரின் அட்டைப்படம் மிக அருமை. முருகானந்தம் கூறும் 'முதலில் இளைஞர், என்றென்றும் ரோட்டரி' என்ற செய்தி ரோட்டரியில் இளைஞர்களின் பங்கை முன்னிலைப்படுத்துகிறது.

டேனியல் சிட்டிலப்பள்ளி, RC கலூர் — D 3205

பெண்களுக்கான இடஒதுக்கீடு குறித்த உங்கள் மே மாத தலையங்கத்தை பொறுத்தவரை, பெண்கள் தங்கள் அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டின் மூலம் வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் தங்கள் திறமையை நிரூபித்துள்ளனர். தடை களைத் தாண்டி அவர்கள் ஒவ்வொரு துறையிலும் ஆண்களை மிஞ்சும் வகையில் சிறந்து விளங்குகிறார்கள்.

பெண்கள் இடஒதுக்கீடு மசோதா 2023, மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் குறைந்தது 33 சதவீத இடஒதுக்கீட்டை  உறுதி செய்கிறது. இது நடைமுறைக்கு வரும்போது நாடாளுமன்றம் மற்றும்

*எதிர்கொள்ளும் உறுதியைத் தருகின்றன.*

*ரோட்ராக்டர் மற்றும் ரோட்டேரியன் என இரு நிலைகளிலும் செயல்படும் DRR ஜானிஸ் பிலிப்புடனான நேர்காணல் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது. மேலும் ஆளுமை வளர்ச்சி, நட்பு மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றிற்கு இன்றியமையாத RYLA நிகழ்வை நாம் புறக்கணிக்க முடியாது. இது நாளைய தலைவர்களை உருவாக்குவதால், ஒவ்வொரு மாவட்டமும் இதை நடத்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.*


*பிரகாஷ் சந்த் சங்கி*
*RC ஜெய்ப்பூர், பாபு நகர் – D 3056*

*ஜூன் மாத இதழ் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. ரோட்டரி நியூஸ் செய்திக் குழுவினரின் கடின உழைப்பு, பொறுமை மற்றும் சிறப்பான செய்தி சேகரிப்பு மற்றும் தொகுப்புப் பணிகளுக்கு பாராட்டுகள். இந்த வெளியீட்டின் தரமும் தொழில்முறை நேர்த்தியும் போற்றத்தக்கவை.*

*நாகேஷ் கென்ஜிகே*
*RC சிக்கமகளூர்-காபி வேண்ட்*
*D — 3182*

மாநில சட்டப்பேரவைகளில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிசமாக உயரும். ஆனால், மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதி மறுவரையறைப் பணிகள் முதலில் முடிக்கப்பட வேண்டியிருப்பதால் இந்த மசோதா நடைமுறைக்கு வருவதற்கு சிறிது காலம் ஆகும்.

இருப்பினும், கொள்கை உருவாக்கம் மற்றும் சட்டமியற்றுதலில் பெண்களின் பங்கேற்பு, நமது அரசியல் மற்றும் சமூக அமைப்புகளை பாலினச் சமத்துவத்துக்கு உகந்ததாக மாற்ற நிச்சயம் உதவும்.




உலகெங்கிலும் உள்ள ரோட்டரி சங்கங்களில் பெண் உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையை RI நிர்வாகம் நிர்ணயிப்பது விவேக மானதாக இருக்கும்.

ராஜ்குமார் கபூர்
RC ரூப்நகர் — D 3080

மே மாத இதழில், "ரோட்டரிக்காக பாபலோலா ஒரு லட்சிய இலக்கை வகுக்கிறார்" என்ற கட்டுரைதான் என்னை மிகவும் கவர்ந்தது.

ரோட்டரி வளர வேண்டுமானால், அனைத்து ரோட்டேரியன்களும் தங்கள் கதைகளைச் சொல்ல வேண்டும் என்ற அவரது ஆலோசனை பாராட்டத்தக்கது. மூன்று ஆண்டுகளாக ஒரு ரோட்டேரியனாக எனது சங்கத்தில் நடக்கும் சந்திப்புகளில் எனது அனுபவங்களை நான் எப்போதும் முன்னிலைப்படுத்தி வருகிறேன். மேலும் எனது சக ரோட்டரி சிவில் என்ஜினீயர் நண்பருக்கு ஒரு வீடு கட்டிக் கொடுத்தேன். நான் பணிபுரியும் கல்லூரியில் நடந்த பொறியாளர் தினத்திற்கு மற்றொரு ரோட்டேரியன் என்ஜினீயரைத் தலைமை விருந்தினராக அழைத்தேன்.

தொழில்முனைவோர் தினத்திற்கு, மற்றொரு சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியனான ஒரு தொழில் முனைவோரை சிறப்பு விருந்தினராக அழைத்தேன். ரோட்டரி புதிய அறிமுகங்களையும், நட்புகளையும், தொழில் வாய்ப்புகளையும் கொண்டு வருகிறது. நமது நிகழ்ச்சிகள் நண்பர்கள் வட்டத்தைப் பெரிதும் விரிவு படுத்துகின்றன.

சிவபெருமாள் சுப்ரமணி,
RC வாலாஜாபேட்டை — D 3231

RI தலைவரிடமிருந்து...

# சிறப்புக்கும் மேலாக...



ரோட்டரிக்கு உங்களை வியப்பில் ஆழ்த்துவது பழகிவிட்டது. புதிதாகச் சந்தித்த ஒருவர் வாழ்நாள் நண்பராகும் போது, ரோட்டரி உங்களை வியக்கவைக்கிறது. ஒரு பகுதியில் செய்த சிறிய திட்டம் நீங்கள் கற்பனை செய்ய இயலாதபடி பரவும்போது, அது உங்களை வியக்கவைக்கிறது. ரோட்டரி மிகவும் மாற்றியுள்ள நபர் நீங்கள்தான் என்பதை உணரும்போது, அது உங்களை வியக்கவைக்கலாம்.

அதனால், இந்த ஆண்டு நமக்குள் மாற்றத்தை உண்டாக்கும்படியும், எதிர்காலத்தை எதிர்நோக்கும் படியும், நீடித்த தாக்கத்தை உருவாக்கும்படியும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இந்தச் சொற்களின் பொருள் என்ன என்று நான் தெளிவாகச் சொல்லிவிட விரும்புகிறேன். மாற்றம் என்பது ஒரு தொடக்கம்தான். தாக்கம்தான் நீடித்திருக்கும். ஒவ்வொரு திட்டத்தின் தொலைநோக்குத் தாக்கத்தைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டும்.

நாம் தாக்கத்துக்கு முன்னுரிமை கொடுக்கும்போது, நம் செயல்கள் அமைதிக் கட்டமைப்புக்கு எப்படிப் பங்களிக்கலாம் என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். அமைதி எதேச்சையாக நடந்துவிடுவதில்லை. அதை வலியச் சென்று, வியூகம் அமைத்துக் கட்டமைக்கவேண்டும்.

நீங்கள் உங்கள் சமூகத்தையும் உலகையும் மாற்ற மாற்ற, நீங்களும் நிறைய மாறுவீர்கள். நீங்கள் செய்துள்ள திட்டங்கள் அல்லது நீங்கள் திரட்டியுள்ள நிதிகளைப்பற்றி மட்டும் மக்களுக்குச் சொல்லாதீர்கள். நீங்கள் யார் என்பதை ரோட்டரி எப்படி வடிவமைத்துள்ளது என்று அவர்களிடம் சொல்லுங்கள். அந்தத் தனிப்பட்ட கதைகள் கதவுகளைத் திறக்கும், புதிய உறுப்பினர்களை ஊக்குவிக்கும், நாம் ஏன் இங்கு இருக்கிறோம் என்று நம் அனைவருக்கும் நினைவுபடுத்தும்.

புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும் நிதி திரட்டவும் கதை சொல்லல் ஒரு மிகச் சிறந்த வழி. நாம் இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைக்கவேண்டும், அமைதியைப் பரப்பவேண்டும், உலகில் நீடித்த தாக்கத்தைக் கொண்டுவரவேண்டும் என்றால், இன்னும் பலர் நம்முடன் நிற்கவேண்டும், இன்னும் நிறைய வளங்கள் வேண்டும். ரோட்டரியின் 125-வது ஆண்டு விழா நெருங்குகிற 2030-க்குள், நம் உறுப்பினர் எண்ணிக்கையை 1.25 மில்லியன் ரோட்டரியன்கள், 125,000-க்கும் மேற்பட்ட ரோட்டராக்டர்கள் என்று உயர்த்துவதற்கு நாம் இலக்கு அமைத்துள்ளோம்.

உங்கள் சங்கத்துடன் உட்கார்ந்து பேசுங்கள், முந்தைய சில ஆண்டுகளில் உங்கள் சாதனைகளைத் திரும்பிப் பாருங்கள். உங்கள் சிறந்த ஆண்டைக் கண்டறியுங்கள். அது நிறையப் புதிய உறுப்பினர்களைச் சேர்த்த ஆண்டாக இருக்கலாம். நீங்கள் ஒரு நிதி திரட்டல் மைல் கல்லை எட்டிய ஆண்டாக இருக்கலாம். மொத்தச் சமூகமும் இப்போதும் பேசுகிற ஒரு திட்டத்தை நீங்கள் முடித்த ஆண்டாக இருக்கலாம். அந்த ஆண்டைக் கண்டறிந்ததும், அதைவிடச் சிறப்பாகச் செயல்படவேண்டும்.

இது போன்ற வழிகளில் நாம் உலகெங்கும், நம் சமூகங்களில், நம்மில் நீடித்த தாக்கத்தை உருவாக்குவோம்.

**ஓலாயின்கா பாபலோலா**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# மாற்றம், முன்னேற்றத்திற்கான நம்பிக்கை

தமிழ்நாட்டில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பேரவையில் மொத்தம் உள்ள 234 இடங்களில் 23 தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள், அதாவது மொத்த எண்ணிக்கையில் ஏறக்குறைய 10 சதவீதம் பேர் ரோட்டேரியன்கள் என்பது இந்திய ரோட்டேரியன்கள் பெருமைப்படக்கூடிய விஷயமாகும். இவர்களில் 5 பேர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். இதில், 29 வயதான S கீர்த்தனாவும் அடங்குவார். இவருக்கு முக்கிய துறையான தொழில்துறை மற்றும் முதலீட்டு மேம்பாட்டுத்துறை வழங்கப்பட்டுள்ளது. புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், புள்ளியியல் படிப்பில் முதுகலைப் பட்டம் (M.Sc.,) பட்டம் பெற்ற இவர், தமிழக முதல்வர் C ஜோசப் விஜயின் தேர்தல் பிரசார திட்டமிடல், அடித்தட்டு மக்களுடன் தொடர்பு மற்றும் இளைஞர்களை திரட்டும் பணியில் முக்கிய பங்காற்றியவர். இன்ஸ்டாகிராமில் இவரை 4,51,000 பேர் பின்தொடர்கிறார்கள் என்று சொன்னால் அதில் ஆச்சரியமில்லை. பட்டாசு தயாரிப்பு தொழிலுக்கு புகழ்பெற்ற சிவகாசி சட்டப்பேரவைத் தொகுதியிலிருந்து இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தனது சொந்த தொகுதிக்கான தேர்தல் பிரசாரத்தின்போது, பட்டாசு ஆலைத் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலன்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியிருந்தார்.

1775-ம் ஆண்டில், சாமுவேல் ஜான்சன், “தேசபக்தி என்பது ஒரு அயோக்கியனின் கடைசி புகலிடம்” என்று கூறியிருந்தார். நிச்சயமாக அவர் போலி தேசபக்தியை அப்படி குறிப்பிட்டிருக்கலாம். பின்னர் இது “அரசியல் என்பது அயோக்கியர்களின் புகலிடம்” என்று மாற்றப்பட்டு, ஆஸ்கர் வைல்டு (நிச்சயமாக அவர் இதைச் சொல்லவில்லை) மற்றும் ஜார்ஜ் பெர்னாட்ஷா ஆகியோரின் பெயர்களுடன் இணைத்துப் பேசப்பட்டது. ஷா இதைச் சொன்னார் என்பதற்கான உறுதியான ஆதாரம் எதுவும் இல்லை என்றே தெரிகிறது. ஆனால், உலகம் முழுவதும், குறிப்பாக இந்தியாவில் அரசியல் மீதான பொதுவான அதிருப்தி நிலவும் சூழலிலும், “தேசியவாதம்” (தேசபக்தி) இந்தியாவில் ஒரு முக்கிய பேசுபொருளாக மாறியுள்ள நிலையிலும், இவ்விரு சொற்றொடர்களும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

எனினும், உண்மை, நேர்மை மற்றும் சமத்துவம் ஆகிய ரோட்டரி அமைப்பின் அடிப்படை மற்றும் உயரிய கொள்கைகளில் உறுதியாக இருக்கும் ரோட்டேரியன்கள் அரசியலில் நுழைந்து அதே விழுமியங்களைக் கடைப்பிடித்தால், மாற்றத்திற்கான நம்பிக்கை பிறக்கும். ஊழலை ஒழிக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடிந்தால் அதன் மூலம் அரசுக்கு மிச்சமாகும் நிதியை- நீர் மற்றும் சுகாதாரம், மருத்துவம், வாழ்வாதார மேம்பாடு, முதியோர் கல்வி, குழந்தைகளின் கல்வி போன்ற இந்த அமைப்புக்கு நன்கு பரிச்சயமாக துறைகளில் செலவிட்டால், அரசுப் பதவிகளில் இருப்பவர்களால் எவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதை கற்பனை செய்துபாருங்கள். நாம் அவநம்பிக்கை நிறைந்த உலகில் வாழ்கிறோம். வயது முதிரும் போது இந்த அவநம்பிக்கை உணர்வு மேலும் வலுவடைகிறது. ஏமாற்று வேலை, நேர்மையின்மை மற்றும் பொய்யான கூற்றுக்களைத் தெளிவாக புரிந்து கொள்ளும் திறன் வயதாகும் போது கூடுகிறது. இதனால், உங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய எதிர்மறையான கண்ணோட்டத்திற்கும் நீங்கள் எளிதாகச் சென்றுவிடக்கூடும்.

ஆனால், இளைஞர்கள் நம்பிக்கை, நேர்மறை எண்ணங்கள் மற்றும் உயர்ந்த லட்சியங்களுடன் வளர்ந்து வருகிறார்கள். சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த தங்கள் கவலைகளை வெளிப்படுத்த குரல் கொடுப்பதில் இளைஞர்கள் இன்று மிகவும் தீவிரமாக இருக்கிறார்கள். ஏனெனில் சீரழிந்து வரும் இந்த பூமியில் நீண்டகாலம் வாழப்போவது அவர்கள்தான். நல்ல வேளையாக உலகம் முழுவதும் ஒப்பீட்டளவில் இப்போது இளம் வயது அரசியல் தலைவர்களைக் காண முடிகிறது. அவர்கள் நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும், நேர்மறை மனப்பான்மையுடனும் உலகை அணுகி, ஆக்கப்பூர்வமான மாற்றங்களை உருவாக்க தங்கள் ஆற்றலையும், வலிமையையும் பயன்படுத்தினால், வசதி படைத்தவர்களுக்கு மட்டுமல்லாமல், அனைவருக்கும் நாளை சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியும் என்று நாம் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

இணையத்தில் கீர்த்தனாவின் காணொளிக் காட்சிகளைத் தேடிப்பாருங்கள். அவற்றில் அவர் வெளிப்படுத்தும் நம்பிக்கையை உற்றுநோக்குகங்கள். மாற்றத்தை முன்னெடுக்கும் இத்தகைய இளைஞர்கள் மீது நம்பிக்கை வைக்க நம்மைத் தூண்டும்.

ரஷீதா பகத்

ADVT.


SHIKHAR TRAVELS
ROTARIANS
Trusted Travel Partner
Shikhar Travels (India) Pvt Ltd
Our Service:
1
Domestic & International
AIR TICKETING
2
Accommodation, Transport
LEISURE HOLIDAYS
3
Organizer
CONFERENCE & EVENT
4
Across Worldwide
ADVENTURE TOURS
5
Char Dham to Kailash
PILGRIMAGE TOURS
6
MICE & Events
CORPORATE TRAVEL
Capt. Swadesh Kumar
Past Assistant Governor, RI District 3011 Rotary Club of Delhi South Metropolitan.
+91 98100 24642
swadesh@shikhar.com
SCAN HERE
+91 9717891151
Call us for personel assistance
tours@shikhar.com
Email us for your travel needs

# RI இயக்குனர் செய்தி



## உயர்ந்த இலக்கை நோக்கி முன்னேறுவோம்

2026–27-ம் ஆண்டுக்கான புதிய ரோட்டரி ஆண்டில் நாம் அடியெடுத்து வைக்கும் இந்த இனிய தருணத்தில், எனது ரோட்டரி குடும்பத்தினர் அனைவருக்கும் அன்பான வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

RI தலைவர் ஓலயின்கா பாபலோலா அவர்கள் “நிலையான தாக்கத்தை உருவாக்குவோம்” என்ற ஊக்கமளிக்கும் செய்தியை நமக்கு வழங்கியுள்ளார். ஒரு திட்டம் நிறைவடைந்த பிறகும் அது ஏற்படுத்தும் நீடித்த மாற்றமே நமது சேவையின் உண்மையான அளவுகோல் என்பதை இது நினைவூட்டுகிறது.

ஒவ்வொரு புதிய ரோட்டரி ஆண்டும் புதிய தலைமைத்துவம், புதிய உற்சாகம், புதிய இலக்குகள் மற்றும் சேவை செய்வதற்கான புதிய வாய்ப்புகளை கொண்டு வருகிறது. ரோட்டரி என்பது ஒரு தலைமைத்துவப் பயிற்சிக் கூடமாகும். உலகம் முழுவதும் உள்ள சங்கங்கள், மாவட்டங்கள், மண்டலங்கள் மற்றும் RI மூலம் கிட்டத்தட்ட 4 லட்சம் தலைவர்களை உருவாக்கி வருகிறது.

அன்பான தலைவர்களே, ரோட்டரியில் நீங்கள் பெறும் இந்த ஓராண்டு தலைமைத்துவ வாய்ப்பு ஒரு பொன்னான சந்தர்ப்பம். தமிழ் இலக்கியத்தில் ஒரு அழகான சொற்றொடர் உள்ளது: “உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்” — அதாவது எப்போதும் உயர்ந்த இலக்கை நோக்கிச் சிந்திப்போம் என்பதாகும். உங்கள் எண்ணங்கள் உயர்ந்தால், உங்கள் செயல்கள் வலிமை பெறும்; அதன் விளைவுகள் மகத்தானதாக இருக்கும். இறுதியில், முடிவுகளும் எண்ணிக்கைகளும் தாமே பேசும். வலிமையான சங்கங்கள், அதிகரித்த உறுப்பினர் எண்ணிக்கை மற்றும் நேர்மறையான வளர்ச்சியுடன் தலைமைத்துவப் பொறுப்பை அடுத்தவரிடம் ஒப்படைப்போம்.

ஒவ்வொரு சங்கமும் தனது நிலையை அறிய சிவப்பு-ஆம்பர்-பச்சை (RAG) ஆய்வு முறையைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். 25-க்கும் குறைவான உறுப்பினர்கள் உள்ள சங்கம், உறுப்பினர் எண்ணிக்கையை 25 முதல் 50 வரை உயர்த்தி சிவப்பு நிலையிலிருந்து ஆம்பர் நிலைக்கு முன்னேற வேண்டும்.

புதிய சங்கங்களை உருவாக்கி, அவற்றைச் சுறுசுறுப்பாக செயல்படச் செய்வோம். நமது தற்போதைய உறுப்பினர் வளர்ச்சியுடன், ரோட்டரியின் நீண்டகால நிலைத்தன்மையையும் நாம் சிந்திக்க வேண்டும். எனவே ஒவ்வொரு ரோட்டேரியனும் 2 ரோட்டராக்டர்களையும் 3 இன்டராக்டர்களையும் இணைத்து வழிநடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1 ரோட்டேரியன் : 2 ரோட்டராக்டர்கள் : 3 இன்டராக்டர்கள் என்ற உத்தி, எதிர்கால தலைமுறைகளுக்கான வலுவான தலைமைப்பாதையை உருவாக்கும்.

நமது மண்டலங்கள் 4, 5, 6 மற்றும் 7 உலகளாவிய ரோட்டரி அரங்கில் தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருவது பெருமைக்குரியது. நாம் உயர்ந்த இலக்குகளை நிர்ணயித்து, ஒருமைப்பாட்டுடன் செயல்பட்டு, இந்த நிலையை மேலும் வலுப்படுத்துவோம்.

ரோட்டரியின் மிகப்பெரிய பாரம்பரிய முயற்சியான போலியோ ஒழிப்பு பணியையும் தொடர்ந்து நினைவில் கொள்வோம். எதிர்கால தலைமுறைகளுக்கு போலியோ இல்லாத உலகை வழங்குவதே ரோட்டரியின் மிகப்பெரிய சாதனையாக இருக்கும்.

2030-ம் ஆண்டு ரோட்டரியின் 125-வது ஆண்டு விழாவை நோக்கி நாம் பயணிக்கும் நிலையில், நமது விஷன் 2030 தெளிவாக உள்ளது - 12.5 லட்சம் ரோட்டேரியன்கள் மற்றும் 1.25 லட்சம் ரோட்டராக்டர்கள். இதை அடைய நாம் பெரிய கனவுகளைக் காணவும், துணிச்சலுடன் செயல் படவும், உயர்ந்த இலக்கை நோக்கிச் செல்லவும் வேண்டும்.

எனது அன்பான ரோட்டரி குடும்பத்தினரே, அர்ப்பணிப்பு, ஆர்வம் மற்றும் ஒற்றுமையுடன் இணைந்து செயல்படுவோம். ரோட்டரிக்கு “ஆம்” என்று சொல்வோம். நிலையான தாக்கத்தை உருவாக்குவோம். தொடர்ந்து உயர்ந்த இலக்கை நோக்கி முன்னேறுவோம்.

**M முருகானந்தம்**

RI துணைத்தலைவர், 2026–27
RI இயக்குநர், 2025–27

TRF
தலைவரிடமிருந்து...



# நன்றியுணர்வுடன் வழிநடத்துதல்

நன்றியுணர்வுக் குறிப்பேடு எழுதுவது எனக்கு மிகவும் பிடிக்கும். இந்தப் பழக்கம் மிக எளிமையானது: ஒவ்வொரு நாளும் நீங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிற மூன்று விஷயங்களை எழுதுங்கள். அது உங்கள் மனநிலையை, ஆற்றலை, நீங்கள் உலகைப் பார்க்கும் விதத்தைக்கூட மாற்றும்.

ரோட்டரியில், நன்றியுணர்வு என்பது நாம் யார் என்பதன் ஒரு பிரதிபலிப்பு. நாம் நம் கொடையாளர் களுக்கு நன்றி தெரிவிக்கும் போது, அவர்களுடைய பங்களிப்பை அங்கீகரிக்கிறோம், இன்னும் மேம்பட்ட உலகின் மீதான அவர்களுடைய நம்பிக்கையைப் பெருமைப்படுத்துகிறோம்.

ஜனவரியில், பன்னாட்டுச் சந்திப்பின் போது நான் அதில் எழுதிய ஒரு குறிப்பை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இந்தச் சந்திப்பு, DGE-களுக்காக ஆண்டுதோறும் நடைபெறுகிற கற்றல் நிகழ்வு மட்டுமில்லை, நிகழ்வு முடிந்தபின்னும் உங்களோடு தங்கும் ஊக்கம், கணங்கள் நிறைந்த ஒரு கூட்டம்.

என் முதல் குறிப்பு, டெப்பி மற்றும் ரஸ்ஸெல் டாபி-க்கு நன்றி தெரிவிப்பதாகும். 2022-ல் டெப்பி மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். பெருந் தொற்றினால் அவர் அந்த ஊக்கமளிக்கும் சந்திப்பு அனுபவத்தைத் தவறவிட்டிருந்தார். ஓராண்டுக்குப்பிறகு, டெப்பி மாவட்டக் கருத்தரங்கை நடத்தவிருந்தார். அதற்குச் சில நாட்கள் முன்பாக, அவரும் அவருடைய கணவரும் ஒரு விபத்தில் சிக்கினார்கள். அதில் மற்ற ஓட்டுநர் இறந்தார்; டெப்பியும் ரஸ்ஸெலும் அதிசயமான முறையில் காப்பாற்றப்பட்டார்கள்.

இந்தத் துன்பத்திலிருந்து அவர்கள் நல்லுணர்வைக் கண்டறிந்தார்கள். அவர்கள் ஆர்ச் கிளம்ஃப் சமூக நிலையில் தங்கள் மாவட்டத்துக்கென ஒரு நன்கொடை நிறுவல் நிதியை உருவாக்கினார்கள், வலியை நோக்கமாக மாற்றத் தீர்மானித்தார்கள்.

என் இரண்டாவது குறிப்பு, இந்தியாவிலுள்ள பெங்களூர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரவிசங்கர் மற்றும் பவோலா டகோஜூ-வைப்பற்றியது. இந்தச் சந்திப்பின் போது இவர்கள் ரோட்டரி அறக்கட்டளைக்கு $50 மில்லியன் வழங்க உறுதியளித்தார்கள். இவர்களுடைய செல்வத்தில் 85%ஐப் பிரதிபலிக்கும் இந்தப் பரிசு அசாதாரணமானது. ரவிசங்கர் இதைப்பற்றிப் பேசுகையில், “நீங்கள் உங்களால் கொடுக்க இயல்வதாக நினைப்பதை விடக் கூடுதலாகக் கொடுக்கும் போது, நீங்கள் கற்பனைகூடச் செய்ய முடியாததை வாழ்க்கை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்” என்றார். அந்த ஒற்றைச் சொற்றொடர் ரோட்டரியின் இதயத்தை வெளிப்படுத்துகிறது.

என் மூன்றாவது குறிப்பு, மொஹ் ஈத் மற்றும் சக் மற்றும் கரோல் ஸ்டாக்கிங்குக்கு நன்றி தெரிவிப்பதாகும். மொஹ்-ஹின் சகோதரரும் மனிதத்தன்மையுள்ள உதவிப் பணியாளருமான இப்ராகிம் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கொண்டிருக்கும் போது கொல்லப்பட்டார். அதன்பிறகு, சக் ரோட்டரி அமைதித் தோழர்களுக்கு உதவுவதற்காக இப்ராகிம் ஈத் நிதியை உருவாக்கினார். அவர்களுடைய பயன்பாட்டுப் பரிசு, மில்லியன் டாலர் இலக்குக்கான $100,000. துயரம் இப்படிதான் நம்பிக்கையாக மாறுகிறது.

இன்று, நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த ஆண்டு, நன்றியுணர்வு நம் திசைகாட்டியாகட்டும்.

**ஜெனிபர் ஜோன்ஸ்**
TRF அறங்காவலர் தலைவர்


**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| RID 2981 | வைத்தியநாதன் K |
| RID 2982 | செந்தில்குமார் C |
| RID 3000 | R B S மணி |
| RID 3011 | அஜீத் ஜலான் |
| RID 3012 | அமித் குப்தா |
| RID 3020 | ஸ்ரீராம் குட்டிகொண்டா |
| RID 3030 | ராஜேஷ் V பாட்டீல் |
| RID 3040 | சன்ஸ்கர் கோத்தாரி |
| RID 3053 | பிரிஜ் மோகன் அகர்வால் |
| RID 3055 | நைமிஷ் N ராவணி |
| RID 3056 | அருண் பகாடியா |
| RID 3060 | நிலேஷ் R ஷா |
| RID 3070 | அனில் குமார் சிங்கல் |
| RID 3080 | ரீட்டா கல்ரா |
| RID 3090 | அமித் குமார் |
| RID 3100 | பாயல் கௌர் |
| RID 3110 | ஜஸ்பீர் சிங் பாட்டியா |
| RID 3120 | பூனம் குலாட்டி |
| RID 3131 | நிதின் S தாமலே |
| RID 3132 | ஜெயேஷ் R படேல் |
| RID 3141 | ராஜன் துவா |
| RID 3142 | நிலேஷ் V ஜாவந்த் |
| RID 3150 | உதய் சுதிர் பிலானி |
| RID 3160 | கேசவ் ரெட்டி P |
| RID 3170 | லென்னி டா கோஸ்டா |
| RID 3181 | சதீஷ் போலார் |
| RID 3182 | B M பட் |
| RID 3191 | அனில் குப்தா |
| RID 3192 | ரவிசங்கர் டகோஜூ |
| RID 3203 | K பூபதி |
| RID 3204 | M V மோகன்தாஸ் மேனன் |
| RID 3205 | ஜோஷி சாக்கோ |
| RID 3206 | R S மாருதி |
| RID 3211 | K G நாயர் |
| RID 3212 | காந்தி கிருஷ்ணன் |
| RID 3231 | T S ரவிக்குமார் |
| RID 3233 | ஸ்ரீராம் துவ்வுரி |
| RID 3234 | சுரேஷ் D ஜெயின் |
| RID 3240 | அசிம் காந்தி A |
| RID 3250 | அனு நரங் |
| RID 3261 | ஆலம் S ரூப்ரா |
| RID 3262 | அனில் குமார் சமல் |
| RID 3291 | தபஸ் பட்டாச்சார்யா |



அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.

ஆசிரியர்: **ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



This periodical is published by **PT Prabhakar** from Dugar Towers 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008, on behalf of **Rotary News Trust**, edited by **Rasheeda Bhagat** and printed by **Rasi Graphics** at 40 Peters Road, Royapettah, Chennai 600 014, India.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| KP நாகேஷ் RI இயக்குனர் மற்றும் RNT தலைவர் | RID 3191 |
| M முருகானந்தம் RI துணைத்தலைவர் மற்றும் இயக்குநர் | RID 3000 |
| A S வெங்கடேஷ் TRF அறங்காவலர் | RID 3234 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மகாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3234 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr பரத் பாண்ட்யா | RID 3141 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| ராஜு சுப்ரமணியன் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| குர்ஜீத் சிங் சேகோன் | RID 3070 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2026–27)

| | |
|---|---|
| பாயல் கௌர் தலைவர், ஆளுநர் குழு | RID 3100 |
| லென்னி டா கோஸ்டா துணைத்தலைவர், ஆளுநர் குழு | RID 3170 |
| R சுப்ரமணி செயலாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| அஜீத் ஜலான் பொருளாளர், ஆளுநர் குழு | RID 3011 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF அறங்காவலர் செய்தி**



# நம் புத்தாண்டுத் தீர்மானம்

ஒரு புதிய ரோட்டரி ஆண்டு தொடங்குகிறது. புதிதாக நிறுவப்பட்ட தலைவர் தன்னுடைய மிகச் சிறந்த பணியை ஆற்றுவதற்குத் தீர்மானிக்கும் நேரம் இது. ஒவ்வொரு நிலையிலும் உள்ள தலைமைக் குழுக்கள் மாறுகின்றன. ஆனால், ஒரு விஷயம்மட்டும் எப்போதும் மாறுவதில்லை: இந்த உலகை எல்லாருக்கும் இன்னும் சிறந்த இடமாக மாற்றுகிற நம்முடைய ஒட்டுமொத்தக் கனவு. ரோட்டரி அறக்கட்டளை மிகச் சிறப்பாக முன்னேறியுள்ளது, குறிப்பாக நம் பகுதியில். நம் கனவுகள் அனைத்தும் நனவாகும்வரை நாம் ஓய்வெடுக்கமாட்டோம் என்பதை நம் உறுப்பினர்கள் சென்ற ஆண்டு மீண்டும் ஒரு முறை காண்பித்துள்ளார்கள். நம் பகுதிச் சங்கங்களும் மாவட்டங்களும் நடத்தியுள்ள திட்டங்களின் தாக்கம் ஊக்கமளிக்கிறது, மாற்றத்தைக் கொண்டுவருகிறது. நிறையச் செய்திருந்தாலும், இன்னும் நிறையச் செய்யவேண்டியுள்ளது.

இதுவரையிலான நம் வெற்றியைப் பயன்படுத்தி, இன்னும் பெரிய, இன்னும் கூடுதல் தாக்கமுள்ள திட்டங்களை நாம் உருவாக்கவேண்டும். கொடுப்பதற்கும் செய்வதற்கும் இன்னும் பலர் சேர்ந்தால் இது நடக்கும். ஒவ்வொரு உறுப்பினரும் ஏதாவது ஒரு செயல்பாட்டில் பங்கேற்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ரோட்டரியை அனுபவித்துதான் உணரவேண்டும். நாம் அதன் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என்று விரும்பித் தன்னார்வத்துடன் முன்வந்தால் அது நடக்கக்கூடும். நாம் பார்வையாளர்களாக இல்லாமல், செயல்படுகிறவர்களாக இருக்கத் தீர்மானிப்போம். ஒரு புதிய ஆண்டு, இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு நல்ல நேரமாகும்.

அடுத்து, இன்று நம் வளங்கள் என்று நாம் நினைக்கிறவற்றின் அடிப்படையில் நம் கனவுகளை வரம்புக்குட்படுத்தவேண்டாம். திட்டம் மதிப்பு மிக்கது என்றால், அது மக்களின் பேரார்வத்தைக் கிளறிவிடும் என்றால், அதற்கு வந்து குவியப்போகும் வளங்களையும், அதை நடத்துவதற்காகத் திறக்கப்போகும் கதவுகளையும் கண்டு நீங்கள் வியந்துபோவீர்கள். இதை உறுதிப்படுத்துகிற பல கதைகள் உள்ளன. ஒவ்வொரு சங்கமும் இதில் தங்களுடைய கதைகளைச் சேர்க்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

மூன்றாவதாக, ஒரே ஆண்டில் தொடங்கி முடிக்கக்கூடிய திட்டங்களில்மட்டும் நாம் கவனம் செலுத்தக்கூடாது. இதுவும் தொலைநோக்கில் சிந்திக்கிற நம் திறனைக் கட்டுப்படுத்தும். ரோட்டரியின் வலிமை அதன் தொடர்ச்சியில் உள்ளது. அதை உறுதிப்படுத்துவதற்கு நம்மால் இயன்ற அனைத்தையும் செய்வோம்.

நாம் ஒன்றாகச் சேர்ந்து, ரோட்டரி அறக்கட்டளையின் வழியாக நீடித்த தாக்கத்தை உருவாக்குவோம்.

**A S வெங்கடேஷ்**
TRF அறங்காவலர்

# அழைப்பிற்கு செவிசாய்த்தல்

டயனா ஷோபெர்க்

*தாய்நாட்டில், சொந்த மண்ணால் வளப்படுத்தப்பட்ட தலைவர் யின்கா, நைஜீரியாவின் ஆற்றல் மிக்க உணர்வை ரோட்டரி தலைமை பொறுப்பிற்கு தன்னுடன் கொண்டு செல்கிறார்.*



RI தலைவர் ஓலாயின்கா பாபலோலா மகள் அமினத் உடன்.

ஒலயின்கா H பாபலோலா முன்வரிசைக்கு வருகிறார். இதுதான் அது. இது தான் அந்த தருணம். யின்கா என்று அழைக்கப்படும் இவர், 2026–27-ம் ஆண்டுக்கான RI தலைவர். நைஜீரியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது தலைவர், ஒட்டுமொத்த ஆப்பிரிக்காவுக்கும் இரண்டாவது தலைவர். ரோட்டரி உலகில் தனது முதல் அறிமுகத்தை தொடங்கும் தருணம் இது.

இது ரோட்டரி சர்வதேச மாநாட்டின் முதல்நாள் காலை. ஒவ்வொரு குளிர்காலத்திலும் புளோரிடாவின் ஆர்லாண்டோவில் நடைபெறும், பதவியேற்கவிருக்கும் மாவட்ட ஆளுநர்களுக்கான பயிற்சி நிகழ்வாகும். அமர்வின் முக்கிய நிகழ்வான தனது உரைக்காக பாபலோலா, ஒலிபெருக்கி முன் தயாராக காத்திருக்கிறார். ஆனால், அதற்கு முன்னதாக ரோட்டரியின் நிகழ்வுகளில் ஒரு பாரம்பரியமான தொடக்க கொடியேற்ற நிகழ்வில் பங்கேற்க அவர் தயாராகிறார்.

2025–26-ன் RI தலைவர், இத்தாலியின் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ மற்றும் தனக்குப் பின் பதவியேற்க இருக்கும் அமெரிக்காவின் லாரி லுன்ஃபோர்டுடன் அவர் இணைந்து கொள்கிறார். மூவரும் தங்கள்நாட்டு கொடியை ஏந்தியபடி மேடையில் நடந்து வருகின்றனர். ஒருவர் அமெரிக்க தேசியகீதத்தை உரத்த குரலில் பாடுகிறார். அடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட இத்தாலிய மாவட்ட ஆளுநர்கள், அரெஸ்ஸோவுடன் இணைந்து “இல் கான்டோ டெக்லி இடாலினி” என்னும் பாடலைப் பாடுகின்றனர்.

இறுதியாக பாபலோலாவின் முறை வருகிறது. அவர் முன்னே வந்து நிமிர்ந்து நிற்கிறார். அவரது பளபளப்பான மற்றும் வெள்ளைக் கோடுகள் போட்ட தொப்பி, அவரது நாட்டின் கொடியின் நிறத்துக்கு பொருத்தமாக இருக்கிறது. நைஜீரிய கனடியரான பீஸ் உடோகா அனிரா, மேடையில் ஏறி நைஜீரியாவின் தேசிய கீதத்தைப் பாடுகிறார். பாபலோலாவும் உடன் பாடுகிறார். அப்போது அவரது கன்னத்தில் கண்ணீர்த் துளிகள் வழிந்தோடுகின்றன.



"நைஜீரியாவைப் பற்றி பல மோசமான கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஆனால், இன்று நான் சொல்லப்போகும் கதை அப்படிப் பட்டது அல்ல" என்று அவர் உணர்ச்சி வசப்பட்டு தழுதழுத்த குரலில் கூறுகிறார். கண்ணாடியை கழற்றி, கண்களை துடைத்துக்கொள்கிறார். "இந்த நாட்டின் கொடி, ஒரு நல்ல நோக்கத்திற்காக, 100-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த நல்லெண்ணம் கொண்ட நல்ல மனிதர்களால் ஏற்றப்படுகிறது".

ஜூலை 1-ம் தேதி முதல் பாபலோலா அவர்களை வழி நடத்துவார்.

பாபலோலாவின் தலைமைப் பயணம் சிறுவயதிலேயே தொடங்கியது. ஆறு குழந்தைகளில் மூத்தவரான அவர், நைஜீரியாவின் மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான இபாடனில் பிறந்தார். அவரது தாய் ஒரு ஆசிரியை, தந்தை ஒரு கணக்காளர். "இந்த உலகில், நீங்கள் உங்கள் வீட்டில் முதல் குழந்தையாக இருந்தால், அதற்கு சில தலைமைப் பொறுப்புகள் உண்டு" என்கிறார் அவர்.

அவர், நைஜீரியாவின் வடக்கில் சவானா வனப்பகுதியில், சஹாராவின் விளிம்பில் உள்ள பௌச்சி நகரில் உள்ள பெடரல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் கல்லூரி படிப்பை மேற்கொண்டார். அப்போது பள்ளியின் பொதுமக்கள் தொடர்பு இயக்குநரும் பௌச்சி ரோட்டரி சங்க உறுப்பினருமானவர், அவர் இரண்டாம் ஆண்டு படிக்கும்போது ஒரு ரோட்ராக்ட் சங்கத்தை உருவாக்க உதவுமாறு கேட்டுக்கொண்டார். பாபலோலா உடனடியாக ஒரு ரோட்ராக்ட் சங்கத்தை நிறுவி அதன் பட்டயத் தலைவரானார்.

மின்னணு பொறியியலில் பட்டம் பெற்ற பிறகு, பாபலோலா, தேசிய இளைஞர் சேவைப் படையில் ஓராண்டு பணியாற்றினார். இன மற்றும் மதப்பிளவுகளைக் குறைக்கும் நோக்கில் இந்த இளைஞர் படையினர் தங்கள் சொந்த மாநிலங்கள் தவிர பிற மாநிலங்களிலும் சேவை செய்கின்றனர். பாபலோலா, ரிவர்ஸ் மாநிலத்தில் உள்ள போர்ட் ஹர்கோர்ட்டுக்குப் பணியமர்த்தப்பட்டார். அங்கு பிரெஞ்சு டயர் தயாரிப்பு நிறுவனமான மிச்செலின், தனது உபகரணங்களை மறுசீரமைக்க மின்னணு பொறியியல் பட்டதாரிகளிடம் உதவி கோரியிருந்தது.

போர்ட் ஹர்கோர்ட்டுக்கு வருவதற்கு முன்பு பாபலோலா புதிதாக அணி திரட்டப்பட்ட முகாமில் சேர்ந்தார். அவர்கள் அனைவரும் பல்கலைக்கழக படிப்பை முடித்து விட்டு வந்தவர்கள் என்பதால், அவர்களில் ரோட்ராக்டர்கள் இருக்கக் கூடும் என அவர் எண்ணினார். ஒரு அறிவிப்பை வெளியிட்டு அனைவரையும் ஒன்று திரட்டினார். "முகாமில் இருந்தபோது நாங்கள் ஒரு சிறிய ரோட்ராக்ட் நட்புறவைத் தொடங்கினோம்" என்று அவர் நினைவுகூர்ந்தார்.

பின்னர் போர்ட் ஹர்கோர்ட்டில், மிச்செலின் நிறுவனம் அமைந்திருந்த நகரத்தின் ஒரு தொழில்துறை பகுதியான டிரான்ஸ் அமாடி ரோட்ராக்ட் சங்கத்தில் பாபலோலா சேர்ந்தார். இதர ரோட்ராக்ட் உறுப்பினர்களுடன் சேர்ந்து போர்ட் ஹர்கோர்ட் ரோட்டரி சங்கத்தின் ஆதரவுடன் இயங்கிவந்த மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான மையத்தில் சேவை செய்தார்.

ஓராண்டு கட்டாயச் சேவை முடிந்ததும், ஷெல் எண்ணெய் நிறுவனத்தின் நைஜீரியக் கிளையில் பாபலோலாவுக்கு வேலை கிடைத்தது. 20 வயதில் அவர் ரோட்ராக்டை விட்டு வேறு சிந்தனைக்கு மாறினார். அந்த வயதில் அவருக்கு மற்றவர்களை விட எளிதில் வேலையும் அதிக வருமானமும் கிடைத்தது. அடுத்த கட்டமாக அவர் ரோட்டரியில் சேர நினைத்தார். அங்கு மூத்த உறுப்பினர்கள் மூலம் அதிக உத்வேகம் பெற முடியும் என அவர் நினைத்தார். "நான் மற்ற விஷயங்களைச் செய்ய விரும்பக்கூடிய ஓர் இடத்தில் இருக்க விரும்பினேன்" என்கிறார் அவர்.

ஆனால், அவர் டிரான்ஸ் அமாடி ரோட்டரி சங்கக் கூட்டத்திற்கு சென்று ரோட்டரியில் சேர விரும்புவதாக கூறியபோது, சங்க உறுப்பினர்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஒரு ரோட்டேரியன் கோபத்துடன், "இந்த இளைஞனுக்கு என்ன ஆனது? இப்படித்தான் ரோட்டரியில் சேர முடியும் என்று நினைக்கிறாயா?



*பாபலோலா தனது சங்கமான RC டிரான்ஸ் அமாடி (RC Trans Amadi) உறுப்பினர்களுடன்.*





*மேலே: பாபலோலா மற்றும் RI இயக்குனர் KP நாகேஷ் DGE-களுடன் நடனமாடுகிறார்கள்.*

*வலதுபுறம்: நைஜீரிய ரோட்டராக்டர்களுடன். ரோட்டராக்ட் (Rotaract) மூலம் தனது ரோட்டரி பயணத்தைத் தொடங்கிய முதல் ரோட்டரி இன்டர்நேஷனல் (RI) தலைவர் பாபலோலா ஆவார்.*

(right) andrew Esiebo







சர்வதேச மாநாட்டின் கலாச்சார நிகழ்வில் தனது மனைவி பிரெசி பாபலோலாவுடன் (நடுவில்).



“

*இந்த நாட்டின் கொடி, ஒரு நல்ல நோக்கத்திற்காக, 100-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த நல்லெண்ணம் கொண்ட நல்ல மனிதர்களால் ஏற்றப்படுகிறது.*





*சங்கக் கூட்டத்தில் பேசுகையில்.*



அவர் எப்போதும் இப்படிச் சொல்வார்: “உங்களின் மிகச்சிறந்த செயல்பாட்டைவிட இன்னும் சிறப்பாகச் செயல்படுங்கள். நீங்கள் மற்ற சங்கங்களுடன் போட்டியிட வேண்டும் என்று நான் விரும்பவில்லை; மாறாக, உங்களோடு நீங்களே போட்டியிட வேண்டும் என்றே விரும்புகிறேன்.

டுக்வே சுக்வு (Ndukwe Chukwu)
RC ஓவெரி சென்ட்ரல், நைஜீரியா



*பாபலோலா மற்றும் IPPC தலைவர் மைக்கேல் மெக்கவர்ன் போலியோ குறித்து DGE-க்களுடன் பேசுகின்றனர்.*





மகன் மாலிக்குடன்.



நைஜீரியாவில் ஒரு போலியோ தடுப்புத் திட்டத்தில்

ஆண்ட்ரூ எசியேபோ

என்று கேட்டார். ஆனால், மற்றொரு ரோட்டேரியன் அவருக்கு ஆதரவாகப் பேசினார். பின்னர் அவரே வழிகாட்டியாகவும் இருந்தார். “அந்த மனிதர் மட்டும் எனக்கு ஆதரவாக பேசியிருக்காவிட்டால், நான் இப்போது உங்கள் முன்னிலையில் நின்றுகொண்டிருக்க மாட்டேன். நான் அந்த இடத்தை விட்டு வெளியேறி, ரோட்டரியில் சேருவது பற்றி யோசித்திருக்க மாட்டேன். அத்துடன் எல்லாம் முடிந்து போயிருக்கும்” என்று பாபலோலா கூறினார்.

ரோட்டரியில், ஷெல் நைஜீரியாவின் தலைமைச் செயல் பாட்டு அதிகாரி உள்ளிட்ட தொழில் வழிகாட்டிகள் பலரைக் கண்டறிந்தார். உங்களுக்கு அனுப்பப்படும் கடிதத்தில் சிலரின் கையொப்பத்தை பார்க்கும்போது அது இரண்டு விஷயங்களை மட்டுமே குறிக்கும். நீங்கள் பதவி உயர்வு பெற்றிருக்கிறீர்கள் அல்லது வேலையிலிருந்து நீக்கப்பட்டீர்கள் என்ற செய்திதான் அது. தந்தை இறந்தபோது பாபலோலாவை தனது வளையத்துக்குள் கொண்டுவந்தார் நைஜீரிய எண்ணெய் நிறுவனத்தின் மற்றொரு நிர்வாகி. அப்படிப்பட்ட நபராக இருந்தார் பாபலோலா.

ஆனால், அவர், வளர்வதற்கு ஒரு இடமாக அதைக் கண்டார். “27 வயதில் உங்கள் கையில் கொஞ்சம் பணம் இருக்கும். திருமணமாகாதவர், இளைஞர் என்கிறபோது உங்கள் மனதில் பல்வேறு எண்ணங்கள் தோன்றும். ஆனால், நான் ரோட்டரியில் இருந்ததால், அதுபோன்ற எண்ணம் ஏதும் தோன்றவில்லை. மக்கள் வரிவிதிப்பு பற்றி பேசுகிறார்கள். அவர்கள் வரவு-செலவு திட்டத்தைப் பற்றி பேசுகிறார்கள். அவர்கள் நிலம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளைப் பற்றி பேசுகிறார்கள். யாரோ ஒருவர் உங்கள் பணத்தை நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார்”.

ரோட்டரி மூலமாகத்தான் பாபலோலா, தனது மனைவி ப்ரேசியை சந்தித்தார். போர்ட் ஹார்கோர்டில் உள்ள தனது பல்கலைக்கழகத்தில் ரோட்ராக்ட் சங்கத்தின் முதல் பெண் தலைவராக அவர் இருந்தார். குழந்தைகள் சிறியவர்களாக இருந்த போது அவர், சிறிது காலம் ரோட்டரியிலிருந்து விலகி 2018-ம் ஆண்டு மீண்டும் ரோட்டரியில் சேர்ந்தார். இன்று அவர் ஒரு வழக்குரைஞராகவும், போர்ட் ஹார்கோர்ட் பாஸ்போர்ட் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராகவும் இருக்கிறார்.

உறுப்பினர்களின் கதைகள் மாறுபட்டிருக்கலாம். ஆனால், ரோட்டரி பலவழிகளில் நம்மிடம் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. அது தொழில், வர்த்தகம் அல்லது குடும்ப வாழ்க்கை என எதுவாகவும் இருக்கலாம் என்கிறார் பாபலோலா. “நீங்கள் எந்த ரோட்டேரியனிடம் பேசினாலும், அவர்களிடம் ஒரு கதை இருக்கும். அதுதான் அவர்களைத் தொடர்ந்து இருக்க வைக்கிறது என்று நான் நினைக்கிறேன்” என்கிறார்.

நண்பகல் நேரம். தேர்ந்தெடுக்கப் பட்ட சுமார் 12 மாவட்ட ஆளுநர்கள் ஒரு மாநாட்டு மேஜையைச் சுற்றி அமர்ந்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் வர்த்தகம் தொடர்பான விவரங்களை பரிமாறிக்கொண்டு பாபலோலாவுக்காக காத்திருக்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆளுநர்கள், பெரும்பாலும் போலியோவை ஒழிக்க போராடிவரும் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஆப்பிரிக்காவின் நைஜீரியா உள்ளிட்ட சில மாவட்டங்களில் போலியோவின் தீவிர தாக்குதல் இன்னமும் உள்ளது. எனினும் அவை கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

பாபலோலா உள்ள நுழைந்ததும், மேஜையை சுற்றி அமர்ந்திருந்த அனைவரிடமும் கைகுலுக்குகிறார். இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கூட்டம். இங்கு அவர், தேர்ந்தெடுக்கப் பட்ட ஆளுநர்களை ஒன்றுதிரட்டி, போலியோ விஷயத்தில் தாம் எவ்வளவு தீவிரமாக இருக்கிறோம் என்பதைக் காட்ட விரும்புகிறார்.

கூட்டம் தொடங்கியதும் அவர் மெல்லிய குரலில் பேசுகிறார். அதாவது அவரது பேச்சை ஒருவர் கூர்ந்து கவனிக்க வேண்டும். அனைவரின் முழு கவனத்தையும் அவர் பெற்றவுடன், அவரது குரல் வலுவாக மாறுகிறது. அவர்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துமாறு கேட்டு மேஜையை தட்டியவாறே பேசுகிறார்.

"கற்பனை செய்து பாருங்கள்" என்று பாபலோலா அவர்களிடம் கூறுகிறார். ரோட்டரி மாநாட்டில், போலியோ இல்லாத நிலையை அடைந்துவிட்டோம் என்று அறிவிக்கிறார்கள். அதற்கு இந்த மாவட்ட ஆளுநர்களின் உழைப்புதான் காரணம். இந்த குழுதான் இந்த நிலைக்கு கொண்டுவந்தது என்று சொல்கிறார்கள்".

அதன் பிறகு அந்த அறை உற்சாகத்தால் பொங்கி வழிகிறது. " அவர் எங்கள் தலைவராக இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்" என்கிறார் மாவட்டம் 3271-ன் (பாகிஸ்தான்) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுநர் ஷாஸாத் சபீர். களத்தில் பிரச்னை என்ன என்பது அவருக்குத் தெரியும். அர்ப்பணிப்பு என்றால் என்னவென்று அவருக்குத் தெரியும். நமக்கு என்ன தேவை என்று அவருக்குத் தெரியும்.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்ட போலியோபிளஸ் சர்வதேச குழுவின் தலைவர் மைக்கேல் கே.மெக்கவர்ன்,

# பிப்ரவரி மாதத்தின் ஒரு செவ்வாய்க்கிழமையன்று

*நைஜீரியாவின் பரபரப்பான வர்த்தக மையமான போர்ட் ஹார்கோர்ட்டில், டிரான்ஸ் அமாடி ரோட்டரி சங்கம், தனது வழக்கமான வாராந்திர கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. பார்வையாளர்கள் பேச்சாளர்களின் உரையை கேட்டுக் கொண்டிருந்தபோது, தாமதமாக வந்த ஒரு உறுப்பினர் திடீரென உள்ளே நுழைந்தார். அவர்தான் ஓலாயின்கா பாபலோலா. அனைவரும் திரும்பி அவரை பார்த்தனர். திடீரென ஏற்பட்ட மகிழ்ச்சியில் 70 உறுப்பினர்கள் எழுந்து நின்று பாடல்களைப் பாடி, கைதட்டி ஆரவாரம் செய்தனர். இதைத்தான் நண்பர்களும் அபிமானிகளும் "யின்கா விளைவு" என்று அழைக்கிறார்கள். இது உறுப்பினர்கள் சேர்க்கை, ரோட்டரி அறக்கட்டளைக்கான பங்களிப்புகள் மற்றும் பலவற்றை ஊக்குவிக்கிறது.*

*"யின்கா ஒரு அறைக்குள் நுழையும்போது அவர் ஒரு காந்தத்தைப் போல ஈர்க்கப்படுகிறார்" என்கின்றனர் 1999-ம் ஆண்டு முதல் அவரை நன்கு அறிந்த இபிம் செமினிடாரி.*




*நைஜீரியா போலியோபிளஸ் (PolioPlus) குழுவின் தலைவர் ஜோசுவா ஹசனுடன் போலியோ தடுப்பூசி மையத்தில்.*

# யின்கா விளைவு




*குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி வழங்கப்படும் மருத்துவ மையத்தில்.*

*ரோட்டரியின் புதிய தலைவர் ஆப்பிரிக்கா முழுவதும் உள்ள உறுப்பினர்களை உற்சாகமூட்டி வருகிறார். அவர்களின் அந்த உற்சாகத்தை நேரில் காண நாங்கள் சென்றிருந்தோம்.*

*புகைப்படங்கள்: ஆண்ட்ரூ எசியெபோ*

சபீரின் கருத்துக்களை ஆமோதித்தார். “ஒரு நாட்டில் போலியோவை ஒழிக்க எப்படி செயலாற்ற வேண்டும் என்கிற பின்னணி கொண்ட தலைவர், ரோட்டேரியன்களுடன் நெருங்கிப் பணியாற்றுவது, அரசு மற்றும் இதர நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவது ஆகியவற்றில் இவரைவிட ஒரு சிறந்த தலைவர் நமக்கு கிடைத்திருக்க முடியாது என்று மெக்கவர்ன் கூறினார்.

2012-ம் ஆண்டில் நைஜீரியாவில் போலியோ வைரஸ் தாக்குதல் மிகத் தீவிரமாக இருந்தது. போலியோ பாதிப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தது. குறிப்பாக நாட்டின் வடகிழக்கு பகுதியில், அதாவது போகோஹாரம் தீவிரவாத குழுக்கள் இருப்பிடத்தில் நிலைமை மோசமாக இருந்தது. 2011–12-ல் மாவட்ட ஆளுநராக இருந்த பாபலோலா, போலியோ ஒழிப்பு முயற்சிக்கான ஒரு கூட்டத்தில் பங்கேற்க அவசரமாக அழைக்கப்பட்டார். அங்கு கூடியிருந்த முன்னாள் மற்றும் இன்னாள் மாவட்ட ஆளுநர்கள் ஒவ்வொருவரும் நைஜீரியாவின் 36 மாநிலங்களில் ஒன்றைத் தத்தெடுத்து, அங்குள்ள உள்ளூர் அரசாங்கத்தினர் மற்றும் கூட்டாளர்களுடன் இணைந்து தடுப்பூசி திட்டம் சீராக நடைபெறுவதை உறுதிசெய்ய வேண்டும் என்று ரோட்டரித் தலைவர்கள் விரும்பினர். அனைவரும் கைகள் உயர்த்தினர் என்று பாபலோலா நினைவுகூர்ந்தார். ஆனால், வடகிழக்குப் பகுதிக்குச் செல்ல யாரும் துணியவில்லை.

பாபலோலா அந்தப் பகுதியில்தான் கல்லூரிப் படிப்பை முடித்திருந்தார். அங்குதான் அவர், ரோட்டரியில் தனது பயணத்தைத் தொடங்கினார். அது அவருக்கு நன்கு பரிச்சயமான ஓர் இடம். எனவே அவர் கையை உயர்த்தினார். “ஆனால், இவனுக்கு ஆர்வக்கோளாறு என்ற வகையில் மக்கள் தன்னை திரும்பிப் பார்த்தாக” அவர் நினைவுகூர்ந்தார்.

2011–15-ல் வடகிழக்கு மாநிலமான போர்னோவின் சுகாதார ஆணையராக இருந்த சல்மா இப்ராஹிம் அனஸ், ஒருமுறை மாநிலத் தலைநகரான மைடுகுரியில் உள்ள தனது அலுவலகத்தில் பாபலோலா தன்னை சந்தித்ததை நினைவுகூர்கிறார். பலநூறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு தொலைதூர சமூகத்திற்கு தடுப்பூசி திட்டத்தை தொடங்கப்போவதாக அவர், பாபலோலாவிடம் கூறினார். அப்போது ஊரடங்கு அமலில் இருந்தது. உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால் சிவில் சமூக கூட்டாளிகள் பயணம் செய்ய வில்லை. ஆனால், தற்போது நைஜீரிய அதிபரின் சுகாதார சிறப்பு ஆலோசகராக இருக்கும் அனஸ், அடுத்த நாள், அதே தொலைதூர சமூகத்தினருக்கு தடுப்பூசிகளை விநியோகித்தபோது அதை தம்மால் நம்பமுடியவில்லை என்கிறார். “எனக்கு பேச்சே வரவில்லை” என்று அவர் நினைவுகூர்ந்தார். “இது அர்ப்பணிப்பு, உறுதிப்பாடு மற்றும் நம்பிக்கையின் மிக உயர்ந்த நிலை. போகோஹாரம் தீவிரவாதிகளால் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற போதிலும் தொலைதூர சமூகங்களில் உள்ள இந்த குழந்தைகளுக்காக அவர் அனைத்தையும் தியாகம் செய்ய தயாராக இருந்தார்.


*அவரது தாயார் ரியானட் பாபலோலாவுடன்*


*பாபலோலா பயின்ற உயர்நிலைப் பள்ளியில்.*

பத்தாண்டுக்குள், 2020-ல், ரோட்டரி உறுப்பினர்களின் பெரு முயற்சிகளின் காரணமாக உலக சுகாதார அமைப்பு நைஜீரியாவையும், அதனுடன் முழு ஆப்பிரிக்க பிராந்தியத்தையும் தீவிர போலியோ இல்லாத நாடாகச் சான்றளித்தது.

மாவட்ட ஆளுநராக இருந்த பாபலோலா, விரைவிலேயே படிப் படியாக ரோட்டரியில் உயர் நிலையை அடைந்தார். “அவர் ஒரு வளர்ந்து வரும் திறமையாளர்” என்பதை அப்போதே என்னால் பார்க்க முடிந்தது” என்கிறார் பாபலோலா ஆளுநராக இருந்த போது, தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநராக இருந்தபோது அவரை சந்தித்த ஸ்டைல். அவர், தற்போது பாபலோலாவின் தலைமை உதவியாளராகப் பணியாற்றுகிறார். “அவரால் நான் மிகவும் ஈர்க்கப் பட்டேன். அவரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டும் என்று அப்போது இருந்த RI தலைவர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு ஒரு குறிப்பு எழுதினேன்” என்கிறார்.

2017-ம் ஆண்டில் பாபலோலா, RI இயக்குநராகப் பணியாற்ற தயாராகிக் கொண்டிருந்தார். அவரது பதவிக்காலம், உகாண்டாவைச் சேர்ந்த சாம் எஃப் ஓவோரி, ரோட்டரித் தலைவராகப் பணியாற்ற வேண்டிய காலத்துடன் ஒதுப்போயிருந்தது. ஆனால், நினைத்துப் பார்க்க முடியாத சம்பவம் நடந்தது. பதவியேற்பதற்கு முன்னதாகவே ஓவோரி, அறுவைச் சிகிச்சையின் போது ஏற்பட்ட சிக்கல்களால் இறந்து விட்டார்.

அதை நம்ப மறுத்த பாபலோலா, ஓவோரியை தொடர்புகொள்ள முயன்றபோது, அவரது மனைவி ஓவோரியின் மறைவை உறுதி செய்தார். அப்போது ஆப்பிரிக்காவில் உயிருடன் இருந்த ரோட்டரியின் முன்னாள் தலைவர் ஜோனாதன் மஜியாக்பே மற்றும் முன்னாள் இயக்குநர் சாம் ஒகுடிஸெட்டோ ஆகியோரை அழைத்து என்ன செய்வதென்று கேட்டார். இருவரும் பாபலோலாவிடம் பொறுப்பை ஒப்படைத்தனர். அவர் அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தபோது, அடுத்து என்ன என்று கேட்டு உகாண்டா ரோட்டேரியன்களிடமிருந்து


*அவரது வழிகாட்டியான PDG கேப்ரியல் டோபியுடன்.*

அவருக்கு ஒரு அழைப்பு வந்தது. அப்போது எனக்கு ஒருவிஷயம் மனதில் தோன்றியது. “நான் எனக்குள் சொல்லிக் கொண்டேன். யின்கா, உனது பங்கில் மாற்றம் வந்துவிட்டது. இந்தக் கண்டம் முழுவதும் உன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறது. நீ பொறுப்பை ஏற்க வேண்டும்”.

ரோட்டரி வாரியத்தில் தங்கள் பணிக் காலத்தில் எப்படிச் செயல்படுவது என்பது குறித்து பாபலோலாவும், ஓவோரியும் பலமுறை விவாதித்திருந்தனர். இப்போது அவற்றைச் செயல்படுத்தும் பொறுப்பு பாபலோலாவின் மீது விழுந்தது. “அது ஒன்றும் எளிதான காலம் அல்ல” என்கிறார் அவர். “ஆனால், அது ஒரு தீவிரமான வளர்ச்சிக்கான தருணம்”.

அந்த திட்டங்களில் ஒன்று கண்டம் முழுவதும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதாகும். இது பாபலோலா சங்கத்தின் தலைவராக, மாவட்ட ஆளுநராக இருந்தபோது சிறந்து விளங்கிய துறையாகும். ஓவோரி மறைவின்போது ஆப்பிரிக்காவில் 29,000 ரோட்டேரி யன்கள் உறுப்பினர்களாக இருந்தனர். இப்போது 48,000 உறுப்பினர்கள் உள்ளனர்.

“யின்காவுக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கும் இடையில் ஏதோ ஒன்று உள்ளது” என்கிறார் விர்ஜீனியா மேஜர், போர்ட் ஹர்கோர்ட்டைச் சேர்ந்த முன்னாள் மாவட்ட ஆளுநர் மற்றும் பாபலோலா வழிகாட்டிய பலரில் ஒருவர். “உறுப்பினர்கள் எண்ணிக்கை விஷயத்தில் உங்களை அவர் ஒரு பைத்தியமாகவே மாற்றிவிடுவார். அவர் உங்களுக்கு புள்ளி விவரங்களைக் கொடுப்பார். அதைவைத்து நாம் செயல்பட வேண்டும். அது நம்மால் முடியும். நான் அவரை ஆப்பிரிக்காவின் உறுப்பினர் வளர்ச்சியின் தந்தை என்று அழைக்கிறேன்”.

ஆவர் ரோட்டரியின் விழுமியங்களுக்கு உண்மையாக, பயணம் செய்யும்போது அவர் அமைதியை கட்டியெழுப்புவார். தலைப்புச் செய்திகளுக்கு அப்பால் அவர் ஒரு நாட்டின் மக்களிடையே புரிதலை வளர்ப்பார். அவரே ரோட்டரி உலகில் ஒரு நீடித்த தாக்கத்தை உருவாக்குவார்.

படங்கள்: மோனிகா லோஜின்ஸ்கா

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

©ரோட்டரி

Rotary PEOPLE OF ACTION

# கிராமப்புறப் பெண்களுக்கு தையல் திறன் பயிற்சி

ரஷீதா பகத்

கிராமப்புற இளம் பெண்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே முன்னேற்றிக்கொள்ளும் வகையில் தொழில்திறன் கற்றுத் தரும் நோக்கில், RI மாவட்டம் 3030-ன் அகோலா ரோட்டரி சங்கம் ஒரு சிறப்பான முயற்சியை தொடங்கியுள்ளது. பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு முடித்த பிறகு மேல்படிப்பு அல்லது வேலை வாய்ப்பு இல்லாமல் வீட்டிலேயே இருக்க நேரிடும் பெண்களுக்கு தையல் மற்றும் ஆடைத் தயாரிப்பு பயிற்சி வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வரும் சங்கத்தின் முன்னாள் தலைவர் ராதேஷ்யாம் மோடி கூறுகையில், அகோலாவுக்கு அருகிலுள்ள கெய்காவ் கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்தப் பயிற்சி மையத்தில் தற்போது 40-க்கும் மேற்பட்ட பெண்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். சங்கத்தின் சார்பில் தையல் இயந்திரங்கள், மின்சார தையல் இயந்திரங்கள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனுபவமிக்க பயிற்சியாளர்களின் வழிகாட்டுதலுடன் பெண்கள் தையல், ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடைத் தயாரிப்பு நுணுக்கங்களை கற்றுக்கொண்டு வருகின்றனர்.

“இந்தப் பயிற்சியின் மூலம் அவர்கள் விரைவில் சுயதொழில் செய்து வருமானம் ஈட்டும் நிலைக்கு வருவார்கள். தங்களது குடும்பத்திற்கும் ஆதரவாக இருப்பார்கள்,” என்கிறார் மோடி.

இந்தத் திட்டத்திற்காக சுமார் ரூ.1.1 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. அதில் 10 தையல் இயந்திரங்கள் பயிற்சி மையத்தில் நிறுவப்பட்டுள்ளன.



*கைகான் கிராமத்தில் RC அகோலா அமைத்துள்ள பயிற்சி மையத்தில் ஒரு பெண் தையல் கலையைக் கற்றுக்கொள்கிறார்.*


BALANCE
ART B-021
Challenge 80
T-200

இயந்திரங்கள் வாங்குவதற்கும் பயிற்சியாளர்களின் ஊதியத்திற்குமான நிதியை சங்க உறுப்பினர்கள் தங்களது பங்களிப்பின் மூலம் திரட்டியுள்ளனர்.

தினமும் உற்சாகமாக பயிற்சிக்கு வரும் இந்த 40 பெண்கள் கெய்காவ் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இந்த கிராமம் தேர்வு செய்யப்பட்டதற்கான காரணத்தை விளக்கும் மோடி, "அகோலாவிலிருந்து வெறும் 15 கிலோமீட்டர் தொலைவில் இருப்பதாலும், நல்ல சாலை வசதி உள்ளதாலும் சங்க உறுப்பினர்கள் அடிக்கடி வந்து திட்டத்தை கண்காணிக்க வசதியாக உள்ளது," என்கிறார்.

மேலும், இந்த கிராமத்துடன் ரோட்டரிக்கு ஏற்கெனவே நெருங்கிய தொடர்பு உள்ளது. அங்குள்ள பள்ளியில் கணினி ஆய்வகம் அமைத்தல், கணினிகள் வழங்குதல், நூலகம் உருவாக்குதல் போன்ற பல கல்வித் திட்டங்களை ரோட்டரி செயல்படுத்தியிருப்பதால், கிராம மக்கள் ரோட்டரியின் சேவையை நன்கு அறிந்துள்ளனர்.

சங்கத் தலைவர் நர்யோசங் டார்போரேவாலா கூறுகையில், இந்தத் திட்டத்திற்காக பணியமர்த்தப்பட்டுள்ள



*செய்தித்தாள் வார்ப்புருக்களின் உதவியுடன் வெட்டும் கலையைக் கற்றுக்கொள்ளும் பெண்கள்.*



*தையல் பயிற்சி மையத்தில் உள்ள பயிற்சியாளர்கள்.*

இரண்டு தையல் பயிற்சியாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.8,000 மற்றும் ரூ.5,000 ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த முயற்சியின் முக்கிய நோக்கம், கிராமப்புற இளம் பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை உருவாக்குவதாகும்.

“பள்ளிப் படிப்பை முடித்த பிறகு பல பெண்களுக்கு வேறு வாய்ப்புகள் கிடைப்பதில்லை. வீட்டுப் பணிகள், தம்பி தங்கைகளை கவனித்தல் போன்ற பொறுப்புகளிலேயே அவர்கள் நேரத்தை செலவிடுகிறார்கள். வேலை வாய்ப்புகளும் இல்லை; வேலைக்குத் தேவையான திறன்களும் இல்லை. அதனால் தையல் கற்றுக்கொடுத்தால் அவர்கள் ஆடைகள் தைத்து விற்று வருமானம் ஈட்ட முடியும் என்று நினைத்தோம்,” என்கிறார் அவர்.

இந்தப் பயிற்சி மையத்திற்கான இடம் தேடுவதிலும் சிரமம் ஏற்படவில்லை. பயிற்சியாளர்களில் ஒருவரின் சகோதரர் கெய்காவ் கிராமத்தில் கட்டியிருந்த கடை வளாகத்தில் சில காலியிடங்கள் இருந்தன. ரோட்டரியின் சமூக சேவைகளை அறிந்திருந்ததால், அந்த இடத்தை தையல் பயிற்சி மையமாக பயன்படுத்த அனுமதித்தார். இந்தத் திட்டம் வெற்றி பெற்றால் கிராமப் பெண்களுக்கே அதிக நன்மை கிடைக்கும் என்பதை மக்கள் புரிந்துகொண்டிருந்தனர்.

தொடக்கத்தில் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்ட மாணவிகளுக்கு தினமும் இரண்டு மணி நேரம் மட்டுமே பயிற்சி வழங்கப்பட்டது. ஆனால் அவர்களின் ஆர்வமும், தேவையும் அதிகரித்ததைத் தொடர்ந்து பயிற்சி நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை நீட்டிக்கப்பட்டது.

அடிப்படை தையல் திறன்களைக் கற்றுக்கொண்ட பிறகு, முதல் குழுவில் இருந்த பெண்கள் ரோட்டரியின் “பாலித்தீன் பைகளுக்கு பதிலாக துணிப் பைகள்” திட்டத்திற்காக 400 துணிப் பைகளைத் தயாரித்தனர். ஒவ்வொரு பைக்கும் ரூ.10 தையல் கூலியாக வழங்கப்பட்டது. அனைத்து பைகளையும் சங்க உறுப்பினர்களே வாங்கினர்.

அதன்பின் அகோலாவில் உள்ள ஒரு வங்கி 1,000 துணிப்



*ஒரு பெண், அந்த மையத்தில் தான் வடிவமைத்த ஆடையை அணிந்து காட்சிப்படுத்துகிறார்.*



பைகளுக்கான ஆர்டரை வழங்கியது. மேலும் 300 பைகளுக்கான கூடுதல் ஆர்டரும் கிடைத்தது. இதன் மூலம் பெண்கள் மொத்தமாக ரூ.13,000 வருமானம் ஈட்டினர்.

"இது அவர்களின் வகுப்பு நேரத்துக்கு வெளியே செய்த வேலை. இது ஒரு தொடக்கம் மட்டுமே. இவர்களின் எதிர்காலம் மிகவும் பிரகாசமாக இருக்கும்," என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் மோடி.

இந்த தையல் பயிற்சி முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. ஆரம்பத்தில் பயிற்சிக்குத் தேவையான துணிகளை ரோட்டரியே வழங்கியது. ஆனால் பின்னர் பெண்களே தங்கள் வீடுகளில் இருந்த பழைய சேலைகளை கொண்டு வந்து அவற்றை அழகான உடைகளாக மாற்றத் தொடங்கினர். தற்போது அவர்கள் தயாரித்த ஆடைகளின் நல்ல தொகுப்பு உருவாகியுள்ளது.

இன்னும் சில மாதங்களில் அகோலாவில் ஒரு கண்காட்சி நடத்தி, பெண்கள் தயாரித்த ஆடைகளை விற்பனை செய்யவும், புதிய ஆர்டர்களைப் பெறவும் கிளப் திட்டமிட்டுள்ளது. "வருமானம் கிடைக்கச் செய்யாமல் இந்தத் திட்டத்திற்கு முழுமையான அர்த்தம் இருக்காது. அதனால் சந்தைப்படுத்தல்

வாய்ப்புகளை உருவாக்குவது மிகவும் அவசியம்," என்கிறார் மோடி.

பெண்களுக்கு வெறும் தையல் இயந்திரம் வழங்குவதோ, பள்ளிப் பைகள் கொடுப்பதோ மட்டும் போதாது; நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்க வேண்டும் என்பதே சங்கத்தின் உறுதியான நோக்கம். இந்தத் திட்டத்தின் வெற்றியைப் பார்த்து தற்போது கிராமப் பெண்களும் இந்தப் பயிற்சியில் சேர விருப்பம் தெரிவித்துள்ளனர். அதனால் திட்டத்தை விரிவுபடுத்த சங்கம் முடிவு செய்துள்ளது.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறைந்து வரும் சூழலில் சுயதொழில் மிகவும் அவசியம் எனக் கருதும் சங்கம், அடுத்த கட்டமாக இளைஞர்களுக்கு வாகன ஓட்டுநர் பயிற்சியையும் வழங்கத் திட்டமிட்டுள்ளது. அகோலா நகரத்தில் ஓட்டுநர்களுக்கான தேவை தொடர்ந்து இருப்பதால், இது அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும்.

கல்வி மற்றும் டிஜிட்டல் திறன் மேம்பாட்டிலும் ரோட்டரி கவனம் செலுத்துகிறது. சுமார் 20 மாணவர்களுக்கு MS-CIT (Maharashtra State Certificate in Information Technology) பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. கணினி பயன்பாடு, MS Office, இணைய உலாவல் மற்றும் செயற்கை நுண்ணறிவு கருவிகள் போன்ற அடிப்படை டிஜிட்டல் திறன்களை இந்தப் பயிற்சி வழங்கும். படிப்பை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு அரசின் சான்றிதழும் வழங்கப்படும்.

மேலும் பள்ளிக்குச் செல்லும் மாணவிகளுக்காக 40 சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன. பாதுகாப்பான போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் பள்ளிப் படிப்பை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படாமல் தடுப்பதே இதன் நோக்கம்.

"இந்தத் திட்டத்தின் மூலம் ரோட்டரி ஒரு கிராமத்தின் சமூக மற்றும் பொருளாதார சூழலை மாற்றி வருகிறது. குறிப்பாக வறுமை மற்றும் வேலையின்மையால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் கிராமப்புற பெண்கள்தான். ஒருநாள் இந்தப் பெண்கள் தாங்களே ஆடைகளை



*சங்கத் தலைவர் நரியோசங் தார்போரேவாலா (வலமிருந்து இரண்டாமவர்), தாங்கள் உருவாக்கிய படைப்புகளைக் காட்சிப்படுத்தும் பயிற்சி பெறுநர்களுடன்.*

வடிவமைத்து, தயாரித்து, விற்பனை செய்யும் தொழில்முனைவோர்களாக மாறுவார்கள். பின்னர் அவர்கள் சொந்தமாக பூட்டிக் (boutique) கடைகள் தொடங்கி, வடிவமைப்பாளர் ஆடைகளை உருவாக்கும் நிலைக்கும் செல்வார்கள். பொருளாதார சுதந்திரம் அவர்களுக்கு தன்னம்பிக்கையையும், சுயமரியாதையையும் அளிக்கும். கிராமப்புற பெண்கள் மேம்பாட்டிற்கான ரோட்டரியின் அரிய பரிசாக இந்தத் திட்டம் அமையும்," என்று மோடி நம்பிக்கையுடன் கூறுகிறார்.

இந்தப் பயிற்சியில் பங்கேற்ற பெண்களும் தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்துள்ளனர். "ஆடைத் தயாரிப்பு திறன்களை கற்றுக்கொள்ள ரோட்டரி எங்களுக்கு சிறந்த வாய்ப்பை வழங்கியுள்ளது," என்கிறார் ஒரு மாணவி.

மற்றொரு மாணவி கூறுகையில், "பன்னிரண்டாம் வகுப்பு முடிந்த பிறகு என்ன செய்வேன் என்ற பயம் எனக்கு இருந்தது. தையல் மற்றும் ஆடைத் தயாரிப்பு கற்றுக்கொண்டதன் மூலம் என் காலில் நானே நிற்கும் நம்பிக்கை கிடைத்துள்ளது. இன்று என் தாய் என்னைப் பெருமையாகப் பார்க்கிறார். எனது எதிர்காலத்தை நான் உருவாக்க முடியும் என்ற தன்னம்பிக்கையை ரோட்டரி எனக்கு அளித்துள்ளது," என்றார். ■

# தைபே மாநாட்டில் ரோட்டேரியன்களைக் கவர்ந்த மலாலா யூசுப்சாய்

குண்டுலா மீத்கே



*பாகிஸ்தானியக் கல்வி உரிமை ஆர்வலர் மலாலா யூசுப்சாய்.*

மிக இளம் வயதில் அமைதிக்கான நோபல் பரிசை வென்றவரும், பெண் கல்வியின் தீவிர ஆதரவாளருமான மலாலா யூசுப்சாய், தைபே நகரில் நடைபெற்ற ரோட்டரி மாநாட்டில் சிறப்புரையாற்றினார். ஒரு ரோட்டேரியனின் மகளாக ரோட்டரி அமைப்புடன் தனக்குள்ள தனிப்பட்ட பிணைப்பு குறித்தும், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவம் குறித்தும் அவர் பேசினார்.

பெண் கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும் “உலகம் முழுவதும் 12 கோடி (120 மில்லியன்) பெண்கள் இன்னும் பள்ளிக்குச் செல்லாத நிலையில் உள்ளனர்” என்பதை ரோட்டேரியன்களுக்கு அவர் நினைவூட்டினார். மேலும், தலைவர்களாகத் திகழும் பெண்கள் மீது அதிக நம்பிக்கையை வைக்கவும், அவர்கள் மீது முதலீடு செய்யவும் அவர் வலியுறுத்தினார். தான்சானியா முதல் பாகிஸ்தான்வரை பெண்கள் தலைமையிலான இயக்கங்கள் மூலம் மாற்றம் உருவாகி வருவதை சுட்டிக்காட்டிய அவர், “பெண்கள் பிரச்னைகளை தெளிவாகப் புரிந்துகொள்வதுடன் அதற்கான தீர்வுகளையும் சொல்வார்கள்” என்று கூறினார்.

கல்விக்காக குரல் கொடுத்த 11 வயது சிறுமி என்ற நிலையிலிருந்து இன்று வரையிலான தனது பயணத்தை நினைவுகூர்ந்த மலாலா, கூட்டு நடவடிக்கையின் வலிமையை வலியுறுத்தினார்.

RI பொதுச் செயலாளர் ஜான் ஹ்யூகோ, அதிகரித்து வரும் தனிமை என்னும் உலகளாவிய சவால் குறித்துப் பேசினார். மகிழ்ச்சியைத் தீர்மானிப்பதில் மனித உறவுகளே முக்கியப் பங்கு வகிக்கின்றன என்னும் ஹார்வார்டு பல்கலைக்கழக ஆய்வுகளை மேற்கோள்காட்டி பேசிய அவர், ரோட்டரி இதற்கு ஒரு சிறந்த தீர்வாக அமைகிறது என்று குறிப்பிட்டார். “ஒரு பொதுவான நோக்கத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து செயல்படுவதே ரோட்டரியின் உயிர்நாடி. உலகம் இத்தகைய பிணைப்பைத் தேடிக் கொண்டிருக்கிறது” என்று கூறிய

## *தைபே மாநாட்டில் 37,000 ரோட்டரி உறுப்பினர்கள் பங்கேற்பு*



*RI தலைவர் ஃபிரான்செஸ்கோ அரெஸ்ஸோ மற்றும் அவரது மனைவி அன்னா மரியா ஆகியோருக்கு முன்னாள் RI தலைவர்கள் உற்சாக வரவேற்பளிக்கின்றனர்.*

*32 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தைபே நகரில் நடைபெற்ற ரோட்டரி இன்டர்நேஷனல் வருடாந்திர மாநாட்டில் 140-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 37,000-த்துக்கும் அதிகமான ரோட்டரி உறுப்பினர்கள் 2026, ஜூன் 13 முதல் 17 வரை கூடினர்.*

*“ரோட்டரி மாநாடுகள் ஒற்றுமையின் வலிமையை வெளிப் படுத்தும் தருணங்களாகும். இதில் உலகின் பல்வேறு மூலைகளிலிருந்தும் மக்கள் ஒன்றிணைந்து உறவுகளை வளர்த்துக் கொண்டு சேவையைக் கொண்டாடி, ஆரோக்கியமான மற்றும் அமைதியான எதிர்காலத் துக்கான கருத்துகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள்” என்று ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ கூறினார். தனது பதவிக்காலத்தில் ரோட்டரி உறுப்பினர்களைச் சந்தித்த அனுபவத்தைப் பற்றி விவரித்த அவர், “நான் சென்ற இடமெல்லாம் ஒரே மாதிரியான மனப்பான்மையைக் கண்டேன். மொழிகள், உணவுகள் மற்றும் விருந்தினர்களை வரவேற்கும் முறைகள் வெவ்வேறாக இருந்தாலும், அனைவரிடமும் ஒரே மாதிரியான சேவை மனப்பான்மை இருந்தது” என்று குறிப்பிட்டார்.*

*போலியோ ஒழிப்பு என்பது ரோட்டரியின் மிக முக்கிய முன்னுரிமை என்பதை மீண்டும் வலியுறுத்திய அவர், “இந்த ஆண்டு சவாலானதாக இருந்தது. நிதி திரட்டுவது கடினமானது, அரசுகள் புதிய நெருக்கடியைச் சந்தித்தன. ஆனால், போலியோ பற்றிய செய்திகளைக் கேட்டு உலகம் சோர்வடைந்தாலும், அதற்கான எங்கள் முயற்சிகள் நின்றுவிடாது. உலகில் குழந்தைகளுக்கு நாங்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியே தீர வேண்டும்” என்று கூறினார். ரோட்டரியின் தடுப்பூசி பணிகளைப் பார்வையிட பாகிஸ்தான் சென்றபோது போலியோவால் முடக்கப்பட்ட சுமார் மூன்று வயது சிறுமி ஒருவரை பார்க்க நேரிட்டதை அவர் விவரித்தார். அந்தச் சிறுமி தன் கைகளைப் பயன்படுத்தித் தன்னை இழுத்துக்கொண்டு மற்ற குழந்தைகளுடன் இணைந்ததை அவர் குறிப்பிட்டார். “அந்தச் சிறுமிதான் நாங்கள் ஏன் நிறுத்தக்கூடாது என்பதற்கான முக்கிய காரணம். நாங்கள் இந்தப் பணியை முழுமையாக முடிக்க வேண்டும். ஏனெனில் அடுத்த குழந்தையும் காத்திருக்கிறது” என்று அவர் கூறினார்.*

*உலகையே தைவான் நோக்கி வரவழைத்ததற்காக, அந்த நாட்டு ரோட்டரி உறுப்பினர்களுக்கு தைவான் அதிபர் லாய் சிங்-டே நன்றி தெரிவித்தார்.*

அவர், உறுப்பினர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும், மற்றவர்களை இந்த அமைப்பில் இணைய அழைப்பு விடுக்கவும் ஊக்குவித்தார். நவீன வாழ்க்கை முறைக்கு ஏற்ப சங்கங்கள் தங்கள் செயல்பாடுகளை மாற்றிக்கொள்ள வேண்டும். மக்கள் எளிதாகப் பங்கேற்கும் நெகிழ்வான வழி முறைகளை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ரோட்டரி அமைதி கூட்டமைப்பின் முன்னாள் மாணவியான நடாலி எமெரி, தனது வாழ்க்கைக் கதையைப் பகிர்ந்துகொண்டு, சிறிய கருணைச் செயல்கள்கூட எப்படி ரோட்டரி அமைப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று விளக்கினார்.

ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நீங்கள் அசாதாரணமானவராக இருக்க வேண்டியதில்லை என்று அவர் கூறினார். தெற்கு சூடான் போன்ற நெருக்கடியான பகுதிகளில் தனது பணிகளை குறிப்பிட்டு பேசுகையில், உணவு, நீர் மற்றும் மருந்துகளுக்கான அணுகலை உறுதிசெய்வது என்பது வெறும் மனிதாபிமான பணி மட்டுமல்ல, அது அமைதியை கட்டியெழுப்பும் பணியாகும் என்றும் அவர் விளக்கினார்.

### ஆறாவது விரிவாக்கத் திட்டத்தை பெறும் ஹைட்டி

“நாங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் இயங்குவதில்லை. நாங்கள் சான்றுகள் மற்றும் அளவீடுகளின் அடிப்படையில் இயங்குகிறோம்” என்று TRF அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக் கூறினார். “ஹைட்டியில் நிலையான நீர் மற்றும் சுகாதார அமைப்புகளுக்கான ஒத்துழைப்பு” என்ற ஆறாவது

விரிவாக்கத் திட்டத்தை அவர் அறிவித்தார். ஹைட்டி அமைப்புகள் தேசிய நீர் முகமையுடன் இணைந்து செயல்படுகிறது. உள்ளூர் குழுக்கள், நீர் இயக்குநர்கள் மற்றும் மானியம் முடிந்த பின்னரும் நீண்டகாலம் இந்த வேலையைத் தொடரவிருக்கும் மேயர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம், நீரினால் பரவும் நோய்களை 25 சதவீதம் குறைப்பதே இதன் இலக்காகும்.

போலியோவுக்கு எதிரான போராட்டம் இன்னமும் ரோட்டரியின் முதன்மை முன்னுரிமையாக உள்ளது. RI போலியோ பிளஸ் குழுவின் உறுப்பினர் வலேரி வேஃபர் மற்றும் சர்வதேச போலியோ பிளஸ் குழுவின் தலைவர் மைக் மெக்கவர்ன் ஆகியோர் பாதிக்கப்படக்கூடிய மக்களைச் சென்றடைவதில் உள்ள முன்னேற்றங்கள் மற்றும் சவால்களை எடுத்துரைத்தனர். ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மட்டுமே தொடர்ந்து தீவிர போலியே வைரஸ் பரவலைக் கொண்டுள்ளன. அணுகுவதற்கான தடைகள், பாதுகாப்பின்மை மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவைதான் முக்கியப் பிரச்னைகளாக உள்ளன. அதே நேரத்தில் நைஜீரியா மாறுபட்ட நோய்ப் பரவல்களை எதிர்கொள்கிறது. TRF-இடமிருந்து ஆண்டுக்கு 50 மில்லியன் டாலர் மற்றும் பில் கேட்ஸ் அறக்கட்டளையிடமிருந்து 100 மில்லியன் டாலர் நிதியுதவியுடன் முன்களப் பணியாளர்களின் ஒருங்கிணைந்த சுகாதார பிரசாரம் மற்றும் உலகளாவிய ஆதரவு ஆகியவை நோய்த்தொற்று எண்ணிக்கை குறைவதற்கும், புதிய நம்பிக்கை உருவாவதற்கும் காரணமாக அமைகின்றன.■



*தாய்பேவில் நடைபெற்ற ரோட்டரி மாநாட்டில் பங்கேற்ற பிரதிநிதிகள்.*

# கனவை நனவாக்கிய கரங்கள்

ரோட்டரி செய்திக்குழு

கடின உழைப்பும் உறுதியும் கொண்டு கணினிப் பொறியாளராக வேண்டும் என்பது சுபம் பண்டிட்டின் கனவு. ஆனால் குடும்பத்தின் பொருளாதார நெருக்கடி அந்தக் கனவுக்கு தடையாக இருந்தது.

அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் அவரது தந்தை விஷ்ணு பண்டிட், துணி தைத்தும் குடும்பத்தை நடத்தி வந்தார். இந்தச் சூழலில், ஆர்சி சண்டிகர் மிட் டவுன் துணைத் தலைவர் பிரதீப் சிசோடியாவின் மனைவி நந்திதா சிசோடியா பல நிறுவனங்களை அணுகி CSR கல்வி உதவித்தொகையைப் பெற்றுத் தந்தார். ரூ.8.2 லட்சம் மதிப்பிலான இந்த உதவியால், 2026 ஜூன் 5 அன்று சுபம் சிட்காரா பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் பொறியியல் படிப்பில் சேர்ந்தார். இந்த உதவித்தொகை கல்விக் கட்டணம், போக்குவரத்து உள்ளிட்ட செலவுகளை ஏற்கிறது.■



*நந்திதா சிசோடியா சுபம் பண்டிட்டுடன்.*

ADVT.

BLOOD BANK | STRENGTHENING COMMUNITIES | VILLAGE ADOPTION | WOMEN EMPOWERMENT | EDUCATION

ENVIRONMENT RENEWABLE ENERGY | FORESTATION | WATER MANAGEMENT ■ SOCIAL HEALTHCARE

GOVERNANCE SUSTAINABILITY REPORTING | MINING BEST PRACTICES | ADVOCACY



# ESG-READY

## SINCE 1961

Our founder Abheraj Baldota's core operating principle was 'I am not the owner of wealth, but a privileged trustee to serve the community with it'. Thus it is no surprise that ESG practices are ingrained in our corporate ethos, business strategy and operations since our birth in 1961.

We were the first Indian unlisted company to publish a GRI-compliant sustainability report way back in 2006. We are a large producer of renewable power in India. We were also the first mining company in India to get certified for OHSAS 18001:1999 and ISO 14001:2004. Across the years, we have invested more than Rs. 1235.08 Crore in ESG. From building blood banks to adopting villages and combating climate change, we have been practicing ESG long before it became a buzzword. With 875 acres of forest cover created through the plantation of 21.5 lakh trees, we continue to drive environmental stewardship, reflected in the sustained reduction of specific emissions from our mining operations.

BALDOTA

Baldota Enclave, Abheraj Baldota Road, Hosapete 583 203. Karnataka, India | **www.baldota.co.in**

# பெண்மையைக் கொண்டாடிய இந்தூர் ரோட்டேரியன்கள்

ரஷீதா பகத்

இந்த ஆண்டு இந்தூரில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம், ரோட்டரிக்கு ஒரு மறக்க முடியாத ஒரு பொது பிம்ப முன்னெடுப்பாக அமைந்திருந்தது. இந்தூர் ராயல் ரோட்டரி சங்கம் (RID 3040), நகரின் துடிப்பான மகளிர் அமைப்பான “வேர்ல்டு ஆஃப் உமன்” சமூகத்துடன் இணைந்து சிறப்பாக திட்டமிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

35 உறுப்பினர்களைக் கொண்ட இந்தூர் ராயல் ரோட்டரி சங்கத்தின் தலைவர் யட்டி அரோரா, இதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டார். பல ரோட்டேரியன்கள் ஒரு குழுவாக ஒன்றிணைந்து மேற்கொண்ட



*ஆரோஹி (Aarohi) எனும் பெண்கள் மாநாட்டில் பங்கேற்பாளர்களுடன் PDG ரிது குரோவர் (மையத்தில்), வேர்ல்ட் ஆஃப் விமன் (World of Women) அமைப்பின் நிறுவனர் சுருச்சி மல்ஹோத்ரா (இடதுபுறம்) மற்றும் RC இந்தூர் ராயல்ஸ் தலைவர் யட்டி அரோரா (வலதுபுறம்).*

முயற்சிகளால்தான் இந்த மகத்தான வெற்றி சாத்தியமானது என்கிறார் யட்டி அரோரா.

முதலாவாதாக “மகளிர் உலகம்” பல்வேறு பின்னணிகள் கொண்ட அனைத்துவகை பெண் உறுப்பினர்கள் கொண்ட துடிப்பான அமைப்பாகும். மேலும் சமூக ஊடகங்களில் பெரும் செல்வாக்கை கொண்டுள்ளது. யட்டி அந்த சமூகத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர். மேலும் உள்ளூர் சமூகத்திற்கு அந்த அமைப்பு ஆற்றிவரும் பரந்த பணிகளை நன்கு அறிந்தவர். மகளிர் உலகம் அமைப்பில் (WoW), நாங்கள் ஹோலி, தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் காதுகேளாதோர் உள்ளிட்ட பிறவிக் குறைபாடுள்ளவர்களுக்கு ஸ்வெட்டர்கள், புத்தகங்கள் விநியோகித்து வந்துள்ளோம். மேலும் அவர்களுக்கு என பல்வேறு சமூக நிகழ்ச்சிகளை நடத்தி வந்துள்ளோம்.

ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், மகளிர் உலகம் அமைப்பு உள்ளூர் சமூகத்தில் உள்ள சக பெண்களின் வர்த்தக முயற்சிகளை ஆதரிப்பதிலும், அவற்றை மேம்படுத்துவதிலும், ஒருவருக்கொருவர் உதவி செய்வதிலும் அதிக கவனம் செலுத்தி வருவதுதான்.

மகளிர் தினத்தைக் கொண்டாடுவதற்காக ரோட்டரி மற்றும் மகளிர் உலக அமைப்பினர் இணைந்து மேற்கொண்ட இந்த கூட்டு முயற்சியின் விளைவாக, இந்தூரில் ‘ஆரோஹி 2026’ என்ற பெயரில் ஒரு பெரிய அளவிலான மகளிர் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. “பெண்மையைக் கொண்டாடுதல், தலைமைத்துவத்தையும் பெண்களின் வர்த்தக முயற்சிகளையும் ஊக்குவித்தல், நல்வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் சமூகம் முழுவதும் அதிகாரம் பெற்ற பெண்களின் வலுவான வலையமைப்பை உருவாக்குதல்” ஆகியவை மாநாட்டின் நோக்கமாக இருந்தது என்கிறார் யட்டி.

இந்த மாநாட்டில் இந்தூர், தேவாஸ், போபால், சோன்கட்ச், நாக்தா மற்றும் உஜ்ஜைனியிலிருந்து பல்வேறு ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த பெண் ரோட்டேரியன்கள், ரோட்டேரியன்



அல்லாதவர்கள், மகளிர் தலைவர்கள், தொழில்முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்கள் என 300-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இது கற்றல், பகிர்வு மற்றும் தோழமைக்கான துடிப்பான தளமாக அமைந்திருந்தது.

பெண்களின் பொருளாதார மேம்பாட்டு முயற்சிகள் உள்பட அவர்களின் வெற்றி, மகிழ்ச்சி, நல்வாழ்வுக்கு பங்களிக்கும் பல்வேறு அம்சங்களைக் கொண்டாடுவதே மாநாட்டின் நோக்கமாக இருந்தது என்று யட்டி விளக்கினார். பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் வர்த்தகம் மற்றும் வாழ்க்கை முறை அரங்குகளும் இடம்பெற்றன. பெண் தொழில்முனைவோர் தங்கள் தயாரிப்புகளை காட்சிப் படுத்தி விற்பனை செய்தனர். இந்த முயற்சி, பெண்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளவும், தொடர்புகளை மேம்படுத்தவும், பொருளாதாரத்தை பெருக்கிக் கொள்ளவும் வழிவகுத்தது. தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தியதன் மூலம் பெண் தொழில்முனைவோர் பங்கேற்பாளர்களுடன் நேரடி கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இந்த நிகழ்வு சமூக பிணைப்பை ஏற்படுத்தியதுடன், அவர்களுக்கு அங்கீகாரமும், வர்த்தக வாய்ப்பும் கிடைக்க உதவியது.

இந்த மாநாட்டில் பெண் தொழில்முனைவோரின் வர்த்தக வாய்ப்புகள் பற்றி கேட்டபோது, சங்கத்தின் தலைவர் கூறுகையில், சுகாதாரம், நலவாழ்வு, நகைகள், கைவினைப் பொருள்கள் என பலதரப்பட்ட தொழில்கள் இந்த அரங்குகளில் காட்சிப்படுத்தப்பட்டன. சொந்தமாக கடை இல்லாதவர்கள், சமூக ஊடகங்கள் மூலம் வர்த்தகம் செய்பவர்கள் மற்றும் சந்தைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு அரங்குகள் வழங்குவதில் நாங்கள் முக்கிய கவனம் செலுத்தினோம். இந்த மாநாட்டில் அவர்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப் படுத்தி, பலதரப்பட்ட பார்வையாளர்களையும் ஈர்க்க அவர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கினோம்.

தங்கள் பொருள்களை சந்தைப்படுத்துதல் தொடர்பாக பெண் தொழில்முனைவோருக்கு கிடைத்த வரவேற்பு பற்றி யட்டி கூறுகையில், "நிதி ரீதியிலான பலன் அல்லது அவர்கள் விற்றதைவிட, தங்கள் தயாரிப்புகள் மக்களிடம் அதிக கவனம் பெற்றது அவர்களுக்கு மிகழ்ச்சியை ஏற்படுத்தியது. தங்களின் உழைப்பு பாராட்டப்பட்டதில் அவர்கள் மிகவும் உற்சாகம் அடைந்தனர். மேலும் இது அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதுபோல் இருந்தது".

தனிநபர் வளர்ச்சி, உணர்ச்சி சார் நுண்ணறிவு, உடல்நலம் மற்றும் தலைமைத்துவ திறன் என பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடல் அமர்வுகளும் இடம்பெற்றன. "ஜுனூன் அவுர் ஜஸ்பி கி ஜீத் (அனுபவக்குரல்கள் மற்றும் வலுப்பெற்ற கதைகள்) என்னும் தலைப்பில் நடைபெற்ற விவாதத்தில் மோனிகா பஞ்சாபி, இஷானி மஹேஸ்வரி மற்றும் கோமல் சதுர்வேதி உள்ளிட்டோர் தங்களது அனுபவத்தை பகிர்ந்துகொண்டனர். சவால்களை எப்படி எதிர்கொண்டு முன்னேறினோம் என்பதையும் விவரித்தனர். நம்பிக்கையுடனும் மன உறுதியுடனும் செயல்பட்டால் வாழ்க்கையில் வெற்றிபெற முடியும் என்பதை வலியுறுத்தினர். இந்த



*மாவட்ட ஆளுநர் சுஷில் மல்ஹோத்ரா (இடமிருந்து நான்காவதாக நிற்பவர்) மற்றும் அவரது மனைவி ரூபி; முன்னாள் மாவட்ட ஆளுநர் ரிது; சங்கத்தலைவர் யட்டி மற்றும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சுருச்சி ஆகியோர் மன்றத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுடன்.*




*அழகுக்கலை பயிற்றுவிப்பாளர் உன்னதி சிங் அழகு பராமரிப்பு குறித்த ஆலோசனைகளை வழங்க, PDG ரிது அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இடதுபுறத்தில் சங்கத்தலைவர் யட்டி உள்ளார்.*

அமர்வை ரோட்டேரியன் ராகேஷ் ஜெயின் நெறிப்படுத்தினார்.

உறவுமுறை பயிற்சியாளர் விகாஸ் சௌதுரி, தனது உரையில், அர்த்தமுள்ள உறவுகளை உருவாக்குவது மற்றும் திறம்பட தொடர்புகொள்வது பற்றிய நடைமுறை நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டார். சர்வதேச அழகுக்கலை பயிற்சி நிபுணர் உன்னாதி சிங், தமது அமர்வில், தனிப்பட்ட தோற்றம் மற்றும் அலங்கார குறிப்புகளில் கவனம் செலுத்தியதுடன், ஒரு சுவாரஸ்யமான ஆளுமை மேம்பாட்டுக் குறிப்புகளை வழங்கினார்.

ஆற்றல் சிகிச்சை (உடலைத் தொடாமல், மருந்துகள் இல்லாமல் நோய்களை குணப்படும் முறை) மற்றும் தியாயனம் தொடர்பான அமர்வை மும்பையைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் பைரவி தக்கார் நடத்தினார். மன நலம் மற்றும் உணர்ச்சி சமநிலை குறித்து அவர் கவனம் செலுத்தினார். ஆற்றல் சிகிச்சை, உணர்ச்சி சமநிலை என்றால் என்ன என்பதை பார்வையாளர்களுக்கு எடுத்துரைத்தார். பாவனா புஜாரா, பெண்களின் வலிமை, மீள்தன்மை, குடும்பத்தையும், சமூகத்தையும் வடிவமைப்பதில் அவர்களுக்கு உள்ள செல்வாக்கு ஆகியவற்றை பெண்களின் கதை என்ற தலைப்பில் கதைகள் மூலம் சொல்லி புரியவைத்தார்.

பெண்கள் இருக்கும் இடத்தில் சமையல்கலை அனுபவமும் கட்டாயம்

இருக்க வேண்டும். இந்தூரில் உள்ள சாயாஜி ஹோட்டலைச் சேர்ந்த திறமையான சமையல் கலைஞர்கள், கலந்துரையாடலுடன்கூடிய பயிலங்கை நடத்தினார்கள். இதில் பங்கேற்பாளர்கள் ஆக்கப்பூர்வமான சமையல் குறிப்புகளுடன் புதுப் புது உணவுகளை சமைப்பது குறித்தும் தெரிந்துகொண்டனர்.

கல்வி, வர்த்தகம், சமூக சேவை போன்ற துறைகளில் சாதனை படைத்த பெண்கள், ரோட்டேரியன் மற்றும் ரோட்டேரியன் அல்லாதவர்கள் சமூகத்தில் அவர்களின் பங்களிப்பு, தலைமைத்துவம் மற்றும் தொழில் திறமைக்காக அங்கீகரிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். இந்த அங்கீகாரம், பெண்களின் சாதனை களைக் கொண்டாடுவதிலும் ஊக்குவிப்பதிலும் ரோட்டரிக்கு உள்ள அர்ப்பணிப்பை வலுவாக நினைவூட்டியது என்கிறார் யட்டி.

மாநாட்டை தொடங்கிவைத்துப் பேசிய DG சுஷில் மல்ஹோத்ரா, பெண்கள் தலைமைத்துவம், சேவை, மற்றும் தனிப்பட்ட திறனுடனும் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதுபோன்ற மெகா நிகழ்வுகள் ரோட்டேரியின்கள் மற்றும் ரோட்டேரியன்கள் அல்லாதவர்களை ஒரே ஒன்றிணைப்பதன் மூலம் ரோட்டரியின் நன்மதிப்பு உயரும் என்றார். அவரது மனைவி ரூபி, உதவி ஆளுநர் கிரன் கும்மான், நிகழ்ச்சி தலைவர் சுரவ்சி மல்ஹோத்ரா ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.

மாநாட்டு நிகழ்வின் வெற்றியால் மகிழ்ச்சி அடைந்த யட்டி, இது தனது கனவுத்திட்டம் என்றும் தாம் சங்கத்தின் தலைவர் ஆனது முதல் ரோட்டரியின் நன்மதிப்பை உயர்த்தும் வகையில், பெண்களுக்கு அதிகாரமளித்தலை முன்னிலைப் படுத்தும் வகையில் மெகா நிகழ்வை நடத்தி திட்டமிட்டிருந்ததாக கூறினார். “சர்வதேச மகளிர் தினத்தில் இதுபோன்ற ஒரு விழாவைக் கொண்டாடலாம் என சங்க உறுப்பினரும் PDG-யுமான ரிது குரோவரிடம் யோசனையை முன்வைத்த போது அவர் என்னை ஊக்கப்படுத்தினார். மேலும் நாம் இதை முறையாகச் செய்து சாதனை படைக்க வேண்டும்” என்று கூறி உற்சாகப்படுத்தியதாக கூறினார்.



*மாநாட்டில் ஒரு சமையல் பயிலரங்கம்.*

தனக்கு ஊக்கத்தையும், ஆதரவையும் அளித்ததுடன் மட்டுமல்லாமல், ஆற்றலையும் நம்பிக்கையையும் அளித்ததற்காக அவருக்கு யட்டி நன்றி கூறுகிறார். “நான் ரோட்டரியில் சேர்ந்து ஐந்து வருடங்களே ஆன ஒரு இளம் ரோட்டேரியன். ஆனால், இது ஒரு மிகப்பெரிய திட்டம். PDG ரிதுவின் முழு ஆதரவு எனக்கு முக்கியமானது. அவர் மிகவும் ஆதரவாக இருந்ததால், நிகழ்ச்சிக்கு 15 நாட்கள் முன்பிருந்து நாங்கள் அனைவரும் அவரது அலுவலகத்தில் சில சமயங்களில் இரவு 11 மணி வரை கூட வேலை செய்தோம்” என்றார்.

ஆபா ஆனந்த், ராஜேந்திர ஜெயின், சுனைனா கன்னா, வினீதா ஸ்ரீடோன்கர் மற்றும் ராகேஷ் ஜெயின் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் ரோட்டேரியன்களுக்கும், நிகழ்ச்சிக்கு உதவிய இந்தூர், ஹோட்டல் சாயாஜி, ஈக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க், ஸ்ரீஜன் லீகல் சொல்யூஷன்ஸ் மற்றும் டிவிஎஸ் கருடா உள்ளிட்ட புரவலர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

நிகழ்ச்சி முழுவதும் வேடிக்கையான விளையாட்டுகள், அதிர்ஷ்ட குலுக்கல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் என ஒரு கலகலப்பான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சூழலை உருவாக்கியதில் ஏற்பாட்டாளர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால், நிகழ்ச்சி முழுவதும் வேடிக்கையாகவும், கலகலப்பாகவும் மட்டும் அமைந்துவிடாமல், அர்த்தமுள்ள உரையாடல்கள், உழைப்புக்கு அங்கீகாரம் மற்றும் கொண்டாட்டங்கள் ஆகியற்றின் மூலம் இந்த மாநாடு சமூகத்தில் வாய்ப்புகளை உருவாக்குதல், தொடர்புகளை கட்டியெழுப்புதல், நேர்மறை மாற்றத்தை ஊக்குவித்தல் மற்றும் ரோட்டேரியன்கள், ரோட்டேரியன்கள் அல்லாத சமூகத்தினரை ஒருங்கிணைத்தல் என ரோட்டரியின் நோக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது. இந்த முயற்சி ரோட்டரி மீதான நன்மதிப்பை உயர்த்தும் வகையில் இருந்தது. சமூக ஈடுபாட்டையும் வலியுறுத்தியது. கூட்டுத் தலைமை மற்றும் சமூக சேவை சார்ந்த கண்ணோட்டம் எவ்வாறு அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தி சமூகங்களை ஒன்றிணைக்கிணைக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் இருந்தது” என்று யட்டி மேலும் கூறினார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, உள்ளூர் ஊடகங்களின் கவனத்தை ஈர்த்த இந்த நிகழ்வின் மூலம் ரோட்டரியில் அதிக பெண் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான தனது சங்கத்தின் முயற்சிகளுக்கு ஒரு உத்வேகம் கிடைக்கும் என்பதில் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்.■

# புதிய பொலிவு பெற்ற பள்ளி

ரோட்டரி செய்திக்குழு

இந்த ஜூன் மாதம் இரண்டு மாத கோடை விடுமுறைக்குப் பிறகு பள்ளி திறக்கப்பட்டபோது, சென்னை புறநகரில் உள்ள வெங்கடேஸ்வரா நடுநிலைப் பள்ளி மாணவர்கள் ஒரு இனிய ஆச்சரியத்தை எதிர்கொண்டனர். அவர்கள் வழக்கமாகப் பார்த்த பள்ளி வளாகம், புத்துணர்வூட்டும் வண்ணமயமான, மகிழ்ச்சியான இடமாக மாறியிருந்தது. “இரண்டு மாதங்களுக்கு முன்பு அவர்கள் பார்த்த பள்ளிக்கும் இப்போது உள்ள பள்ளிக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருந்தது,” என்கிறார் RC சென்னை செலிப்ரிட்டீஸ் (RID 3233) தலைவர் R வெங்கட்ராமன்.

தனது ‘நம்ம பள்ளி’ திட்டத்தின் மூலம், மாணவர்கள் தினமும் ஆர்வத்துடன் வர விரும்பும் வகையில், ஊக்கமளிக்கும், குழந்தைகளுக்கு ஏற்ற கற்றல் சூழலை உருவாக்க சங்கம் முனைந்தது.

கோடை விடுமுறையில் திட்டத்தலைவர் S அகஸ்டின் ராஜ், தன்னார்வலர்கள், ஓவியர்கள் மற்றும் ரோட்டேரியன்களை ஒருங்கிணைத்து பள்ளி வளாகத்தை முழுமையாக மாற்றியமைத்தார். மே மாதத்தில் இரண்டு நாட்களில், சாதாரணமாக இருந்த சுவர்கள் வண்ணமயமான கல்வி சார்ந்த ஓவியங்கள், படைப்பாற்றல் நிறைந்த கலை வடிவங்கள் மற்றும் மகிழ்ச்சியான வடிவமைப்புகளால் உயிர்ப்பிக்கப்பட்டன.

புதிய ஓவியங்கள் பள்ளியில் குழந்தைகள் கற்கவும், ஊக்கமடையவும் கூடிய உற்சாகமான இடமாக மாற்றின. “வண்ணமயமான காட்சிகளும் சுவாரஸ்யமான கருத்துகளும் வகுப்பறைகளுக்கு புதிய உற்சாகத்தை அளித்தன,” என்கிறார் ராஜ்.

மாவட்ட சிறப்புத் திட்டத் தலைவர் ராம்குமார், சங்கத் தலைவர் வெங்கட்ராமன் மற்றும் தலைவர் தேர்வு செய்யப்பட்டுள்ள பீட்டர் ஆகியோரும் தன்னார்வலர்களுடன் இணைந்து இந்த மாற்றத்தை நனவாக்கினர்.■









*மாவட்ட சிறப்புத்திட்டங்களின் தலைவர் ராம்குமார், பள்ளியில் சுவரோவியம் ஒன்றை வரைகிறார்.*

# வரவிருக்கும் RI இயக்குநர்களுக்கு சென்னையில் பாராட்டு விழா

ஜெய்ஸ்ரீ

சென்னையில் நடைபெற்ற சிறப்பு விழாவில், ரோட்டரி மண்டலங்கள் 5 மற்றும் 6-ன் தலைவர்கள் ஒன்று கூடி, 2027—29 காலகட்டத்தில் RI இயக்குநர் குழுவில் பணியாற்றவுள்ள நேபாளத்தின் பாசு தேவ் கோல்யான் மற்றும் இந்தியாவின் குர்ஜீத் சிங் சேகோன் ஆகியோருக்கு பாராட்டு தெரிவித்தனர். மண்டலங்கள் 5 மற்றும் 6-க்கான RI இயக்குநராகப் பொறுப்பேற்கவுள்ள கோல்யான், நேபாளத்தின் ரோட்டரி கிளப் பிராட்நகர் உறுப்பினர்; 2011–12-ல் மாவட்ட ஆளுநராகப் பணியாற்றியவர். மண்டலங்கள் 4 மற்றும் 7-க்கான RI இயக்குநராகப் பொறுப்பேற்கவுள்ள சேகோன், அமிர்தசரஸின் ரோட்டரி கிளப் அமிர்தசரஸ் சிவில் லைன்ஸ் உறுப்பினர்; 2014–15-ல் மாவட்ட ஆளுநராக இருந்துள்ளார்.

தனக்குக் கிடைத்த இந்த கவுரவத்தை ஏற்றுக்கொண்ட கோல்யான், இது தனிப்பட்ட பாராட்டு அல்ல, ரோட்டரியின் உயர்ந்த சேவை உணர்வுக்குக் கிடைத்த அங்கீகாரம் என்றார். அரங்கில் கூடியிருந்தவர்களை நோக்கிப் பேசிய அவர், “இங்கே எனக்கு மாவட்ட வேறுபாடுகளோ, மொழி வேறுபாடுகளோ, நாடுகளின் எல்லைகளோ தெரியவில்லை; ஒரே குடும்பம்தான் தெரிகிறது. கருணையும் மனிதநேயமும் நம்மை ஒன்றிணைத்துள்ளன. பதவிகளை விட விலை மதிப்பற்ற ஒன்றை ரோட்டரி நமக்குக் கொடுத்துள்ளது. அது எல்லைகளைத் தாண்டிய நட்பும், பதவிகளைத் தாண்டிய மரியாதையும், எண்ணற்ற வாழ்க்கைகளைத் தொடும் வாய்ப்புமாகும்,” என்றார்.

தனது ரோட்டரி பயணத்தை நினைவுகூர்ந்த அவர், சிறிய சேவைச் செயல்களிலிருந்து தொடங்கி மூத்த தலைவர்களிடம் கற்றுக்கொண்ட அனுபவங்களைப் பகிர்ந்தார். தூய்மையான குடிநீர் திட்டங்கள், உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள், சுகாதார முயற்சிகள், கல்வியறிவு மேம்பாட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் ரோட்டரி ஏற்படுத்திய மாற்றங்களை நேரில் கண்டதாகக் கூறினார். மேலும், 2008-ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளம் மற்றும் 2015-ம் ஆண்டு நேபாளத்தை உலுக்கிய நிலநடுக்கத்தின் போது உலகம் முழுவதுமுள்ள ரோட்டேரியன்கள் வழங்கிய ஆதரவையும் அவர் நினைவுகூர்ந்தார். “பதவிகள் வந்து போகும்; ஆனால் பயனாளிகளின் கண்களில் தெரியும் நன்றிக்கண்ணீர் என்றென்றும் நிலைத்திருக்கும்,” என்ற அவரது வார்த்தைகள் பலரையும்

*இடமிருந்து: சென்னையில் நடந்த பாராட்டு விழாவில் PDG J B காம்தார், RI இயக்குநர் K P நாகேஷ், PRID P T பிரபாகர், RIDN குர்ஜீத் சிங் செகோன், RI இயக்குநர் M முருகானந்தம், PRID C பாஸ்கர், RIDN பாசு தேவ் கோலியான், TRF அறங்காவலர் A S வெங்கடேஷ் மற்றும் PDG R சீனிவாசன்.*



நெகிழச்செய்தன.

தலைமைத்துவ வளர்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய கோல்யான், ஒரு தலைவரின் வெற்றி அவரைப் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கையால் அல்ல, அவர் உருவாக்கும் புதிய தலைவர்களின் எண்ணிக்கையால் அளவிடப்படுகிறது என்றார். சங்கங்களை வலுப்படுத்துதல், இளைஞர்களை ஊக்குவித்தல், உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் ரோட்டரி அறக்கட்டளைக்கு ஆதரவு வழங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறு அவர் அழைப்பு விடுத்தார். “ரோட்டரி என்பது ஒரு அமைப்பு மட்டுமல்ல; அது ஒரு உணர்வு, ஒரு உறவு, ஒரு வாழ்க்கை முறை,” என்று அவர் தனது உரையை நிறைவு செய்தார்.

தனக்கு வழங்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்த சேகோன், தனது ரோட்டரி பயணத்தில் வழிகாட்டி யாக இருந்த தலைவர்களை நினைவு கூர்ந்தார். மாவட்ட ஆளுநராக இருந்தபோது PRID P T பிரபாகர் தன்னை வழிநடத்தியதாகவும், PRID C பாஸ்கர் தனது முதல் முக்கிய பொறுப்பை வழங்கியதாகவும், PRID A S வெங்கடேஷ் பயிற்சி மற்றும் தலைமைத்துவத்தின் மீது ஆர்வத்தை உருவாக்கியதாகவும் கூறினார். மேலும், தற்போதைய RI இயக்குநர்களான முருகானந்தம் மற்றும் K P நாகேஷ் ஆகியோரின் தொடர்ந்த வழிகாட்டுதலுக்கும் நன்றி தெரிவித்தார். எதிர்காலத்தில் ரோட்டரியை மேலும் வலிமையான தாகவும், துடிப்பானதாகவும், உலக ரோட்டரி அரங்கில் குறிப்பிடத்தக்க சக்தியாகவும் உருவாக்க இணைந்து பணியாற்ற ஆவலுடன் இருப்பதாகக் கூறினார்.

RI இயக்குநர் முருகானந்தம் தனது உரையில், போர்கள், தொற்று நோய்கள் மற்றும் உலகளாவிய சவால்களைத் தாண்டியும் ரோட்டரி தொடர்ந்து வலுவாக இருப்பதைச் சுட்டிக்காட்டினார். “ரோட்டரி என்பது தலைவர்களை உருவாக்கும் தொழிற்சாலை,” என்று குறிப்பிட்ட அவர், ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான தலைமைத்துவ வாய்ப்புகள் சங்கங்கள் மற்றும் மாவட்டங்கள் வழியாக உருவாகின்றன என்றார். உறுப்பினர் வளர்ச்சி ரோட்டரி யின் முக்கிய இலக்காக இருப்பதை வலியுறுத்திய அவர், 2030-க்குள் 12.5 லட்சம் உறுப்பினர்களை எட்டும் இலக்கை அடைய மண்டலங்கள் 4, 5, 6 மற்றும் 7 குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்ய வேண்டும் என்றார்.



RI இயக்குநர் நாகேஷ், இரு இயக்குநர் நியமனர்களுக்கும் வாழ்த்து தெரிவித்து, இது இந்தியாவுக்கும் இப்பிராந்தியத்திற்கும் பெருமை சேர்க்கும் முக்கிய தருணம் என்றார். கோல்யானின் எளிமை, சேவை மனப்பான்மை மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்டிய அவர், மண்டலங்கள் 5 மற்றும் 6-க்கு தலைமை வகிப்பது பெருமையுடன் கூடிய சவாலாகவும் இருக்கும் என்றார். இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கையின் குரலை அவர் சிறப்பாக பிரதிநிதித்துவப்படுத்துவார் என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார். சேகோனைப் பற்றி பேசுகையில், அவரது அர்ப்பணிப்பும் தலைமைத்துவத் திறனும் மண்டலங்கள் 4 மற்றும் 7-ஐ சிறப்பாக வழிநடத்த உதவும் என்றார். மேலும், 2030-க்குள் 12.5 லட்சம் உறுப்பினர்களை எட்டும் இலக்கை மீண்டும் வலியுறுத்திய அவர், இந்தியா உலகின் மிகப்பெரிய ரோட்டரி நாடாக உருவெடுக்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

முன்னாள் RI இயக்குநர்களான பாஸ்கர் மற்றும் வெங்கடேஷ் சார்பில் வாழ்த்துரை வழங்கிய PRID P T பிரபாகர், இரு நியமனர்களுடனான தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். கோல்யானை சிறந்த மனிதர் எனப் பாராட்டிய அவர், பல சர்வதேச நிகழ்வுகளிலும் பயணங்களிலும் அவர் வழங்கிய ஆதரவை நினைவுகூர்ந்தார். சேகோனைப் பற்றி பேசுகையில், 2014–15-ம் ஆண்டின் மிகச் சிறந்த மாவட்ட ஆளுநர்களில் ஒருவராக அவர் திகழ்ந்ததாகக் கூறிய பிரபாகர், இயக்குநர் நியமனராக அவர் உயர்ந்தது ஆச்சரியமளிக்காத விஷயம் என்றார்.

நிகழ்ச்சியின் ஒருங்கிணைப் பாளரான PDG J B காம்தார், இரு தலைவர்களுக்கும் வாழ்த்து தெரிவித்ததுடன், அங்கு கலந்து கொண்ட மாவட்ட ஆளுநர் தேர்வாளர்கள் மற்றும் மாவட்ட ஆளுநர் நியமனர்களிடம் ஆழமான தாக்கம், அர்த்தமுள்ள ஈடுபாடு மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டார். உண்மையான ரோட்டரி தலைமைத்துவம் என்பது மற்றவர்களை சேவைக்கு ஊக்குவிப்பதிலும், அனைவரையும் உள்ளடக்கிய சூழலை உருவாக்குவதிலும் உள்ளது என்றார். நிகழ்ச்சியின் நிறைவில் PDG R சீனிவாசன் நன்றியுரை வழங்கினார்.

ரோட்டரி மாவட்டங்கள் 3233 மற்றும் 3234 இணைந்து நடத்திய இந்த நிகழ்வில், மண்டலங்கள் 5 மற்றும் 6-ன் முன்னாள், தற்போதைய மற்றும் வரவிருக்கும் மாவட்ட ஆளுநர்கள் பெருமளவில் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.■

# தமிழக MLA-க்களில் 10% சதவீதம் ரோட்டேரியன்கள்

ரோட்டரி செய்திக்குழு

2026-ம் ஆண்டு தமிழக சட்டப்பேரவை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல் கல்லை எட்டியுள்ளது. தேர்ந்தெடுக் கப்பட்ட 234 சட்டப்பேரவை உறுப்பினர்களில் 23 பேர் ரோட்டேரியன்கள். இது அவையின் மொத்த எண்ணிக்கையில் 10 சதவீதமாகும். இவர்களில் ஐந்து பேர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர்.

திருச்சியில் நடைபெற்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் இந்த ரோட்டேரியன் MLA-க்கள் கௌரவிக்கப்பட்டனர். இதற்கான பாராட்டு விழாவில் RI இயக்குநர் M முருகானந்தம், புதிய அமைச்சர்களையும், MLA-க்களையும் வரவேற்று பாராட்டினார். அவர் பேசுகையில், “உங்கள் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் ஒரே நேர்கோட்டில் பயணிக்கும்போது நீங்கள் சாதனைகளை நிகழ்த்த முடியும். நாம் யாராக இருந்தாலும், ரோட்டரியின் நான்கு வழி சோதனைகளை பின்பற்றி நடந்தால் நமது செயல்கள் நேர்மறையான விளைவுகளையே தரும்” என்று கூறினார்.

தலைமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திப் பேசிய அவர், “நமது வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் ஒரு நல்ல சட்டப்பேரவை உறுப்பினர், ஒரு நல்ல முதல்வர் அல்லது ஒரு நல்ல பிரதமர் என உயர் நிலையில் ஒரு நல்ல தலைவர் இருக்க வேண்டும் என்று விரும்பியிருப்போம். தலைமைப் பொறுப்பை ஏற்கும் எவரிடமும், குறிப்பாக மக்கள் பிரதிநிதியாகச் செயல்படுபவரிடம் அந்த நல்ல பண்பு இருக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.

RID 3206-ன் DG செல்லா ராகவேந்திரன் பேசுகையில், “ரோட்டேரியன் தலைவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நாட்டிற்கு நன்மை செய்ய வேண்டும் என்ற பொதுவான நோக்கத்தைக் கொண்டுள்ளனர்” என்று கூறினார்.

மாநில தொழில்துறை அமைச்சரும்




*பொள்ளாச்சி MLA K நித்யானந்தனுக்கு RI இயக்குநர் M முருகானந்தம் மரியாதை செலுத்துகிறார். RID 3203 PDG S சண்முகசுந்தரம், RID 2982 PDG P சரவணன் மற்றும் AKS உறுப்பினர் MLA லீமா ரோஸ், ஆகியோரும் உள்ளனர்.*




RI இயக்குநர் முருகானந்தம் மற்றும் RID 3206 DG செல்லா ராகவேந்திரன் MLA S கனிமொழியை கவுரவித்தனர். RID 3000 DG J லியோன் (இடது) மற்றும் பொள்ளாச்சி MLA நித்யானந்தன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

சிவகாசி சட்டப்பேரவை தொகுதி உறுப்பினருமான எஸ்.கீர்த்தனா பேசுகையில், “எங்களின் செயல் பாடுகள் மூலம் ரோட்டரி அமைப்பிற்கு பெருமை சேர்ப்போம். ரோட்டரி எங்களுக்கு கற்றுக்கொடுத்தவற்றைப் பின்பற்றி நாங்கள் உண்மையான ரோட்டேரியன்கள் என்பதை எங்கள் பணிகளின் மூலம் நிரூபிப்போம்” என்று கூறினார்.

அண்ணாமலை பல்கலைக்கழக ரோட்ராக்ட் சங்கத்தின் முன்னாள் தலைவரும், சுற்றுச்சூழல் பாதுகாப்புத்துறை அமைச்சருமான Dr V K ராஜீவ், தமது ரோட்ராக்ட் பயணத்தை நினைவுகூர்ந்தார். “ரோட்ராக்ட் காலத்தில் நாங்கள் எந்தவிதமான மாற்றத்தை உருவாக்க உழைத்தோமோ, அதே பணியை சமூக நலனுக்காக இன்னும் பெரிய அளவில் தொடர விரும்புகிறேன். நமது மாநிலத்தை மேம்படுத்த என்னுடன் இணைந்து செயல்பட்டு, ஆதரவு அளிக்குமாறும் உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்” என்று அவர் பேசுகையில் கூறினார்.

பொள்ளாச்சி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கே.நித்யானந்தன், ரோட்டேரியன்கள் எதிர்பார்ப்புகளை விடுத்து பங்களிப்புச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். “அமைப்பு மூலம் நமக்கு என்ன கிடைக்கும் என்பதைவிட அமைப்புக்கு நம்மால் என்ன செய்ய முடியும் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நமது கைகள் எப்போதும் சேவை செய்யும் கைகளாகவும், தாராளமாக வழங்கும் கைகளாகவும் இருக்க வேண்டும்” என்று அவர் கூறினார்.

கவுண்டம்பாளையம் தொகுதி MLA-வான எஸ்.கனிமொழியும் இதே கருத்தை வழிமொழிந்தார். தான் ஒரு ரோட்டேரியனாக இருப்பதில் பெருமை கொள்வதாகவும், தனது வெற்றியில் ரோட்டரி பயணம் முக்கியப் பங்காற்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சென்னை, அண்ணாநகர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் வி.கே.ராம்குமார் பேசுகையில், “ரோட்டரி அமைப்பின் சுயநலத்திற்கு அப்பாற்பட்ட சேவை என்ற குறிக்கோளே இன்றுவரை என்னை அர்ப்பணிப்புடன் சரியான பாதையில் பயணிக்க வைத்துள்ளது” என்று கூறினார்.


மதுரை கிழக்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.கார்த்திகேயன், ரோட்டரி அமைப்புடனான வாழ்நாள் பிணைப்பை வலியுறுத்திக்கூறும் போது, “நாம் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுமே சட்டப்பேரவை உறுப்பினர்களாக இருக்கலாம். ஆனால், வாழ்நாள் முழுவதும் ரோட்டேரியனாக இருக்க முடியும்” என்றார்.

மதுரை தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் M M கோபிசன், சேவையில் முழுக்கவனம் செலுத்த ரோட்டரி தமக்கு கற்றுக்கொடுத்ததாக கூறினார். “தொழில் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும்போதே சமூக மாற்றத்திற்குப் பங்களிக்க முடியும் என்பதை ரோட்டரி எனக்கு உணர்த்தியது” என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மூத்த ரோட்டரி தலைவர்கள் கலந்துகொண்டனர்.■




*மின்-கற்றல் வசதி செய்து தரப்பட்ட பள்ளிகளில் ஒன்றில், சங்க உறுப்பினர்களுடன் திட்ட ஒருங்கிணைப்பாளர் பங்கஜ் படேல் (வலதுபுறம், முழங்காலிட்ட நிலையில்).*




# பின்தங்கிய பள்ளிகளில் டிஜிட்டல் கற்றல் முறை

ரஷீதா பகத்

புனே ஃபார் ஈஸ்ட் ரோட்டரி சங்கம் (RID 3131), கூட்டாண்மை சக்தியை பயன்படுத்தி, தொலை தூரங்களில் உள்ள பின்தங்கிய பள்ளிகளில் டிஜிட்டல் கல்வி முறையை முன்னெடுத்துள்ளது. கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு நிதி (CSR) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இந்த திட்டத்திற்கு "சாக்ஷம்" என பெயரிடப்பட்டு ஏறக்குறைய 1,000 பள்ளிகளில் டிஜிட்டல் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மகாராஷ்டிரா முழுவதும் உள்ள சுமார் 2,40,000 மாணவர்கள் மற்றும் இந்தியாவின் வடகிழக்கில் உள்ள மிசோரம் மாநிலத்தின் அய்ஸ்வால் போன்ற தொலைதூரப் பகுதிகளில் உள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பயிலும் பின்தங்கிய பள்ளிகளில் கற்றல் முறையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த திட்டத்தின் தொடக்கத்தைப் பற்றி சங்கத்தின் முன்னாள் திட்ட ஒருங்கிணைப்பாளர் பங்கஜ் படேல் கூறுகையில், "கோவிட் தொற்றுக்காலத்தில் பள்ளிகள் மூடப்பட்டு மாணவர்கள் தங்கள் நேரத்தை கழித்துக் கொண்டிருந்தபோது தொலைதூர மற்றும் கிராமப்புற பள்ளிகளில் டிஜிட்டல் கல்வி முறையை (மின் கற்றல்) அறிமுகப்படுத்தலாம் என்கிற யோசனை ரோட்டேரியன்களுக்கு வந்தது. ஆரம்பத்திலிருந்தே நாங்கள் இதை ஒரு TRF-CSR திட்டமாக மாற்றி, சுட்டாட்டி என்டர்பிரசைஸ் மற்றும் சஹாயாத்ரி இண்டஸ்ட்ரீஸ் ஆகிய இரு நிறுவனங்களை முக்கிய கூட்டாளர்களாக கண்டறிந்தோம்" என்றார்.

கோவிட் தொற்றுக்காலத்துக்குப் பிறகும் இந்த திட்டம் தொடர்ந்தது. இந்த திட்டத்தின் கீழ் பள்ளிகளில் மின்னணு கற்றல் வசதிகள் (ஒவ்வொரு கருவியும் ரூ.50,000 மதிப்பிலானது.) ஏற்படுத்தப்பட்டன.

"வகுப்பறை கற்பித்தலுடன் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து அதன் மூலம் பின்தங்கிய குழந்தைகளுக்கு ஒளிமயமான கல்வி வாய்ப்புகளை உருவாக்குவதும், கிராமப்புற சமூகங்களில் கல்வியின் ஒட்டுமொத்த தரத்தை வலுப்படுத்துவதும் எங்கள் நோக்கமாக இருந்தது" என்கிறார் அவர்.

இதை ஒரு முழுமையான அறக்கட்டளை-CSR திட்டமாக மாற்றும் நோக்கத்துடன் இந்துபூர், அலிபாக், கோலாப்பூர் போன்ற தொலைதூர அல்லது கிராமப்புறங்களில் உள்ள சிறிய சங்கங்களைத் தொடர்புகொண்டு இதில் இணைக்கத் தொடங்கினோம்; ஏனெனில் இத்தகைய திட்டங்களை அவர்களாகவே செயல்படுத்த முடியாது. பிறந்தநாள், திருமணநாள், போன்ற நிகழ்வுகளுக்காக உறுப்பினர்கள் சங்கத்திற்கு

சிறிய தொகையை நன்கொடையாக அளிக்கும்போது ரூ.15,000 மட்டும் சேர்ந்தால்கூட, இத்திட்டத்தில் இணைவதன் மூலம் எங்கள் அறக் கட்டளையின் CSR மானிய உதவியுடன் அவர்கள் விரும்பும் பள்ளிக்கு ரூ.50,000 மதிப்புள்ள மின்னணு கற்றல் உபகரணங்களை வழங்க முடியும் என்று அவர்களிடம் விளக்கப்பட்டது.

விரைவிலேயே பாடத்திட்டத்திற்கு ஏற்ற ஒலி-ஒளி உள்ளடக்கங்கள், ஊடாடும் கற்றல் கருவிகள், ஆசிரியர் பயிற்சி மற்றும் தொடர்ச்சியான தொழில்நுட்ப ஆதரவு ஆகியவற்றுடன் கூடிய டிஜிட்டல் மின்னணு கற்றல் வகுப்பறைகளை அமைத்து ஈடுபாட்டுடன் கூடிய மற்றும் பயனுள்ள கற்றல் சூழலை உருவாக்கும் இந்த திட்டம் பெரும் வரவேற்பை பெற்றது.

கடந்த காலங்களில் இந்த திட்டம் மகாராஷ்டிரம் மற்றும் இதர பகுதிகளில் ஆயிரக்கணக்கான மாணவர்களை வெற்றிகரமாகச் சென்றடைந்துள்ளது. இது டிஜிட்டல் இடைவெளியைக் குறைக்கவும், தரமான கல்வியை உறுதிசெய்யவும் உதவுகிறது. டிஜிட்டல் வகுப்பறைகளை








*மேலே: மிசோரம் மாநிலத்தில் உள்ள ஒரு பள்ளியில் வழங்கப்பட்டுள்ள இணையவழி கற்றல் வசதி.*

*இடதுபுறம்: ஒரு பள்ளிக்கு ஸ்மார்ட் டிவியை வழங்கிய பிறகு, அங்குள்ள மாணவர்கள் மற்றும் பணியாளர்களுடன் படேல்.*



உருவகப்படுத்துதல், காணொளிகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் மாணவர்கள் கற்றுக்கொள்ள முடிகிறது. இது கற்றலை மகிழ்ச்சியானதாகவும், தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது என்று படேல் கூறுகிறார்.

இந்த திட்டத்தின் முக்கிய கார்ப்பொரேட் கூட்டாளர்களில் ஒருவரான சஹயாத்ரி இண்டஸ்ட்ரீஸ் கடந்த ஐந்து ஆண்டுகளில் (2020–2025) 513 பள்ளிகளில் 627 டிஜிட்டல் மின்னணு கற்றல் அமைப்புகளை நிறுவ ஆதரவளித்துள்ளது. இதன் மூலம் ஆண்டுதோறும் 1.3 லட்சம் மாணவர்கள் பயனடைகிறார்கள். இந்த மாபெரும் முயற்சியில் 160 ரோட்டரி சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

மற்றொரு CSR கூட்டாளியான சுட்டாட்டி என்டர்பிரைசஸ் நிறுவனம் முதலில் 1,00,000 டாலரும் பின்னர் இரண்டு தவணைகளில் 26,000 டாலரும் நிதியுதவி வழங்கியது. ரோட்டரியின் சேவைகள் இன்னும் முழுமையாகச் சென்றடையாத இந்தியப் பகுதிகளைச் சென்றடைய வேண்டும் என்று திட்டத்தின் முக்கியக் குழுவினர் விரும்பியதாக படேல் கூறினார். நாங்கள் காஷ்மீரை கருத்தில் கொண்டிருந்தோம். ஆனால், நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள பள்ளிகள் போதிய கவனம் பெறாமல் இருப்பதாகவும் அப்பகுதியில் ஏதாவது செய்ய வேண்டும் என்றும் எங்கள் CSR கூட்டாளியான சுட்டாட்டி என்டர்பிரைசஸ் விரும்பியது. எனவே டிஜிட்டல் வகுப்பறைகளை அமைப்பதற்காக நாங்கள் அய்ஸ்வால் பகுதியில் உள்ள பள்ளிகளைத் தேர்ந்தெடுத்தோம்.

இப்படித்தான் மிசோரம் மாநிலத்தில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் மின்னணு கற்றல் அமைப்புகள் நிறுவப்பட்டன. அய்ஸ்வாலில் நடைபெற்ற இத்திட்டத்தின் தொடக்க விழாவில் பேசிய மிசோரம் மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் வன்லால்த்லானா, மாணவர்களின் வாழ்க்கையை மாற்றக்கூடிய ஸ்மார்ட் டி.வி.க்களை ரோட்டரி அமைப்பு தனது மாநிலப் பள்ளிகளுக்கு வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். ஒரு சராசரி மாணவருக்கும் மிகச் சிறந்த மாணவருக்கும் இடையிலான




வித்தியாசம் பெரும்பாலும் புத்தி சாலித்தனம் சார்ந்தது அல்ல, அது புதிய விஷயங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு, வசதிகள் மற்றும் சரியான நேரத்தில், சரியான கற்றல் சூழல் கிடைப்பது ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம். வேகமாக மாறிவரும் உலகில், தொழில்நுட்பத்தில் நாம் பின்தங்கி விடக்கூடாது. புதுதில்லி, பெங்களூரு, புனே அல்லது நியூயார்க்கில் படிக்கும் மாணவருக்குக் கிடைக்கும் அதே தரமான கற்றல் வாய்ப்பு, மிசோரமில் உள்ள ஒரு சாதாரண பள்ளியில் படிக்கும் மாணவருக்கும் கிடைக்க வேண்டும்.

தொழில்நுட்ப முன்னேற்றத்தால் இத்தகைய இடைவெளியைக் குறைக்க முடியும். அதனால்தான் இந்த முயற்சி மிக முக்கியமானது. தாம் ஜஸ்வால் ரோட்டரி சங்கத்தின் முதல் தலைவராக இருந்ததாகவும், ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் பங்கேற்று திரும்பிய பிறகு, தன்னை அத்திட்டத்திற்கு தேர்ந்தெடுத்த ரோட்டேரியன்களின் வேண்டுகோளின் பேரில் அந்த ரோட்டரி சங்கத்தை தொடங்கியதாகவும் அவர் கூறினார். அவருக்கு அப்போது 18 வயதுகூட நிரம்பியிருக்கவில்லை. ஆனாலும் அவர், 1996-ம் ஆண்டில் ரோட்டரி சங்கத்தைத் தொடங்கி ஒரு இசை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்தார். மூன்று மாதங்களுக்குள்ளாகவே அவரது சங்கம் ரூ.1.5 லட்சம் நிதியை திரட்டியது. துரதிருஷ்டவசமாக அவர், கல்லூரி மாற்றத்தால் சங்கத்திலிருந்து விலக நேரிட்டது. இருப்பினும் அதன்



*பள்ளி ஒன்றில் ரோட்டேரியன்களை நடனத்துடன் வரவேற்க மாணவர்கள் தயாராக உள்ளனர்.*

கூட்டங்களுக்கு அவர் தொடர்ந்து அழைக்கப்பட்டார். இன்று அந்த ரோட்டரி சங்கத்தின் பல உறுப்பினர்கள் வெற்றிகரமான அதிகாரிகளாகவும், தொழிலதிபர்களாகவும் திகழ்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிராந்தியத்தில் உள்ள 10 பள்ளிகளில் மின்னணு கற்றல் வகுப்பறைகளை நடத்த உதவி செய்த புனே ஃபார் ஈஸ்ட் ரோட்டரி சங்கம் மற்றும் சுட்டாட்டி என்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கும் நன்றி தெரிவித்த அமைச்சர், கல்வியில் மாற்றத்தை அரசாங்கத்தால் மட்டுமே கொண்டுவர முடியாது என்று கூறினார். மாணவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்த சமூகம் பல்வேறு அமைப்புகள் மற்றும் பெரு நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். நாம் வளர்ந்த காலத்தைவிட இன்றைய உலகம் முற்றிலும் மாறுபட்டது. “அக்காலத்தில் வகுப்பறைகளில் தொலைக்காட்சிகள் இருந்ததில்லை. ஆனால், இன்று வகுப்பறை என்பது நான்கு சுவர்களுக்குள் அடங்கிவிடுவதில்லை. தகவல்கள் எங்கும் நிறைந்து கிடக்கின்றன, போட்டியும் உலகளாவியதாக உள்ளது. தகவல்களை மனப்பாடம் செய்பவர்களுக்கு அல்ல, மாறாக சிந்திக்கவும், சூழலுக்கு ஏற்ப மாறவும், கருத்துக்களை பரிமாறவும், புதியனவற்றை உருவாக்கவும், பாடபுத்தகங்களுக்கு அப்பால் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு மட்டுமே எதிர்காலம் சொந்தமாகும்” என்றும் அவர் கூறினார்.

தற்காலத்தில் தொழில்நுட்பப் பயன்பாடு முற்றிலும் மாறுபட்டதாக




உள்ளது."நான் இன்ஸ்டாகிராமில் இருக்கிறேன். அதைத் தொடர்ந்து கவனித்து வருகிறேன். சுவாரஸ்யமான காணொளிகளைப் பதிவிறக்கம் செய்து, நான் உரையாற்றும் கூட்டங்களில் இளைஞர்களுக்கு காட்டுகிறேன்" என்று வன்லால்த்லான கூறினார். மாணவர்களின் ஆர்வத்தைத் தக்கவைக்கத் தொழில்நுட்பத்தை எவ்வாறு திறம்பட பயன்படுத்துவது என்பதே இன்றைய ஆசிரியர்கள் முன் உள்ள சவாலாகும். இன்று ஆசிரியர்களுக்கு தொழில்நுட்பம் என்ற கூடுதல் ஆற்றல் கிடைத்துள்ளது. அதை தங்கள் நன்மைக்காகப் பயன்படுத்த அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தொழில்நுட்பம் ஒருபோதும் ஆசிரியர்களுக்கு மாற்றாக அமையாது என்று உறுதியளித்த அவர், செயற்கை நுண்ணறிவை (AI) முழுமையாகப் பயன்படுத்தி தொழில்நுட்பத்தின் மூலம் ஆசிரியர்கள் அதிக பலன் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தங்கள் CSR கூட்டாளியின் விருப்பத்திற்கு இணங்க வடகிழக்குப் பகுதியில் உள்ள பள்ளிகளில் மின்னணு கற்றல் சாதனங்களை நிறுவியதில் சங்க உறுப்பினர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்ததாகப் படேல் கூறினார். "இந்த மின்னணு கற்றல் சாதனங்கள் பழங்குடியின குழந்தைகளுக்கு அளித்த மிகழ்ச்சியைக் காண்பது மிகுந்த மனநிறைவைத் தந்தது. கால் அகற்றப்பட்ட ஒரு சிறுமி, தொலைக்காட்சித் திரையில் கற்றல் அனுபவத்தை பெற்ற பிறகு, மகிழ்ச்சித் துள்ளலில் இருந்ததைக் கண்டு நாங்கள் நெகிழ்ந்து போனோம்."

தற்போது நிதியுதவி அளிக்கும் நிறுவனம் எங்களுக்கு கூடுதல் CSR நிதியை வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. சுட்டாட்டி என்டர்பிரைசஸ் நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் 484 பள்ளிகளில் 650 டிஜிட்டல் கற்றல் கருவிகளை நிறுவுவதற்கு ஆதர வளித்துள்ளது. இதன் மூலம் 1.11 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் 164 ரோட்டரி சங்கங்கள் பங்கேற்றன.

சாக்ஷம் திட்டத்தின் கூட்டு முயற்சியுடன் இதுவரை 997 பள்ளிகளில் 1,277 டிஜிட்டல் கற்றல் கருவிகள் நிறுவப்பட்டு 2.41 லட்சத்திற்கும் அதிகமான மாணவர் களுக்கு இணையவழி கற்றல் வசதி சென்றடைந்துள்ளது என்று படேல் மேலும் கூறினார்.

இந்தக் கல்வித் திட்டம் அனிமேஷன் மற்றும் கலந்துரையாடல் உள்ளிட்ட உள்ளடக்கங்கள் மூலம் மாணவர்களின் புரிதலை மேம்படுத்தியுள்ளது. வருகைப் பதிவு, பங்கேற்பு மற்றும் கற்றல் ஆர்வம் அதிகரித்துள்ளது. அத்துடன் கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்கள் உடனடியாகப் பயன்படுத்தக்கூடிய டிஜிட்டல் கற்பித்தல் வளங்கள் மூலம் தொழில்நுட்பத்தைப் பின்பற்ற உதவியுள்ளது. இந்த முயற்சியின் மூலம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்கள் இடையிலான கல்வி சமத்துவமின்மையை குறைக்க முடியும் என்றும் நிலையான டிஜிட்டல் கற்றல் சூழலை உருவாக்க முடியும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இறுதியாக மிசோரமில் ரோட்டரி அமைப்பின் முயற்சிக்கு நன்றி தெரிவித்த மாநில அமைச்சர் கூறியதாவது: " இன்னும் பல ஆண்டு களுக்குப் பிறகு இத்திட்டத்தில் பயின்ற 15 வயதுடைய ஒரு குழந்தை விஞ்ஞானியாகவோ, தொழில் முனைவராகவோ, ஆசிரியராகவோ, கலைஞராகவோ அல்லது தலை வராகவோ மாறக்கூடும். இத்தகைய முயற்சியின் மூலம் எத்தனைப் பேரின் வாழ்க்கையில் நீங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகிறீர்கள் என்பதை ஒருபோதும் உங்களால் முழுமையாக உணர முடியாது. நீங்கள் அவர்களுக்கு வழங்கிய கற்றல் அனுபவம் மற்றும் உதவி ஆகியவை அவர்களின் எதிர்காலப் பாதையைத் தீர்மானிக்கும்".■




*பள்ளியில் மாணவர்கள் ரோட்டேரியன்களைப் பாடலுடன் வரவேற்கின்றனர்.*

## கொல்கத்தா மருத்துவமனையில் புதிய டயாலிசிஸ் மையம்

ரோட்டரி செய்திக்குழு



*டயாலிசிஸ் மையத்தின் திறப்பு விழாவில் PDG-க்கள் அங்ஷுமன் பந்தியோபாத்யாய் (இடதுபுறம்) மற்றும் சுதீப் முகர்ஜி (இடமிருந்து மூன்றாவதாக).*

பெலியாகட்டா-விலுள்ள IDBG மருத்துவ மனையில் 5 இயந்திரங்களுடனான டயாலிசிஸ் மையத்தை அமைத்துள்ளது RC ஆரோஹீ கல்கத்தா, RID 3291. இது அவர்களுடைய பன்னாட்டுக் கூட்டாளரான வேக் ஃபாரஸ்ட் ரோட்டரி சங்கம், RID 7710, US, வழங்கிய $15,000 DDF பங்களிப்புடனான ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாகச் செய்யப்பட்டது.

அப்போதைய DG ஹீராலால் யாதவ் (2023–24) இந்தத் திட்டத்துக்காக $7,000 மாவட்ட நிதியை வழங்கினார். மீதியுள்ள தொகை உறுப்பினர் பங்களிப்புகளின் வழியாகப் பெறப்பட்டது.

US சங்கத்தைச் சேர்ந்த அறக்கட்டளைக் குழுத் தலைவர் சுபீர் முகர்ஜி, RC ஆரோஹீ கல்கத்தா ரோட்டரியன்களுடன் இதை ஒருங்கிணைத்தார். இந்தச் சங்கம் ஸ்டெர்லிங் மருத்துவமனையைச் சேவை வழங்குநராகத் தேர்ந்தெடுத்துவிட்டு, மேற்கு வங்காள அரசாங்கத்துடன் PPP மாதிரியில் இணைந்து பணியாற்றி, பலன் பெறும் மருத்துவமனையை அடையாளம் கண்டது.

இந்த இயந்திரங்கள் ஸ்டெர்லிங் மருத்துவமனை யுடன் இணைந்து நிறுவப்பட்டன. மே 2025-ல் ஒரு பரிசோதனைச் செயல்பாடு நடத்தப்பட்டது. 2020–21-ல் இந்தச் சங்கத்தைப் பதிவு செய்த DRFC சுதீப் முகர்ஜி மருத்துவமனை வளாகத்தில் புதிய டயாலிசிஸ் மையத்தைத் தொடங்கிவைத்தார். அதன்பிறகு, இந்த மையம் மாதத்துக்கு 700-800 டயாலிசிஸ் செயல்பாடுகளுடன் 24x7 இயங்கத் தொடங்கியது. இந்த வளாகத்திலிருந்து 2,400 முதல் 3,000 சிறுநீரக நோயாளிகள் பலன் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.■



## ஹோலா, பார்செலோனா!

வரும் ஜூன் மாதத்தில் RI மாநாடு பார்செலோனாவுக்கு வருகிறது. இந்தக் கடலோர நகரத்தைப் பார்த்திருக்கிற அல்லது இங்கு வசிக்கிற உறுப்பினர்கள் மகிழ்ச்சியில் துள்ளுகிறார்கள்.

இங்கு பார்க்க வேண்டிய இடங்கள் என்றால், ஜூன் 26 முதல் 30 வரையிலான மாநாட்டின் நாட்கள் பார்செலோனாவின் முதன்மையான சுற்றுலா இடமாகிய சக்ரடா ஃபமிலியா பாசிலிகா-வைப் பார்க்க மிகச் சிறந்த நேரமாகும். 140 ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற, அன்டொனி கௌடி-யின் மிகச் சிறந்த படைப்பான இந்தக் கட்டடத்தின் கடைசியான, மிக உயரமான கோபுரம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்டி முடிக்கப்பட்டது ஒரு பெரிய மைல் கல்லாகும்.

பல உறுப்பினர்கள் 2002-ல் இங்கு நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டபின் மீண்டும் இங்கு வருவதற்கு ஆவலாக உள்ளார்கள். 2019-க்குப்பின் ஐரோப்பாவில் நடைபெறும் முதல் மாநாடு இதுதான் என்பதால், ஐரோப்பிய உறுப்பினர்கள் இதில் பங்கேற்க உறுதியாக உள்ளார்கள். ஸ்பெயினைச் சேர்ந்த ரோட்டரியன்களும் ரோட்டராக்டர்களும் கதகதப்பான மனநிலை, வியப்பூட்டும் கட்டுமானக் கலை, பல ஆண்டுகளுக்கு நினைவில் நிற்கும் உணவு, சிறப்பான மையத் தரைக்கடல் கடற்கரைகளைக் கொண்ட இந்த நகரத்துக்கு உங்களை வரவேற்கக் காத்திருக்கிறார்கள்.



பிளாகா டீஎஸ்பான்யா-வில் நடக்கலாம், பரந்து விரிந்த நகரத்தில் அருங்காட்சியகங்கள், பொதுக் கலை, உணவகங்கள், காளைச் சண்டை அரங்கம், மந்திர நீரூற்று ஒளி நிகழ்ச்சியைப் பார்த்து மகிழலாம். பூங்காக்கள், விளையாடும் இடங்கள், கௌடி-யின் அழகான கட்டுமானக்கலையை உடைய குயெல் பூங்காவுக்கு முன்கூட்டியே நுழைவுச் சீட்டுகளைப் பதிவு செய்துவிடுங்கள்.

மாநாட்டுக் குழுவினர் எந்தெந்தப் பேச்சாளர்கள், கலைஞர்கள், சுற்றுலாக்கள், கற்றல் தலைப்புகள், ஊக்கங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள்? அவர்கள் நம்மை வியக்கவைக்கும் ஒரு திட்டத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ரோட்டரி மரபுகளை, உலகத் தரத்திலான அனுபவங்களை, அழுத்தமில்லாத பயணங்களுக்கான வாய்ப்புகளை ஒன்று சேர்ப்பார்கள்.

செப்டம்பர் முதல் இந்த மாநாட்டுக்குப் பதிவு செய்யலாம். மேலும் அறிய: *convention.rotary.org.*

# ரோட்டரியின் கூட்டு முயற்சியால் வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தும் கிராமப்புறபள்ளி

கிரண் ஜெஹரா



*ஸ்ரீவள்ளி வரதராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் யோகா நிகழ்ச்சி.*

தமிழ்நாட்டின் தேனி மாவட்ட கிராமப்புற பகுதிகள் வழியாகச் செல்லும் குறுகலான, சீரற்ற சாலைகளில் பள்ளிப் பேருந்து மெதுவாக அசைந்தபடி செல்கிறது. வெளியே பசுமையான நெல் வயல்கள் அடிவானம் வரை பரந்து கிடக்கின்றன. சமீபத்திய மழையால் சாலைகளில் ஆங்காங்கே சேறும் சகதியும், பள்ளங்களும், சாலையோரங்களில் முட்செடிகளும் காணப்படுகின்றன. ஆனால், பேருந்துக்குள்ளே சூழல் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது.

பள்ளி முடிந்ததும் வீடு திரும்பும் குழந்தைகள் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வேர்க்கடலை மிட்டாய் மற்றும் முறுக்கு பாக்கெட்டுகள் இருக்கைகளுக்கு இடையே பரிமாறப்படுகின்றன. 1 முதல் 5-ம் வகுப்பு வரையிலான மாணவர்கள் சிரித்து மகிழ்ந்தபடியும், அன்றைய நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டபடியும் பயணம் செய்கிறார்கள். சிலர் ஜன்னல் வழியாக வெளியே தெரியும் வயல்களை வேடிக்கை பார்க்கிறார்கள். அதே நேரத்தில் பள்ளியில் நீண்டநேரம் கழித்ததால், சோர்வடைந்த ஒரு சிறுவன், ஆசிரியரின் மடியில் தலையை வைத்தபடி நிம்மதியாக உறங்குகிறான்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, இவர்களில் பலர் பள்ளிக்கு ஐந்து கிலோ மீட்டர் நடந்தே சென்றிருப்பார்கள். சிலர் எட்டு அல்லது பத்து கி.மீ. தொலைவுவரைகூட பயணம் செய்திருக்கலாம். அதுவும் இப்போது பேருந்து எளிதாகச் செல்லும் அதே கடினமான சாலைகளில்தான் அவர்கள் பயணித்தார்கள்.

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டிக்கு அருகிலுள்ள ஸ்ரீவள்ளி வரதராஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியின் மாணவர்களை இந்த புதிய பேருந்துகள் பாதுகாப்பாக வீடு சேர்க்கின்றன. சாதாரண மஞ்சள் நிற வாகனங்களாக இவை தோன்றினாலும், இவை முக்கியமான ஒன்றை குறிக்கின்றன. அதுதான் “கல்விக்கான அணுகல்” என்று பள்ளியின் முதல்வர் வி.ராஜேந்திர பிரசாத் கூறுகிறார். கிராமப்புறச் சூழலில் வளரும் குழந்தைகளுக்கு தூரம் மற்றும் சூழ்நிலைகள்

காரணமாக வாய்ப்புகள் பெரும்பாலும் குறைவாகவே அமைகின்றன. இந்தப் பேருந்துகள் அந்த இடைவெளியைக் குறைக்க உதவுகின்றன.

தமிழகத்தில் வைகை அணைக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தில் கரும்புத் தோட்டங்கள் மற்றும் தென்னந்தோப்புகளுக்கு நடுவே, இரைச்சல் மற்றும் மாசுபாட்டிலிருந்து விலகி, அமைதியான சூழலில் ஸ்ரீ வள்ளி வரதராஜ் மெட்ரிகுலேஷன் பள்ளி அமைந்துள்ளது. வரதராஜ் நகர் என்று அழைக்கப்படும் இப்பகுதி, கோயம்புத்தூரைச் சேர்ந்த தொழிலதிபரும், கல்வியாளரும், ரோட்டரி மாவட்டம் 3201-ன் முன்னாள் மாவட்ட ஆளுநருமான பி.எஸ்.ஜி. குடும்பத்தைச் சேர்ந்த ஜி.வரதராஜ் நினைவாகப் பெயரிடப்பட்டது. ஜி.வி. என்று அன்புடன் அழைக்கப்பட்ட இவர், மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.


*தொடக்கப்பள்ளி மாணவர்கள் பள்ளி முடிந்ததும் வீடு திரும்புகின்றனர்.*

### தொடக்க காலம்

தனது நெருங்கிய நண்பரும், தமிழக முன்னாள் முதல்வருமான எம்.ஜி.ராமச்சந்திரனிடம் (எம்.ஜி.ஆர்.) கோயம்புத்தூரில் ஒரு மருத்துவக் கல்லூரியை அமைக்க வேண்டும் என்று ஜி.வி. வேண்டுகோள் வைத்தார். அப்போது எம்.ஜி.ஆர். அவரிடம் ஒரு யோசனையை முன்வைத்தார். கரும்பு விளைச்சல் அதிகம் உள்ள பகுதியான தனது தொகுதியான ஆண்டிப்பட்டியில் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவுமாறு கேட்டுக் கொண்டார். இப்படி வேலைவாய்ப்பு இல்லாமல், தரிசு நிலமாக இருந்த இடத்தில் உருவானதுதான் “ராஜஸ்ரீ சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ்” நிறுவனம். இன்று இந்த ஆலை, நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயிரக்கணக்கான கிராம மக்களுக்கும் கரும்பு விவசாயிகளுக்கும் வருமானம் அளிக்கும் ஒரு முக்கிய ஆதாரமாகத் திகழ்கிறது. ஜி.வி.யின் மகளான ராஜஸ்ரீ பதி இதன் நிர்வாக இயக்குநராகவும், கோயம்புத்தூர் டெக்ஸ்சிட்டி ரோட்டரி சங்கத்தின் (RID 3206) முதல் பட்டயத் தலைவராகவும் உள்ளார்.

அப்பகுதியில் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய பிறகு, அந்தப் பகுதி குழந்தை களுக்காக ஒரு பள்ளியை உருவாக்க ஜி.வி. விரும்பினார். ஆனால், அதைச் செயல்படுத்தும் முன்பே அவர் காலமானார். பின்னர் 2007-ம் ஆண்டில் ஆலைக்கு அருகில் உள்ள 18 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பள்ளியை நிறுவி, தனது தந்தையின் கனவை ராஜஸ்ரீ நனவாக்கினார்.

### தற்போதைய நிலை

அருகிலுள்ள கிராமங்களிலிருந்து மாணவர்கள் இப்பள்ளிக்கு வருகின்றனர். பெரும்பாலான பெற்றோர்கள் விவசாய நிலங்கள், நெசவுக்கூடங்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள். “எங்கள் மாணவர்களின் பெற்றோர்களில் பொருளாதார ரீதியில் மிகவும் வசதியானவர் ஒரு பேருந்து நடத்துனர்தான்” என்று புன்னகையுடன் கூறினார் பிரசாத்.

மாணவர்களில் பெரும்பாலோர் தங்கள் குடும்பத்தில் முதல் முறையாகப் பள்ளிக்குச் செல்லும் தலைமுறையைச் சேர்ந்தவர்கள். “தங்கள் குழந்தைகளுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் அவர்களை பள்ளிக்கு அனுப்புகிறார்கள். நாங்கள் அவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்கவும், அவர்கள் தங்கள் மீதே நம்பிக்கை கொள்ள உதவவும், அதேசமயத்தில் கட்டணம் செலுத்த முடியாத சூழலால் எந்த ஒரு குழந்தையும் கல்வியை இழக்காமல் இருப்பதையும் உறுதிசெய்யவும் விரும்புகிறோம்”.

### ரோட்டரியுடனான தொடர்பு

ராஜஸ்ரீ, தனது தந்தையின் நம்பிக்கைக்குரிய நண்பரான PDG S கிருஷ்ணசாமியை இந்தப் பள்ளியின் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் தேர்ந்தெடுத்தார். அவர், அப்பணியை இன்றும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செய்து வருகிறார். பல ஆண்டுகளாக அவர் சக ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களிடம் ஆதரவு திரட்டி வருகிறார். அவர் குழந்தைகள் எதிர்கொள்ளும் சிரமங்களைப் பற்றிப் பேசுவது அரிது; மாறாக அவர்களின் திறமை, ஆற்றல் மற்றும் வெற்றிபெற வேண்டும் என்ற உறுதிப்பாடு ஆகியவற்றைப் பற்றியே அதிகம் பேசுகிறார். “நான் நண்பர்களையும், சக ரோட்டரி உறுப்பினர்களையும் சந்திக்கும் போது, எங்கள் மாணவர்கள் பற்றியும் அவர்களின் சிறப்பான செயல்திறன் பற்றியும் அவர்களிடம் கூறுவேன். பள்ளியை நேரில் வந்து பார்வையிடுமாறு அவர்களை

அழைப்பேன்” என்று கூறுகிறார் மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் (RID 3234) உறுப்பினரான கிருஷ்ணசாமி. பலரும் அவ்வாறே பள்ளியை வந்து பார்வையிடுகின்றனர்.

ஒரு சாதாரண வருகையாகத் தொடங்கும் நிகழ்வு, பெரும்பாலும் நீண்டகாலத் தொடர்பாக மாறுகிறது. காலப் போக்கில், அந்த வருகைகள் ரோட்டரி கூட்டாண்மைக்கான ஒரு வலுவான கட்டமைப்பாக வளர்ந்துள்ளது.

59,388 டாலர் மதிப்பிலான உலகளாவிய மானியத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் ரோட்டரி சங்கம் (RID 3206) மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வின்னம் அண்ட் மான்லி ரோட்டரி சங்கம் (RID 9260) இரண்டும் இணைந்து இரண்டு பள்ளிப் பேருந்துகள் மற்றும் வகுப்பறை தளவாடங்களை வழங்கியுள்ளன.

71,500 டாலர் மதிப்பிலான இரண்டாவது உலகளாவிய மானிய உதவித் திட்டத்தின் மூலம் சென்னை கோரமண்டல் ரோட்டரி சங்கம் (RID 3234) மற்றும் கனடாவின் கட்டராகி-கிங்ஸ்டன் ரோட்டரி சங்கம் (RID 7040) இரண்டும் இணைந்து இரண்டு பேருந்துகள் மற்றும் ஆசிரியர்கள் பயிற்சிக்கு தேவையான உதவிகளை செய்துகொடுக்கவும் முன்வந்துள்ளன.


வேதியியல் ஆய்வகத்தில் மாணவர்கள்.


பள்ளி காய்கறித் தோட்ட அறுவடை.


கைப்பந்து மைதானத்தில் மாணவர்கள்.



கடந்த காலங்களில் ரோட்டரி சங்கங்கள், தனிப்பட்ட முறையில் ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் நலம் விரும்பிகள் இப்பள்ளிக்கு சுமார் ரூ.20 லட்சம் மதிப்பிலான கணினி கருவிகள், ரூ.3 லட்சம் மதிப்பில் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகளை அமைத்தும், சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் உதவித்தொகைகளை உருவாக்குதல் போன்ற பணிக்கு உதவிவந்துள்ளனர். சமீபத்தில் மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் (RID 3234) நிதியுதவியுடன், தேனி ஸ்டார்ஸ் மற்றும் திண்டுக்கல் குயின்சிட்டி ரோட்டரி சங்கங்கள் (RID 3000), இணைந்து HPV தடுப்பூசி முகாமுக்கு ஏற்பாடு செய்தனர். இதில் சுமார் 70 மாணவர்கள் தடுப்பூசி போட்டுக் கொண்டனர்.

பள்ளியைப் பார்வையிட்டு மாணவர்களின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்ட ஃப்ரீமேசன்ஸ் குழுவினர், மூன்று மாணவர்களின் கல்விக் கட்டணத்தை ஏற்றுக்கொண்ட நிகழ்வை கிருஷ்ணசாமி நினைவு கூர்ந்தார்.

### வகுப்பறைக்குள்

பெரும்பாலான மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் ஆங்கிலத்தில் உரையாடுகிறார்கள். “தங்கள் குடும்பத்திலேயே முறையான கல்வியைப் பெறும் முதல் தலைமுறையினராகப் பலர் இருக்கும் சூழிலில், இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்: என்று பிரசாத் குறிப்பிடுகிறார்.



*மாணவர்களுடன்*
PDG S *கிருஷ்ணசுவாமி.*



அவர்கள் விவாதங்கள், பேச்சுப் போட்டிகள் மற்றும் பள்ளிகளுக்கு இடையிலான மற்ற நிகழ்வுகளில் தொடர்ந்து பங்கேற்கின்றனர். ஸ்டெம் ஆய்வகத்தில், மாணவர்கள் தங்கள் திட்டப் பணிகளைப் பார்வையாளர்களுக்குப் பெருமையுடன் விவரிப்பதோடு, அதிலுள்ள கோட்பாடுகள் மற்றும் பரிசோதனைகளை ஆச்சரியப்படும் வகையில் எளிமையுடன் விளக்குகிறார்கள்.

நன்கு அமைக்கப்பட்ட ஆய்வகங்கள், மாணவர்கள் மற்றும் மாணவியருக்கான முறையாகப் பராமரிக்கப்படும் கழிப்பறைகள் மற்றும் கை கழுவும் இடங்கள் ஆகியவை இப்பள்ளியின் சிறப்பு அம்சங்களாகும். ஆண்டுதோறும் தோல், கண் மற்றும் பல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்றன. அத்துடன் வளர் இளம் பருவ மாணவிகளுக்கு மாதவிடாய் கால சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு மற்றும் மேற்படிப்புக்கான வழிகாட்டுதல் கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன.

“அருகில் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் செய்முறை வகுப்புகளுக்காக எங்கள் ஆய்வக வசதிகளைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர்” என்று பிரசாத் கூறுகிறார்.

மாணவர்களால் பராமரிக்கப்படும் காய்கறித் தோட்டம், இரண்டு கைப்பந்து மைதானங்கள், ஒரு பெரிய விளையாட்டு மைதானம், மழலையர் பிரிவினருக்கான விளையாட்டுப் பகுதி மற்றும் ஒரு நூலகம் இப்பள்ளியில் அமைந்துள்ளது சிறப்பு அம்சமாகும்.

“பல ஆண்டுகளாகச் செலுத்தப்படாத கல்விக் கட்டண நிலுவைத் தொகை சுமார் 2 கோடியாக உயர்ந்துள்ள போதிலும் பொருளாதார நெருக்கடியில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு விலக்கு அளித்து எங்கள் பள்ளி தொடர்ந்து வாய்ப்பு அளித்து வருகிறது” என்கிறார் கிருஷ்ணசாமி. மேலும் தனது குடும்ப உறுப்பினர்களின் பெயரில் சிறந்த மாணவர்களுக்கு அவர் கல்வி உதவித்தொகைகளையும் அவர் வழங்கி வருகிறார்.

படங்கள்: கிரண் ஜெஹரா

# 7 தம்பதிகள் திருமணத்திற்கு உதவிய ராஜ்புரா ரோட்டேரியன்கள்

ரஷீதா பகத்

ஒவ்வொரு ஆண்டும் கிரேட்டர் ராஜ்புரா ரோட்டரி சங்கம் (RID 3090) ஏழை குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு சமஷ்டி திருமணம் நடத்தி வைக்கிறது. இதில் மதச் சடங்குகள், மணப்பெண் அணியும் உடை, உணவு மற்றும் புதுமணத் தம்பதிகளின் அடிப்படைத் தேவைக்கான வீட்டு உபயோகப் பொருள்கள் தொடர்பான அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொள்கிறது.

இந்த ஆண்டும், ஏப்ரல் மாதத்தில் மணமகன், மணமகள் ஆகியோர் அடங்கிய 7 இளம் தம்பதிகளுக்கு பாரம்பரிய இந்திய முறையில் விமரிசையாக திருமணம் செய்துவைக்கப்பட்டது. மதச் சடங்குகளுக்கு ஏற்பாடு செய்வது முதல் விருந்தினர்களுக்கு உணவு வழங்குவது உள்பட அனைத்து ஏற்பாடுகளையும் ரோட்டேரியன்கள் செய்திருந்தனர். இது தொடர்பாக சங்கத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய செயலாளருமான மனோஜ் மோடி கூறுகையில், “பெரும்பாலான இந்தியத் திருமணங்களைப் போலவே, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 7 ஆடவர், மகளிர்க்கு கண்ணியத்துடனும், விமரிசையாகவும் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களுடனும் திருமணம் செய்துவைக்க சங்கம் முடிவு செய்தது” என்றார்.

இந்த முழு நிகழ்விற்கு சுமார் ரூ.10 லட்சம் செலவிடப்பட்டது. மேலும் ஒவ்வொரு தம்பதியினருக்கும் படுக்கை, மெத்தை, பயணப் பெட்டி, மணப்பெண்களுக்கு ஒப்பனைப் பொருள்களுடன் கூடிய திருமண உடைகள், மணமகன்களுக்கு ஷெர்வானி உடைகள், மணப் பெண்களுக்கு ஏழு செட் ஆடைகள், மணமகன்களுக்கு மூன்று செட் ஆடைகள், நான்கு நாற்காலிகள் கொண்ட ஒரு சிறிய சாப்பாட்டு மேஜை,



*புதிதாகத் திருமணமான தம்பதியினர் கேக் வெட்டித் தங்கள் திருமண நாளைக் கொண்டாடுகிறார்கள்.*

சமையலறை பாத்திரங்கள், மற்றும் சங்க உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் வழங்கிய வீட்டு உபயோகப் பொருள்கள் பரிசாக வழங்கப்பட்டன. தையல் தெரிந்த பெண்களுக்கு அவர்கள் வாழ்வாதாரத்தை பெருக்கிக் கொள்ள தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

“மணமகள் மற்றும் மணமகன் ஆகிய இரு குடும்பங்களிலிருந்தும் 500-க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் திருமண விழாவில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு அறுசுவை உணவும் வழங்கப்பட்டது என்று மாவட்டச் செயலாளர் நவீன் கர்க் கூறினார்.

இதுவரை ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 150 தம்பதிகளின் திருமணத்துக்கு சங்கம் உதவியுள்ளது. பெண்ணுக்கு வரன் பார்த்து, தம்பதிகள் தேர்வு செய்வதில் ரோட்டேரியன்களுக்கு எந்த பங்கும் இல்லை. இந்த திருமண உதவித் திட்டம் தொடர்பாக நாங்கள் சமூக ஊடகங்கள், பேனர்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் விளம்பரம் செய்து வருகிறோம். பல ஆண்டுகளாக இதைச் செய்து வருவதால் இந்த திட்டம் பற்றி மக்களுக்கு நன்கு தெரியும். எனவே மணமகன் அல்லது மண மகளைத் தேர்ந்தெடுத்த ஏழைக் குடும்பத்தினரிடமிருந்து எங்களுக்கு விண்ணப்பங்கள் வருகின்றன.

விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் மண மகன் மற்றும் மணமகளின் ஆதார் அட்டை மூலம் அவர்கள் திருமண வயது தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளார்களா என்று குழு சரிபார்க்கும். குடும்பத்தினரின் பொருளாதாரச் சூழ்நிலை மற்றும் பிற தகுதிகளும் ஆய்வு செய்யப்படும். மேலும் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரை நன்கு தெரியும் என கிராமத் தலைவர் சான்றளிக்க வேண்டும். திருமணச் செலவுகளை ஏற்க முடியாத ஏழை குடும்பத்தினர் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும். அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களின் திருமணத்தையும் சங்கம் நடத்தி வைக்கிறது. இந்துக்களுக்கு புரோகிதர்கள் மூலம் திருமணம், முஸ்லிம்களுக்கு மௌல்வி அல்லது காஜி மூலம் நிக்கா திருமணம் செய்துவைக்கப்படுகிறது. கிறிஸ்தவர்களுக்கு தேவாலயத்திலும் சீக்கியர்களுக்கு குருத்வாராவிலும் திருமணம் செய்துவைக்கப்படுகிறது.

மாவட்ட ஆளுநர் பூபேஷ் மேத்தா, இந்தத் திட்டத்தில் ஆர்வம் காட்டி, சங்கம் நடத்தும் சமஷ்டி திருமணங்களுக்கு அவரே தலைமை தாங்குகிறார்,



மணமக்களை வாழ்த்துகிறார் என்று மோடி மேலும் கூறினார். “இன்றைய காலகட்டத்தில் அதிகரித்து வரும் செலவுகள் காரணமாக பொருளாதார ரீதியாக நலிந்த வகுப்பினருக்கு திருமணங்களை நடத்துவது என்பது கடினமாக உள்ளது. ஒரு குடும்பம் நல்ல உணவுடன் ஒரு கண்ணியமான திருமணத்தை ஏற்பாடு செய்யாவிட்டால் மற்றவர்கள் கேலி பேசுகின்றனர். இந்த சூழலில் ஒரு திருமணம் உறுதியற்ற அடித்தளத்தில் தொடங்குகிறது. எனவே, நாங்கள் சமூகத்திற்கு உண்மையாக சேவை செய்ய இந்த திட்டத்தை ஆதரித்து வருகிறோம்” என்று மேத்தா கூறுவதாக மோடி கூறினார்.

அப்படியானால், வரதட்சணை விவகாரம் என்ன? என்று கேட்டதற்கு, “அதுபோன்ற கேள்விக்கே இடமில்லை” என்று அவர் பதில் கூறினார்.

சங்கத்தின் தலைவர் Dr சுரீந்தர்குமார் தலைமையில் அனைத்து ரோட்டேரியன்களும் இந்த திட்டத்திற்காக பணியாற்றிய போதிலும், திட்டத்திற்கான நிதியில் பெரும்பகுதி தீபக் சூத் (அமெரிக்கா), வினீஷ் சக் (கனடா) ஆகிய இரு வெளிநாடு வாழ் இந்தியர்களால் வழங்கப்பட்டது.■



*சங்க உறுப்பினர்களின் முன்னிலையில் திருமணச் சடங்குகள் நடைபெறுகின்றன.*

# அம்ரித் வனம்: சென்னை ஐஐடி வழித்தடத்தில் உருவாகும் பசுமைப் புரட்சி

V முத்துக்குமரன்

ஜூன் மாதத்தின் கடுமையான கோடை வெயில் முகத்தில் வியர்வையை வரவழைத்துக் கொண்டிருந்த போதிலும், ரோட்டரி மாவட்டம் 3234-ன் நூற்றுக்கணக்கான ரோட்டேரியன்களும் ரோட்டராக்டர்களும் உற்சாகத்துடன் ஒரு சிறப்பான பணியில் ஈடுபட்டிருந்தனர். உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5-ஐ முன்னிட்டு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் தரமணி வளாகத்தில் அமைந்துள்ள 48 ஏக்கர் நிலப்பரப்பில் 15,000 மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்தப் பெரும் மரநடுகை நிகழ்விற்காக நிலப்பரப்பில் முன்கூட்டியே குழிகள் தோண்டப் பட்டிருந்தன. கைகளில் மண்வெட்டிகளும் மரக்கன்றுகளும் ஏந்திய தன்னார்வலர்கள் வெயில், வியர்வை, மண் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் மரநடுகைப் பணியில் ஈடுபட்டனர்.

'அம்ரித் வனம்' என்ற இந்தத் திட்டத்தின் நோக்கம், சென்னை ஐடி வழித்தடப் பகுதியில் ஒரு நகரக் காடை உருவாக்குவதாகும். இரண்டு மணி நேரத்திற்குள் ஆயிரக்கணக்கான பழமரங்கள், கொடிவகைகள், புதர்கள், வெப்பமண்டல மரங்கள் மற்றும் காட்டுமர இனங்கள் நடப்பட்டன. ரோட்டரி உறவின் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் இந்த நிகழ்வில் வெளிப்பட்டது.

மாவட்ட ஆளுநர் வினோத் சரோகி கூறுகையில், “மாவட்டத்தின் 86 ரோட்டரி சங்கங்களும் தங்களது தலைவர்களின் வழிநடத்தலில் ஒன்றிணைந்து நகரத்திற்கு உயிரூட்டும் பசுமை வளத்தை உருவாக்குகின்றன. ரோட்டராக்டர்களும் இந்த முயற்சியில் இணைந்து, வெறிச்சோடிய நிலப்பரப்பை அழகிய இயற்கைச் சூழலாக மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்,” என்றார்.

இந்தப் பசுமை முயற்சியை வெற்றிகரமாக ஒருங்கிணைப்பதற்காக இடைவிடாமல் உழைத்த மாவட்ட சுற்றுச்சூழல் தலைவர் மற்றும் DGND ரவி சுந்தரேசனுக்கு அவர் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் முதன்மையான இந்த மரநடுகை






*மேலே: ரோட்டேரியன்களின் உதவியுடன், RID 3234-ன் DG வினோத் சரோகி ஒரு கன்றை நடுகிறார்.*

*கீழே: மாபெரும் மரம் நடும் நிகழ்வில் RID 3234 ரோட்டராக்டர்கள்.*




நிகழ்வில், தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் V K ராஜீவ் கலந்து கொண்டார். ரோட்டரி ஏற்பாடு செய்த மரநடுகை நிகழ்வில் பங்கேற்றதில் மகிழ்ச்சி அடைவதாகக் கூறிய அவர், சிதம்பரத்தில் உள்ள டாக்டர் ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியில் ரோட்டராக்ட் தலைவராக இருந்த காலத்தை நினைவுகூர்ந்தார்.

“ரோட்டரி ஒரு அடர்ந்த நகரக் காடை உருவாக்குவது பாராட்டத்தக்க முயற்சி. அதே சமயம், அன்றாட வாழ்க்கையில் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்,” என்றார். நிகழ்ச்சி மேடையில் வைக்கப்பட்டிருந்த வினைல் பேனரைச் சுட்டிக்காட்டிய அவர், எதிர்காலத்தில் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் இத்தகைய பேனர்களுக்குப் பதிலாக துணிப் பேனர்கள் மற்றும் இயற்கை நட்பு விளம்பரப் பலகைகளைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

புதிய அரசின் முக்கிய இலக்குகளில் ஒன்று மாசற்ற தமிழ்நாட்டை உருவாக்குவதாகும் என்று கூறிய அமைச்சர், மக்கும் மற்றும் மக்காத கழிவுகளைத் தனித்தனியாகப் பிரித்து மறுசுழற்சிக்கு அனுப்புவது குறித்த விழிப்புணர்வை ரோட்டரி சங்கங்கள் மக்களிடையே பரப்ப வேண்டும் என்றார். இது ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த ரோட்டரியின் அனைத்து முயற்சி களுக்கும் தமிழக அரசு முழு ஆதரவு வழங்கும் என்றும், தமிழ்நாட்டை நிலைத்த வளர்ச்சியில் முன்னோடியாக மாற்ற இத்தகைய திட்டங்கள் உதவும் என்றும் அவர் உறுதியளித்தார். தமிழ்நாடு அமைச்சரவையில் உள்ள 34 அமைச்சர்களில் 5 பேர் ரோட்டேரியன்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**எதிர்கால சந்ததிக்கான பசுமைப் பரிசு**

இந்தத் திட்டத்தின் தலைவர் ரவி சுந்தரேசன் கூறுகையில், “நீண்டகால சுற்றுச்சூழல் பலனை உருவாக்கும் வகையில் அறிவியல் முறையில் இந்த நகரக் காடு அமைக்கப்படுகிறது. வெறிச்சோடிய நிலப்பரப்பை பசுமையான சூழலாக மாற்றுவதன் மூலம் காற்றின் தரம் மேம்படும்; உயிரினப் பன்முகத்தன்மை வளரும்; கார்பன் வெளியீடு குறையும்; நீடித்த சுற்றுச்சூழல் பாரம்பரியம் உருவாகும்,” என்றார்.




*அம்ரித் வனம் திட்டத்தில்,DG சரோசி (நடுவில்), அவருக்கு வலப்புறம் DGND ரவி சுந்தரேசன், கம்யூனிட்ரீ நிறுவனர் ஹபீஸ் கான் (இடதுபுறம்) மற்றும் RID 3234-ஐ சேர்ந்த ரோட்டேரியன்கள்.*

ரோட்டரி, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் கிரீன் தமிழ்நாடு மிஷன் ஆகியவை இணைந்து இந்தக் காடை உருவாக்கும் பொது-தனியார் கூட்டாண்மை முறையைப் பின்பற்றுகின்றன. இந்தத் திட்டம் மாநிலத்தின் பிற பகுதிகளிலும், பிற ரோட்டரி மாவட்டங்களிலும் செயல்படுத்தக் கூடிய முன்மாதிரியாக அமையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உதவுவதோடு, இந்தப் புதிய காடு எதிர்கால தலைமுறைகளுக்கான பசுமைப் பாரம்பரியமாகவும் விளங்கும். கார்பன் தடயத்தைக் குறைத்து, ஆக்சிஜன் உற்பத்தி மூலம் காற்றின் தரத்தை மேம்படுத்தி, உயிரினப் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கும் வகையில் இது செயல்படும்.

நகரக் காடுகள் உருவாக்கத்தில் நிபுணத்துவம் பெற்ற கம்யூனிட்ரீ அமைப்பின் நிறுவனர் ஹபீஸ் கான், சுமார் 600 ரோட்டேரியன்களுக்கும் ரோட்டராக்டர்களுக்கும் வழிகாட்டியாக இருந்தார். "முதற்கட்டமாக 400 மீட்டர் நீளமுள்ள மரப்பாதையை உருவாக்குகிறோம். காடு முழுமையாக வளர்ந்த பிறகு இது 2 கிலோமீட்டர் வரை நீட்டிக்கப்படும்," என்றார். இந்த மரப்பாதை நிறைவடைந்த பின், நாட்டிலேயே மிகப்பெரிய நகர மரப்பாதைகளில் ஒன்றாக இது உருவாகும் என்று அவர் தெரிவித்தார்.


முதற்கட்டமாக 400 மீட்டர் நீளமுள்ள மரப்பாதையை உருவாக்குகிறோம். காடு முழுமையாக வளர்ந்த பிறகு இது 2 கிலோமீட்டர் வரை நீட்டிக்கப்படும்.


72 ரோட்டராக்ட் சங்கங்களைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இந்தப் பெரும் மரநடுகை நிகழ்வில் பங்கேற்றனர். இவர்களில் பலர் எதிர்காலத்தில் இந்த ஐடி வழித்தடப் பகுதியில் பணியாற்ற உள்ளனர். அவர்கள் பயணம் செய்யும் பாதையிலேயே தாங்களே உருவாக்கிய நகரக் காடு வளர்வதைப் பார்ப்பது பெருமிதத்தை அளிக்கும் என மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதி சதீஷ்குமார் கூறினார்.

சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர் பேராசிரியர் S ஆம்ஸ்ட்ராங், "காலநிலை, இயற்கை, எதிர்காலம் ஆகிய மூன்றும் இன்றைய இளைஞர்களின் முக்கிய கவனப் பகுதிகளாக உள்ளன. இந்தப் பசுமை முயற்சியில் ரோட்டரி மற்றும் அரசுடன் இணைந்து செயல்படுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்," என்றார்.

நடப்பட்ட மரக்கன்றுகளை அடுத்த மூன்று ஆண்டுகள் கம்யூனிட்ரீ அமைப்பு பராமரிக்கும். அவற்றின் வளர்ச்சி குறித்து காலாண்டு அறிக்கைகள் வழங்கப்படும். மேலும் ஜூலை – ஆகஸ்ட் மாதங்களில் இதே வளாகத்தில் மேலும் 50,000 மரக்கன்றுகள் நடப்பட உள்ளன. மரங்களை பாதுகாக்க வலுவான சுற்றுச்சுவர் வேலியும் அமைக்கப்படும்.

சுமார் ரூ.42 லட்சம் மதிப்பிலான இந்த 'அம்ரித் வனம்' திட்டத்திற்கு மெட்ராஸ், மெட்ராஸ் சென்ட்ரல், சென்னை கர்நாடிக் மற்றும் சென்னை ரெனசான்ஸ் ஆகிய ரோட்டரி சங்கங்கள் முதன்மை ஆதரவளித்துள்ளன. மாவட்டத்தின் மேலும் 12 சங்கங்களும் இத்திட்டத்திற்கு துணை நிற்கின்றன.

நிகழ்ச்சியின் நிறைவில், உலக சுற்றுச்சூழல் தின உறுதி மொழியை ரோட்டேரியன்களும் ரோட்டராக்டர்களும் ஏற்றுக் கொண்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் தங்களது பங்களிப்பை உறுதிப்படுத்தினர்.

படங்கள்: V முத்துக்குமரன்

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## மிகப் பெரிய நல முகாம்

மகாராஷ்டிரத்தின் பீட் வட்டத்திலுள்ள 11 கிராமங்களில் RC பீட் மிட்-டவுன், RID 3132, நடத்திய சிகிச்சை முகாமில் 1,000-க்கும் மேற்பட்டோர் பலனடைந்தார்கள். இந்த முன்னெடுப்பு முதல்வரின் உதவி நிதிப்பிரிவு மற்றும் தொண்டு மருத்துவமனை உதவிப்பிரிவு பீட், புனித ஆன்னி சமூக மையம், பகிர்வாடி மற்றும் பீட் ஜில்லா பரிஷதின் நலத்துறையுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது.



*முகாமில் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரு பயனாளி.*

## பெண்களுக்கு ஆட்டோக்கள்

RC கோல்ஹாபூர் ஹெறிடேஜ், RID 3170, மற்றும் RCKOP ஹெறிட்டேஜ் அறக்கட்டளை இணைந்து, மூன்று பெண்களுக்கு ஆட்டோரிக்ஷாக்களை வழங்கினார்கள். CSR கொடையாளர்களால் ஆதரிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை DG அருண் பண்டாரெ, சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் கோல்ஹாப்பூர் நகரத் தலைவர் ரூபராணி நிகாம் தொடங்கிவைத்தார்.



*DG அருண் பண்டாரே பயனாளிகளிடம் வாகனச் சாவிகளை வழங்குகிறார்.*

## மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனை

பெண்களை மையமாகக் கொண்ட மாவட்ட முன்னெடுப்பான Oppol-ன் கீழ், AI ஆற்றல் பெற்ற வெப்பப் படமாக்கல் கருவி ஒன்றின் வழியாகக் கேரளத்தில் 5,000-க்கும் மேற்பட்ட பெண்களுக்குத் தொடக்க நிலை மார்பகப் புற்றுநோய் பரிசோதனைகளைச் செய்துள்ளது RID 3211. இந்த திட்டம் 165 ரோட்டரி சங்கங்கள் மற்றும் நான்கு மருத்துவமனைகளுடன் செயல்படுத்தப்பட்டது.




*மார்பகப் புற்றுநோய் பரிசோதனை முகாமில் DG டினா ஆண்டனி மற்றும் RC கோட்டயம் ஈஸ்ட் உறுப்பினர்கள்.*

## சிறையில் உள்ளோருக்குக் குளிர்ச்சியான உதவி

சம்பல்பூர் சிறைகளில் உள்ளோர் தீவிரமான கோடை வெப்பத்தைச் சமாளிக்க உதவுவதற்காக, முதன்மைச் சிறைக்கு ஆறு, பெண்கள் சிறைக்கு இரண்டு காற்றுக் குளிர்விப்பான்களைக் கொடையளித்துள்ளது RID 3261.



*ஏர் கூலர்களை வழங்கிய பிறகு, சிறை அதிகாரிகளுடன் சங்க உறுப்பினர்கள்.*

# Apply yourself

Illustration by Kenzo Hamazaki



As part of the family of Rotary, members are invited to lend their professional expertise on committees that support Rotary and The Rotary Foundation. Each year, these committees focus on putting Rotary's strategic priorities into action, challenging clubs to increase their impact, expand their reach, enhance participant engagement, and increase Rotary's ability to adapt.

### Would you like to contribute to Rotary's success?

RI and the Foundation are searching for qualified Rotarians and Rotaractors to serve on committees in the 2027–28 Rotary year. These positions offer an opportunity for you to apply your leadership skills, share your vocational experience, and help ensure diverse perspectives within each committee.

Rotarians and Rotaractors with expertise in the areas detailed in the chart are encouraged to apply. The number of openings is limited. If you're not selected this year, you are welcome to apply again next year. All committees correspond through email and on virtual platforms, typically with one mandatory in-person meeting a year. Rotaractors are encouraged to apply to any area based on their background, skills and experience. Dual members of Rotary and Rotaract are especially welcome to apply.

To be considered for committee membership or to recommend a Rotarian or Rotaractor for an appointment, visit *on.rotary.org/application2026*. Applicants must be registered on My Rotary at *my.rotary.org* and should make sure their My Rotary profile includes current contact information. Applications are due **August 15.**■

| Area of Expertise | Function | Prerequisites | Openings |
|---|---|---|---|
| **Audit** | Advises leadership on audited financial reports, internal and external audits, and internal control systems | Independence, appropriate business experience, and demonstrated financial literacy in accounting, auditing, banking, insurance, investment, risk management, executive management or audit governance | One position with a four-year term |
| **Communications** | Advises leadership on Rotary's overall public image, branding, communications, content strategy | Professional background and experience in internal and external communications, marketing, public image, brand, public relations, media and content strategy | Two positions with three-year terms |

| | | | |
|---|---|---|---|
| **Enhancing participant engagement** | Advises leadership on enhancing participant engagement and fostering a welcoming and accessible club culture rooted in respect that values different perspectives and voices | Professional or educational experience related to shaping a culture of respect and positive engagement, facilitating difficult conversations, and uniting individuals to solve problems | Two positions with three-year terms |
| **Finance** | Advises the RI Board on Rotary's finances, including budgets and sustainability measures | Professional background in a finance-related field; nonprofit experience preferred. Candidates should have experience in financial matters at the club and district levels | Two positions with three-year terms |
| **Fund development** | Advises The Rotary Foundation trustees on all aspects of fundraising | Significant experience in nonprofit fundraising. Committee members actively fundraise and support the Foundation | Two positions with three-year terms |
| **Investment** | Oversees the management of Rotary's investments and the implementation of investment policies by the office of investment. Makes investment policy recommendations to the respective boards of governance | Institutional investment experience or equivalent | One position with a four-year term |
| **Learning** | Advises leadership on creating effective learning opportunities for Rotary leaders and members | Adult learning expertise within or outside Rotary. Experience in the professional learning field (including e-learning) or with planning and implementing learning events at the member, club, district, zone and international levels | Two positions with three-year terms |
| **Operations review** | Advises leadership on the effectiveness of operations, administrative procedures, and standards of conduct. Serves as the advisory compensation committee to the Executive Committee of the RI Board | Experience in management, leadership development or financial management, and thorough knowledge of Rotary's operations. Appointments are limited to past RI directors and past Foundation trustees | One position with a four-year term |
| **Strategic planning** | Advises leadership on matters regarding the strategic plan | Significant experience in long-term planning, financial management, and RI and Foundation programme activities | Two positions with four-year terms |
| **Technology** | Advises leadership on enhancing technology practices, products, and strategy to improve the member and participant experience | Expertise in technology development, security and data privacy, product management and user/participant experience. Non-Rotarian technology experts may be appointed | Two positions with three-year terms |



RID 2981

**RC கும்பகோணம்**

மகாத்மா ரோட்டரி ஆரஞ்ச் ஹைப்ரிட் ஐ விஷன் மையத்துடன் இணைந்து நடந்த கண் பரிசோதனை முகாமில், மருத்துவர் குழுவினர் பரிந்துரையும் சிகிச்சையும் வழங்கினார்கள். அத்துடன், அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறவர்கள் அடையாளம் காணப்பட்டார்கள். இந்தச் சங்கம் அறுவைச் சிகிச்சைகளை ஒருங்கிணைத்தது.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்






RID 3053

**RC அல்வார் அரவலி**

சுபாஷ் சந்த் குப்தா நினைவுத் தையல் மையத்தில் 30 பெண்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. பெண்களுக்கு வளங்குன்றா வாழ்வாதாரத்தை வழங்கி ஆற்றல் அளிக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் பயிற்சி பெறும் மூன்றாவது வகுப்பு இது.

RID 3060

**RC போர்பந்தர்**

கிஜ்டி ப்ளாட் கார்டனில், 100 தூய்மைப் பணியாளர்களுக்கும், சேரிப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கும் ரூ.1 லட்சம் செலவில் கட்டில்கள் வழங்கப்பட்டன.






## RID 3080

**RC பௌன்டா சாகிப்**

ரேபிஸ் வெளிப்பாட்டுக்கு எதிராக ரோட்டரி (RARE) திட்டத்தின்கீழ், துணைப் பிரிவு விலங்கு மருத்துவமனைக்கு 400 ரேபிஸுக்கு எதிரான தடுப்பு மருந்துகள் கொடையளிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின்கீழ், உள்ளூர் மக்கள் உதவியுடன் 250-க்கும் மேற்பட்ட தெரு நாய்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

## RID 3011

**RC ஃபரிதாபாத் ஆரவல்லி**

பஹல்வாராவில் உள்ள விலங்குகள் மருத்துவமனையான ஸ்ரீ விரஜ் கமத் சுர்பி வன் மற்றும் ஆய்வு மையத்துக்கு ஓர் X-ray இயந்திரம், இரத்தப் பரிசோதனை இயந்திரம், நுண்ணோக்கி, மருத்துவ உதவி வண்டிகள், பசுவைத் தூக்கும் எந்திரங்கள், அறுவைச் சிகிச்சைக் கருவிகள் (CSR நல்கை: $63,000) கொடையளிக்கப்பட்டன.



## RID 3110

**RC ஆக்ரா ராயல்**

பிச்புரி தொகுதியில் உள்ள மிதாக்கூரில் இருக்கும் பண்டிட் தீன்தயாள் அரசு இடைநிலைக் கல்லூரியில் 2 குளிர்விப்பான் களுடனான RO நீர் ஆலையை DG ராஜென் வித்யார்த்தி தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தை ரேகா அகர்வால் ஒருங்கிணைத்தார்.



## RID 3100

**RC ஹல்டௌர்**

நோய்டாவிலுள்ள மெட்ரோ மருத்துவமனையுடன் இணைந்து நடந்த இதயப் பரிசோதனை முகாமில் 100-க்கும் மேற்பட்ட நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டார்கள். இரத்த அழுத்தம், BP, BMI, ECG பரிசோதனைகள் செய்யப்பட்டன.



# பழங்குடியினப் பெண்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகளைத்திறந்த மகுவா பயிற்சி

ஜெய்ஸ்ரீ

ரோட்டரி மாவட்டம் 3030-ஐச் சேர்ந்த ஜல்கான் ரோட்டரி சங்கம், பழங்குடியினப் பெண்கள் தங்கள் பாரம்பரிய வன வளமான மகுவா மலர்களை நிலையான வருமான ஆதாரமாக மாற்ற உதவி வருகிறது.

ஜல்கானில் இருந்து 70–75 கி.மீ தொலைவில், சத்புரா மலைத் தொடரில் அமைந்துள்ள ஒரு கிராமத்தில், ரோட்டரி சங்கம் சமீபத்தில் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையை நடத்தியது. இதில் 38 பழங்குடியினப் பெண்களுக்கு மகுவா மலர்களைப் பயன்படுத்தி பல்வேறு மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் பயிற்சி வழங்கப்பட்டது.

கட்சிரோலியைச் சேர்ந்த இந்த துறையில் நிபுணரான Dr சதீஷ் கோகுல்வார் பயிற்சியை வழி நடத்தினார். மகுவா மலர்களைக் கொண்டு சிவ்டா, லட்டு, கேக், குலாப் ஜாமூன், ஜாம் மற்றும் பர்ஃபி போன்றவற்றைத் தயாரிப்பது குறித்து அவர் பெண்களுக்கு கற்றுக்கொடுத்தார். மேலும், தயாரிப்புகளை பொட்டலமிடுதல், சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்வது குறித்தும் வழிகாட்டினார்.

இதன் மூலம் தங்கள் பகுதியில் அதிகமாகக் கிடைக்கும் ஒரு இயற்கை வளத்தைப் பயன்படுத்தி பெண்கள் வருமானம் ஈட்டும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

“இந்தப் பகுதியில் மகுவா மரங்கள் ஏராளமாக உள்ளன. கிராம மக்கள் பாரம்பரியமாக மகுவா மலர்களை புளிக்க வைத்து மகுவா சாராயம் மற்றும் பிற மதுபானங்களைத் தயாரித்து வருகின்றனர். ஆனால், இந்த மலர்களை வேறு பல பயனுள்ள வழிகளில் பயன்படுத்தி அதிக வருமானம் பெற முடியும் என்பதை பெண்கள் அறிய வேண்டும் என்பதே இந்தப் பயிற்சியின் நோக்கம்,” என்கிறார் ஜல்கான் ரோட்டரி சங்கத் தலைவர் கிரிஷ் குல்கர்னி.

மத்திய மற்றும் மேற்கு இந்தியாவின் பழங்குடியின மக்களின் வாழ்க்கையில் மகுவா மரத்திற்கு ஒரு முக்கிய இடம் உள்ளது. இனிப்புச் சுவையும், சத்துக்களும் நிறைந்த மகுவா மலர்கள் உணவாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவை பலவிதமான உணவுப் பொருட்களைத் தயாரிக்க ஏற்றவை.

பாரம்பரியமாக, வெயிலில் உலர்த்தப்பட்ட மகுவா மலர்கள் கீர், அல்வா, பாயசம் போன்ற உணவுகளில் இயற்கையான இனிப்பூட்டியாகப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், அவற்றுக்கு மருத்துவ குணங்களும் உள்ளதாகக் கருதப்படுகிறது. தயிருடன்



*பழங்குடிப் பெண்கள் மஹுவா பூக்களிலிருந்து உணவுகளைத் தயாரிக்கக் கற்றுக்கொள்கிறார்கள்.*



மேலே: மஹுவா பூக்களைக் கொண்டு லட்டுகள் தயாரிக்கப்படுகின்றன.

கீழே: மஹுவா பூக்களைக் கொண்டு சிவ்டா (chivda) தயாரிக்கப் பழங்குடியினப் பெண்கள் கற்றுக்கொள்கிறார்கள்.



சேர்த்தும் அல்லது பாகு வடிவிலும் இவை உட்கொள்ளப்படுகின்றன.

வைட்டமின்கள், கால்சியம், இரும்புச் சத்து, புரதம் மற்றும் நொதிகள் நிறைந்த மகுவா மலர்கள், ஆயுர்வேதத்தில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், செரிமானத்தை மேம்படுத்தவும், உடல் பலவீனத்தை குறைக்கவும் உதவுவதாகக் கூறப்படுகிறது. சுவாசப் பிரச்னைகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான பாரம்பரிய சிகிச்சைகளிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன.

மகுவா மலர்களின் ஊட்டச்சத்து, மருத்துவ மற்றும் வணிக மதிப்பை பெண்களுக்கு எடுத்துரைத்த டாக்டர் கோகுல்வார், தங்கள் சுற்றுப்புறத்தில் எளிதாகக் கிடைக்கும் இந்த வளத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்தி முன்னேறுமாறு அவர்களை ஊக்குவித்தார்.

சமூக சேவைத் திட்டங்களுடன் மட்டுமல்லாமல், ஜல்கான் ரோட்டரி சங்கம் உறுப்பினர்களிடையே நட்பு மற்றும் அறிவுப் பகிர்வை வளர்க்கும் வகையில் “ரோட்டரி வாச்சன் கட்டா” என்ற புதுமையான முயற்சியையும் நடத்தி வருகிறது. இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த புத்தக வாசிப்பு நிகழ்வில், உறுப்பினர்கள் தாங்கள் பரிந்துரைக்க விரும்பும் புத்தகங்களை கொண்டு வந்து, அதிலிருந்து சிறந்த பகுதிகளை வாசித்து, தங்களைத் தூண்டிய கருத்துகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

இந்த வாசிப்பு நிகழ்வின் ஒரு பகுதியாக, சங்கம் சமீபத்தில் “நீ என் வாழ்க்கைத் துணை” என்ற தலைப்பில் சிறப்பு “தம்பதியர் நிகழ்ச்சி” ஒன்றை நடத்தியது. இதில் 18 தம்பதிகள் பங்கேற்றனர். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கைத் துணையைப் பற்றி தாங்களே எழுதிய இரண்டு நிமிடப் பாராட்டுரையை வாசித்தனர்.

இந்த நிகழ்ச்சி உறுப்பினர்கள் தங்கள் துணைக்கு நன்றி தெரிவிக்கவும், இணைந்து கடந்த வாழ்க்கைப் பயணத்தை நினைவு கூரவும், ஒருவருக்கொருவர் செய்த தியாகங்களைப் பாராட்டவும், ரோட்டரி சேவையில் துணையாக இருக்கும் உறவுகளை கொண்டாடவும் ஒரு வாய்ப்பாக அமைந்தது. ■

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## ரோட்டரி இரத்த ஸ்டெம் செல் பதிவகம்

முன்னாள் ரோட்ராக்டரான நிலேஷ் ஷா, 2004-ல் முன்னாள் ரோட்ராக்ட் தலைவர்கள் 20 பேர் சேர்ந்து உருவாக்கிய அவரது சங்கத்தின் பட்டய செயலாளராக இருந்தவர். வாபி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த PRIP கல்யாண் பானர்ஜியுடன் இருந்த நினைவுகளை அவர் பொக்கிஷமாக கருதுகிறார்.

இன்று இந்த மாவட்டத்தில் 104 ரோட்டரி சங்கங்கள் உள்ளன. அவற்றில் 5,000-த்துக்கும் மேலானவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். புதிதாக ஏழு சங்கங்களை உருவாக்கவும், உறுப்பினர்கள் எண்ணிக்கையை 10 சதவீதம் அதிகரிக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார். அவரது மாவட்டம், ரோட்டரி ஸ்டெம்செல் பதிவகத்தை உருவாக்குவதற்காக DATRI என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் கூட்டாண்மை வைத்துள்ளது.

இந்திய மருத்துவச் சங்கத்துடன் (IMA) இணைந்து செயல்படுத்தப்படும் கிராம கல்யாண் திட்டம், 60,000 கிராம மக்களின் மருத்துவ சுகாதாரத்தையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும். மாவட்ட அளவில் நிர்வகிக்கப்படும் மானிய திட்டங்கள் மூலம் (ரூ.3 கோடிக்கு மேல்) அரசு மற்றும் தனியார் அறக்கட்டளை மருத்துவமனைகளில் 45 டயாலசிஸ் சிகிச்சை இயந்திரங்கள் நிறுவப்பட உள்ளன. நாங்கள் கவனம் செலுத்தும் பகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் 13 முதல் 16 சர்வதேச மானியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். தற்போதைய திட்டங்களில் ஐந்து அரசு ஆரம்பப்பள்ளி மற்றும் மேனிலைப் பள்ளிகளில் (ரூ.50 லட்சம் செலவில்) சுகாதார வசதி, மேஜை, நாற்காலி, பெஞ்சுகள், கணினி ஆய்வகம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது, 10-த்துக்கும் மேற்பட்ட அரசு மருத்துவமனைகளில் நவீன மருத்துவ வசதிகளை (ரூ.2.5-ரூ.3 கோடியில்) மேம் படுத்துவது ஆகியவையும் அடங்கும்.

அவரது TRF நன்கொடை இலக்கு 2 மில்லியன் டாலர். “சேவைத் திட்டங்களைச் சுமுகமாக அடுத்த கட்டத் திற்கு எடுத்துச் செல்ல GG செயல்முறை குறித்து சங்கங்களுக்கு நாங்கள் வழி காட்டி வருகிறோம்” என்று கூறுகிறார்.



**நிலேஷ் ஷா**
வரைகலை வடிவமைப்பாளர்
RC வாபி ரிவர்சைடு
RID 3060

## ரோட்டேரியன்களை வளப்படுத்துவதே நோக்கம்



**ராஜேஷ் பாட்டீல்**
குழந்தைகள் நல மருத்துவர்
RC ஜல்கோன் வெஸ்ட்
RID 3030

6,000-த்துக்கும் மேற்பட்ட உறுப் பினர்கள் கொண்ட 122 ரோட்டரி சங்கங்களுடன் தமது பதவிக்காலத்தில் 15 முதல் 20 புதிய சங்கங்களை உருவாக்குவதில் ராஜேஷ் பாட்டீல் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளார்.

ஒவ்வொரு சங்கத்திலும் ரோட்டரி அறிவால் வளப்படுத்தப்பட்ட ரோட்டேரியன்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்தில், அவர், தனது மாவட்டத்தின் ஆறு மண்டலங்களிலும் ஒவ்வொரு மாதமும் ஆறு தொடர்ச்சியான ரோட்டரி வழிகாட்டுதல் திட்ட அமர்வுகளை நடத்த திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் அவர்கள் தங்களின் நிபுணத்துவத்தை பலதரப்பட்ட திட்டங்களில் பகிர்ந்துகொள்ள முடியும். மருத்துவத் துறையில், அரசு மற்றும் அறக்கட்டளை மருத்துவமனைகளுடன் இணைந்து அல்லது தனியாக 30 டயாலிசிஸ் சிகிச்சை மையங்கள் (CSR மற்றும் சர்வதேச மானிய உதவி ரூ.1.5 கோடி) நிறுவப்படும். மேலும் CSR தனியார் நன்கொடைகள் மற்றும் சர்வதேச மானிய உதவி மூலம் (ரூ.2 கோடி) ஜல்கானில் உள்ள அறக்கட்டளை மருத்துவமனையில் குழந்தைகள் இதய அறுவைச்சிகிச்சை பிரிவு ஏற்படுத்தப்படும்.

குறைந்தபட்சம் 30 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் CSR இந்தியா மானிய உதவியுடன் (ரூ.2 கோடி),சுகாதார வசதிகள், குடிநீர் சுத்திகரிப்பு பிரிவு, விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சிக்கூடங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் பர்னிச்சர் வசதிகளுடன் ரோட்டரி பள்ளிகளாக மாற்றியமைக்கப்படும் என்று பாட்டீல் கூறுகிறார். கிராமப்புறங்களில் உள்ள 26 அரசுப் பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றலை மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக CSR இந்தியா மானியத்தின் கீழ் இயந்திரவியல் ஆய்வகம் (ரோபாடிக் ஆய்வகம்) அமைக்கப்படும்.

TRF நன்கொடைக்கான அவரது இலக்கு 1 மில்லியன் டாலர். டாக்டர் பாட்டீல், 2000-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார்.

# இளைஞர்களுக்கு வலுவூட்டும் ரோட்டரியின் செயல்பாடுகள்

"ரோட்டரி அமைப்பு எனது தலைமைத்துவ திறன் களையும் நடத்தையையும் மெருகேற்றி என் தன்னம்பிக்கையை அதிகரித்தது மற்றும் நண்பர்கள் வட்டத்தை விரிவுபடுத்தியது. எனவே நான் ரோட்டரி மற்றும் ரோட்டேரியன்கள் தொடர்பான அனைத்து செயல்பாடுகளையும் விரும்புகிறேன்" என்கிறார் பூபதி. 115 சங்கங்கள் மற்றும் 6,000 உறுப்பினர்களுடன் கணக்கை தொடங்கியுள்ள அவர் 6–7 புதிய சங்கங்களை உருவாக்குவதுடன் 10 சதவீத உறுப்பினர் வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளார்.

RI இயக்குநர் முருகானந்தத்தின் வழிகாட்டுதலின்படி 30-க்கும் குறைவான உறுப்பினர்களைக் கொண்ட 28 சங்கங்களை சிவப்பு பிரிவிலிருந்து மஞ்சள் பிரிவுக்கு உயர்த்தி, அவற்றின் அடித்தளத்தை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்தி வருகிறார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு அவரது முக்கிய கவனம் செலுத்தும் துறைகளில் ஒன்றாகும். இதன் கீழ் ஊராட்சி மற்றும் நகராட்சி அலுவலகங்களில் 3 அல்லது 4 கழிவு மேலாண்மை ஆலைகளை ரூ.6 கோடி CSR மானிய உதவியுடன் நிறுவ திட்டமிட்டுள்ளார். பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவுநீர் மறுசுழற்சி திட்டம் தொடர்பாக விழிப்புணர்வு முகாம்களை நடத்துவோம் என்கிறார் பூபதி. 30 அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு தனித்தனியே கழிப்பறை வசதி, கைகழுவும் நிலையங்கள், மாணவிகளுக்கு சானிடரி நாப்கின் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்படும் (GG: $300,000). "இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்போம், தேசத்தை வளப்படுத்துவோம்" என்ற முழக்கத்துடன் பள்ளிகளில் சுமார் 300 ரோட்டரி தலைமைத்துவ பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இதன் மூலம் 5,000-த்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைவார்கள். ஒவ்வொரு சங்கமும் குறைந்தபட்சம் மூன்று RYLA வகுப்புகளை நடத்தும். அதே நேரத்தில் RID 3203 அதிக இளைஞர்களை ஈர்க்கும் வகையில் மாவட்ட அளவில் RYLA நிகழ்ச்சிகளை நடத்தும். TRF இலக்கான 1 மில்லியன் டாலரைக் கடந்து பங்களிக்க வேண்டும் என்பதில் பூபதி உறுதியாக இருக்கிறார்.

1989-ம் ஆண்டில் ரோட்டரியில் இணைந்த அவர், பொள்ளாச்சியைச் சேர்ந்த கல்வியாளரும், பெருநன்கொடை யாளருமான கிருஷ்ணராஜ் வானவராயரால் ஈர்க்கப்பட்டவர்.



**K பூபதி**
டெக்ஸ்டைல்ஸ்
RC அவிநாசி, RID 3203

# அரசுப் பள்ளிகளுக்கு சூரியசக்தி மின்சாரம்



**பாயல் கௌர்**
அச்சுத்தொழில்
RC புலந்த்ஷாகர்
RID 3100


பொறியியல் மற்றும் MBA பட்டதாரியான இவர், தனது விருப்பப்பட்டியலில் சமூக அநீதியையும் சமத்துவ மின்மையையும் ஒழிக்க, சமூகத்தினர் ஒருவருக்கொருவர் உதவும் ஒரு மகிழ்ச்சியான விஷயத்தை கற்பனை செய்கிறார். ஜூலை மாதம் 1-ம் தேதி நிலவரப்படி சுமார் 120 சங்கங்கள் மற்றும் 2,200 உறுப்பினர்கள் உள்ளனர். குறைந்தது ஐந்து புதிய சங்கங்களை நிறுவுவது மற்றும் 500 புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளார்.


முதல் ஆறு மாதங்களில் சுமார் 5,000 பள்ளி, கல்லூரி மாணவிகள் (12-15 வயது) கர்ப்பப்பைவாய் புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் தடுப்பூசி இயக்கத்தின் மூலம் பயனடைவார்கள் (CSR மற்றும் சர்வதேச மானியம் ரூ.30 லட்சம்). அதன் மூலம் கிடைக்கும் பின்னூட்டங்களின் அடிப்படையில், எங்கள் தடுப்பூசி இலக்கை இரட்டிப்பாக்கிய பிறகு அடுத்த 6 மாதங்களுக்கு பணியை மீண்டும் தொடங்குவோம் என்கிறார் பாயல். மருத்துவ சுகாதாரத் துறையில் மீரட், முஸாஃபர்நகர் மற்றும் மொராதாபாதில் மூன்று நோயறிதல் மையங்களும், ஐந்து டயாலிசிஸ் மையங்களும் தனியாகவோ அல்லது அரசு மருத்துவமனைகளுடன் இணைந்தோ நிறுவப்படும். இந்த இரண்டு திட்டங்களுக்கும் சர்வதேச நிதி மற்றும் CSR நிதியுதவியின் கலவையான ரூ.3 கோடியில் செயல்படுத்தப்படும்.

பள்ளிகளுக்குள்ளேயே மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக கூரைகளில் சோலார் பேனல்கள் கொண்ட பசுமைப் பள்ளிகளை உருவாக்குவது அவரது விருப்பத் திட்டங்களில் ஒன்றாகும். முதல் கட்டமாக மேற்கு உத்தரப்பிரதேசத்தில் உள்ள 10 அரசு தொடக்கப்பள்ளி மற்றும் மேனிலைப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சியாக இவை நிறுவப்படும் (GG+CSR: ரூ.25 லட்சம்). இதன் முடிவுகளை ஆய்வுசெய்த பிறகு இந்த பசுமைத் திட்டத்தை விரிவுபடுத்துவோம் என அவர் விளக்கினார். TRF நிதிப் பங்களிப்பாக $500,000 திரட்டுவதை அவர் இலக்காகக் கொண்டுள்ளார்.

2014-ம் ஆண்டில் ரோட்டரியில் இணைந்த இந்த தொழில்நுட்ப வல்லுநர், "இளம் பெண் ஆளுநர் என்ற முறையில் வரும் ஆண்டுகளில் எங்கள் மண்டலத்தில் மேலும் பெண் உறுப்பினர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்பதை முன்னோக்கி இருக்கிறேன்" என்று கூறினார்.■

# Membership & TRF contribution summary






## Rotary worldwide

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Rotary clubs | : | 36,824 | Rotary members | : | 1,170,185 |
| Rotaract clubs | : | 9,591 | Rotaract members | : | 151,457 |
| Interact clubs | : | 20,002 | Interact members | : | 460,207 |
| RCCs | : | 14,428 | | | As on June 17, 2026 |

*Membership figures as on June 1, 2026.
*TRF contribution figures as on May 31, 2026.

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## நாசிக்கில் புதுப்பிக்கப்பட்ட ஆறு

கோதாவரி ஆற்றின் துணையாறான நந்தினி-யின் 8 கிலோமீட்டர் பாதையைத் தூர் எடுத்து அதைப் புதுப்பித்துள்ளது RC நாசிக், RID 3030. பஞ்சாயத்துத் தலைவர், உள்ளூர் விவசாயிகள் ஆதரவுடன் இப்பணி நிறைவேற்றப்பட்டது. இந்தத் திட்டம் 480 மில்லியன் லிட்டர்கள் மழை நீர் ஓடிச் சென்று வீணாகாமல் காப்பாற்றும்.

J K மைனி பிரிசிஷன் டெக்னாலஜி நிறுவனம் ரூ.5 லட்சம் CSR நல்கையின் வழியாக இந்தத் திட்டத்துக்கு நிதியளித்தது. ஒட்டுமொத்த ஆற்றுப்படுகையும் பல்வேறு குப்பைகளாலும், பல ஆண்டுகளாகப் படிந்த வண்டலாலும் மாசுபட்டிருந்தது. இதற்குமுன் பல தடுப்பணைகளை மீட்டுள்ள இந்தச் சங்கம், இந்தத் துணையாற்றின் பாதையைத் தூர் வாரியது. சங்கத் தலைவர் கௌரவ் சம்னேர்கர் தூர் வாரும் பணியைத் தொடங்கிவைத்தார்.




*நந்தினி ஆற்றில் வண்டல் அகற்றும் பணிகளைத் தொடங்கி வைக்கும் நிகழ்வில், RC நாசிக் தலைவர் கௌரவ் சம்னேர்கர் மற்றும் சங்க உறுப்பினர்கள்.*

## RID 3120-ல் கண் புரை அறுவைச் சிகிச்சை முகாம்கள்

RID 3120 ரோட்டரி சங்கங்கள் கிராமங்கள் மற்றும் பகுதியளவு நகர்ப்புறங்களில் R J சங்கரா கண் மருத்துவமனையுடன் இணைந்து கண் பரிசோதனை முகாம்களை நடத்தியது. ஒவ்வோர் ஆண்டும் 15,000 இலவசக் கண் புரை அறுவைச் சிகிச்சைகள் என்ற இலக்குடன் இந்த மருத்துவமனையோடு ஒரு மூன்றாண்டு MoU கையொப்பமிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் அப்போதைய DG அசுதோஷ் அக்ரவால் வழிகாட்டுதலின்கீழ் உருவானது.

பிப்ரவரி வரையில், 16,000-க்கும் மேற்பட்ட நோயாளிகள் OPDல் பரிசோதிக்கப்பட்டார்கள், வாரணாசி, மிர்சாபூர், பிரயாக்ராஜ், சுல்தான்பூர், மௌ, லக்னோ போன்ற இடங்களில் 1,600க்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றன. கண் புரை இருப்பது கண்டறியப்பட்ட நோயாளிகள் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டு, அவர்களுக்கு இலவசத் தங்குமிடம், ஊட்டச்சத்துள்ள உணவு, மருந்துகள், அறுவைச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்பு வழங்கப்பட்டன.



*கண் புரை அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படும் நோயாளிகள்.*

## புணே-நாசிக் நெடுஞ்சாலையில் மருத்துவ உதவி வண்டி

மோஷியிலுள்ள அக்கார்ட் பல சிறப்புத்தன்மை மருத்துவமனையின் நெருக்கடி நேர மருத்துவச் சேவைகளை (EMS) மேம்படுத்தும்வகையில், ICU செயற்கை மூச்சுவிடல் கருவி, டீஃபைப்ரில்லேட்டர் பொருத்தப்பட்ட ALS மருத்துவ உதவி வண்டி ஒன்றைக் கொடையளித்துள்ளது RC புணே ஹெரிட்டேஜ், RID 3131. இந்தத் திட்டத்துக்கான செலவு ரூ.21 லட்சம். இதன் CSR கூட்டாளர் ஸ்கையெ மின்கலன்கள்.

புணே-நாசிக் நெடுஞ்சாலையின் மையத்தில் அமைந்துள்ள இந்த மருத்துவமனை சாலை, தொழிற்சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கும், இந்தப் பகுதியில் பெருகிவரும் இதய, பக்கவாத நெருக்கடி நோயாளிகளுக்கும் சேவையாற்றிவருகிறது. இந்த மருத்துவ உதவி வண்டி 20 முதல் 25 கிலோமீட்டர் வட்டத்துக்குள் சேவையாற்றும்.



*ஆம்புலன்ஸ் சேவையைத் தொடங்கி வைக்கும் நிகழ்வில், RID 3131 DG சந்தோஷ் மராத்தே மற்றும் PDG சைலேஷ் பலேகர் (அவருக்கு வலதுபுறம்) ஆகியோர் RC புனே ஹெரிடேஜ் உறுப்பினர்களுடன். சங்கத் தலைவர் சுப்ரோ சென் வலது கோடியில் உள்ளார்.*

## RID 3250ல் நடமாடும் புற்றுநோய்ப் பரிசோதனை

PDG பிபின் சச்சான் RC ஜாம்ஷெட்பூர் வெஸ்ட், RID 3250, மற்றும் RC சுவாங்-நொசாங், RID 3750, கொரியா, இணைந்து செய்த ஒரு GG திட்டத்தின்கீழ் ($89,207), மெஹெர்பாய் டாடா நினைவு மருத்துவமனைக்குப் (MTMH) புற்றுநோய்ப் பரிசோதனை வேன் ஒன்றை வழங்கினார். இந்தத் திட்டம் MTMH, ரோட்டரி, டாடா ஸ்டீல் அறக்கட்டளை மற்றும் $22,000 CSR நிதி அளித்த RSB அறக்கட்டளையின் இணை முன்னெடுப்பாகும்.

இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் இந்தத் திட்டத்துக்கு $29,000 பங்களித்துள்ளார்கள். முதல் 3 மாதங்களில் இந்த நடமாடும் மருந்தகம் ஜார்கண்ட், ஒடிஷா மாநிலங்களில் 29 இடங்களில் 54 முகாம்களை நடத்தியுள்ளது.



RID 3250-ன் PDG *பிபின் சச்சன் (நடுவில்), புற்றுநோய் பரிசோதனை வாகனத்தை* RC *ஜாம்ஷெட்பூர் வெஸ்ட் மற்றும் மெஹர்பாய் டாட்டா நினைவு மருத்துவமனை உறுப்பினர்களிடம் ஒப்படைக்கிறார்.*

# பாதுகாக்கும் பண்பாட்டை வளர்ப்போம்

ப்ரீதி மெஹரா

*மனித உயிர்களை பாதுகாக்கவேண்டுமென்றால், நாம் நம்முடைய ஒட்டுமொத்தச் சூழமைப்பையும் பாதுகாக்கவேண்டும், ஒவ்வொரு தாவரத்தையும் விலங்கையும் பாதுகாக்கவேண்டும்.*

காட்டுயிர்ப் பாதுகாப்பைப் பலர் புரிந்துகொள்வதில்லை. நாம் புவி வெப்பமாதலைப்பற்றி, நம் காடுகளைப் பாதுகாக்கும் தேவையைப்பற்றி நன்கு அறிந்துவைத்துள்ளோம். ஆனால், நம் காட்டுயிர்களைப் பாதுகாப்பது அதே அளவு கவனத்தைப் பெறுவதில்லை. நாம் புலியின் கடுமையான அழகை, சிங்கத்தின் கம்பீரத்தை, யானையின் வலிமையைப் பாராட்டுகிறோம். ஆனால், பல நேரங்களில் நாம் பூச்சிகள், பறவைகள், பட்டாம்பூச்சிகள் உள்பட இந்தப் பூமியை நம்முடன் பகிர்ந்துகொள்கிற பலவிதமான உயிரினங்களைப் பாதுகாப்பதன் முதன்மைத்துவத்தை உணர்வதில்லை.

காட்டுயிர்ப் பாதுகாப்பு என்றால், அனைத்து இயற்கைச் சூழமைப்புகளையும் பாதுகாப்பதாகும், அதாவது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கும் தாவரங்கள், விலங்குகளை அவற்றின் சுற்றுச்சூழலுடன் பாதுகாப்பது. சூழமைப்புகள் சிக்கலான அமைப்புகளாகும். இங்கு ஒவ்வோர் உயிரினமும் ஒரு முதன்மையான பங்கை ஆற்றுகிறது. அதை மற்றவற்றால் செய்யமுடியாது. அதனால், ஓர் உயிரினத்தை இழந்தாலும் இந்தப் பூமியின் எதிர்காலத்துக்கும், மனிதர்களாகிய நம் உயிர்வாழ்தலுக்கும் பெரிய சிக்கல்கள் உண்டாகலாம். என்ன நடக்கலாம்?



உணவுச் சங்கிலிகள் தீவிரமாகச் சீர் குலையலாம், ஊட்டச்சத்துச் சுழல்கள் மாறலாம், ஒட்டுமொத்தச் சூழமைப்பும் பாதிக்கப்படலாம்.

காட்டுயிர்களைப் பாதுகாப்பதன் மூலம், இந்தச் சூழமைப்புகளை நலமாகவும் வலுவாகவும் வைத்திருக்க நாம் உதவுகிறோம். இதனால், இயற்கையின் மீள்திறன் மற்றும் உயிரியல் பன்முகத்தன்மை (செழிக்கும் சுற்றுச்சூழலுக்குத் தேவையான பல வகைத் தாவர மற்றும் விலங்கு உயிரினங்கள்) ஆகியவற்றுக் கிடையிலான நுண்மையான சமநிலை ஆதரிக்கப்படுகிறது.

நம் காடுகளைப் பாதுகாப்பதன் முதன்மைத்துவத்தை நாம் புரிந்துகொள்கிறோம். ஏனெனில், மரங்களும் செடிகளும் சுற்றுச்சூழலில் உள்ள ஆக்சிஜனை ஒளிச்சேர்க்கையின் வழியாகப் புதுப்பிக்கின்றன. ஆனால், இந்தப் பசுமையான விதானத்துக்குள் வாழும் விலங்குகளும் பறவைகளும் ஆற்றும் பங்கு என்ன? விலங்குகள், பறவைகளின் முதன்மையான பங்கு, செடிகளும் மரங்களும் செழித்துப் பலவாகி வளர்வதற்கு உதவுதல். இவை மகரந்தச் சேர்க்கையில், விதைகளைப் பரப்புவதில் உதவுகின்றன. இதனால் புதிய செடிகள் முளைக்கின்றன, மரமாகின்றன. எடுத்துக்காட்டாக, யானைகள் தரையை மிதித்தபடி செல்லும்போது, மர விதானம் குறைகிறது, இளம் செடிகள் வளர்வதற்குக் கூடுதல் இடம் உருவாகிறது. அத்துடன், அவற்றின் மலம் மண்ணைச் செறிவாக்குகிறது; அவற்றின் தாவர உணவுப் பழக்கத்தால் இதன்மூலம் விதைகள் பரவுகின்றன.

இதற்கு நேரெதிராக, வேட்டையாடி உண்ணும் சிங்கத்தை எடுத்துக்கொள்வோம். அதன் பங்கு என்ன? அது மான், வரிக்குதிரை போன்ற தாவர உண்ணிகளைக் கட்டுப்படுத்துகிறது, அதன்மூலம் சூழமைப்பு சீர் கெடுவதையும், தாவரங்கள் மிகுதியாக மேயப்படுவதையும் தடுக்கிறது. தேனீக்கள், பட்டாம்பூச்சிகள், வௌவால்கள் வளங்குன்றாப் பங்கை ஆற்றுகின்றன. பூக்கும் தாவரங்களில் 75% மற்றும் உணவுப் பயிர்களில் 35% மகரந்தச் சேர்க்கைக்கு இவை உதவுகின்றன என்று ஒரு மதிப்பீடு தெரிவிக்கிறது. இவை பூச்சி, நோய்க் கட்டுப்பாட்டிலும் உதவுகின்றன.

ஆனால், விலங்குகளையும் இயற்கையையும் பாதுகாப்பதற்குத் தனி மனிதர்களாக நாம் என்ன செய்யலாம்?

ஆபத்தான நிலையில் உள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதற்காகப் பணியாற்றும் பாதுகாப்புக் குழுக்கள், NGO-க்களைத் தொடர்ச்சியாக ஆதரிப்பது போன்ற நேரடி நடவடிக்கைகள் மிகுந்த உதவியாக இருக்கும். ஏனெனில், ஆண்டு முழுவதும் இது சார்ந்த தீவிரச் செயல்பாடுகளைத் தொடர்வதற்கு எப்போதும் நிதி தேவைப்படும்.

நெறிமுறை சார்ந்த தனிப்பட்ட நடவடிக்கைகளும் இந்த நோக்கத்துக்கு நன்கு பங்களிக்கும். முதலில், ஆபத்தில் உள்ள விலங்குகளிலிருந்து உருவாக்கப்பட்ட பொருட்களை எப்போதும் வாங்காதீர்கள். எடுத்துக்காட்டாக, தந்தம் அல்லது பாம்புத் தோல் பொருட்கள். அத்துடன், தடை செய்யப்பட்ட / சட்டத்துக்கு எதிரான பட்டியலில் உள்ள வெளிநாட்டுப் பறவைகள், பிற செல்ல விலங்குகளை வாங்காதீர்கள். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காகப் பணியாற்ற விரும்பும் நீங்கள் வேட்டையாடுதல் அல்லது சட்டத்துக்கு எதிரான காட்டுயிர் வணிகம் போன்றவற்றைப் பார்த்தால் அவற்றை உரிய அலுவலர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அதை உங்கள் கடமையாக ஆக்கிக்கொள்ளுங்கள். Amazon Prime-ல், கேரளத்தில் நடந்த உண்மைக் கதை ஒன்றின் அடிப்படையில் உருவான வேட்டைக்காரர் என்ற மிகச் சிறந்த தொலைக்காட்சித் தொடர் ஒன்றைப் பார்த்தேன். அதில் ஆங்கிலத் துணைத் தலைப்புகள் உள்ளன. நீங்கள் அதைக் கண்டிப்பாகப் பார்க்கவேண்டும்.

நீங்கள் காட்டுயிர் காப்பகங்கள், தேசியப் பூங்காக்கள் அல்லது உயிரியல் கோளப் பாதுகாப்பகங்களுக்குச் செல்வதை விரும்புகிறவர் என்றால், விலங்குகள், பார்வையாளர்களுடைய பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ள எல்லா வழிகாட்டுதல்களையும் கண்டிப்பாகப் பின்பற்றுங்கள். நீங்கள் இன்னோர் உயிரினத்தின் இடத்தில் இருக்கிறீர்கள் என்பதையும், அதன் வாழ்விட உரிமைதான் முதலில் வருகிறது என்பதையும் கண்டிப்பாக நினைவில் கொள்ளுங்கள். பார்வையாளரான நீங்கள் விலங்குகளை மதிக்கவேண்டும், மனித ஊடுருவல்கள் எதையும் விட்டுச்செல்லக்கூடாது. காட்டுயிர் பாதுகாப்பகத்துக்குச் செல்வது வெறும் சுற்றுலாதான் என்று நினைக்கிறவர்களை நான் அறிவேன். அதனால், அவர்கள் சிறிதும் சிந்திக்காமல் பிளாஸ்டிக் புட்டிகளை, பைகளை, மற்ற குப்பைகளைத் தங்கள் வண்டியிலிருந்து வெளியில் எறிகிறார்கள். அந்தப் பகுதி தங்களுக்குச் சொந்தமானதில்லை என்பதை அவர்கள் கொஞ்சமும் எண்ணிப்பார்ப்பதில்லை.

அதே நேரம், இளம் சுற்றுச்சூழலாளர் குழுவினர் காட்டுப் பகுதிகளைத் தூய்மைப்படுத்துவதற்குத் தங்கள் ஆற்றலைச் செலவழிக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது நம்பிக்கையும் வருகிறது.

இன்று, நாம் பல மனித-விலங்கு முரண் சூழல்களையும் பார்க்கிறோம். ஏனெனில், மனிதர்கள் தங்களால் இயன்ற நிலத்தையெல்லாம் பறிக்க விரும்புவதால், விலங்குப் பகுதிகள் சுருங்கிக்கொண்டிருக்கின்றன. இங்கு, இந்தச் சூழமைப்புக்குள் வாழும் விலங்குகள், தாவரங்கள் மற்றும் பழங்குடியினச் சமூகங்களைக் கொண்ட இயற்கைச் சூழமைப்புக்கு ஆதரவாக நிற்பது முதன்மையாகிறது.

நிறைவாக, மிக முதன்மையான ஒரு விஷயம். நீங்கள் சரியான சட்டம் மற்றும் கொள்கையைச் செயல்படுத்தும் நிலையில் அல்லது சூழலில் இருக்கிறீர்கள் என்றால், காட்டுயிர்ப் பாதுகாப்புச் சட்டங்களைச் செயல்படுத்தவும் வலுப்படுத்தவும் உதவுங்கள். நீங்கள் இதைச் செய்யாவிட்டால், வேறு யார் செய்வார்கள்?



எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதி வருகிறார்.



## RID 3120

### RC பிரயாக்ராஜ் சங்கம்

மார்ச் மாதத்தில், இந்த நகரின் வெவ்வேறு பகுதிகளில் 3 போக்குவரத்துக் காவல் அரங்குகளைத் தொடங்கிவைத்தார் DG பூனம் குலாட்டி. இந்த அரங்குகள் பிரயாக்ராஜில் போக்குவரத்து ஓட்டத்தை ஒழுங்குபடுத்தும் போக்குவரத்து அலுவலர்களுக்கு நிழலளிக்கும்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3141

### RC பாம்பே ஏர்போர்ட்

RC பால்கர் உடன் இணைந்து, பால்கரில் உள்ள சோனோபந்த் தண்டேகர் கல்லூரியில் ரோட்டரி போட்டித் தேர்வுப் பயிற்சி மையம் (ரூ.70 லட்சம்) தொடங்கப்பட்டது. இந்த மையம் Wi-Fi வகுப்பறை, ஊடாடும் பலகை, கணினி ஆய்வகம், நூலகம், படிக்கும் அறையைக் கொண்டது.

## RID 3170

### RC கர்கோரெம்-சன்வர்டெம்

ஆதார் அட்டையில் திருத்தம் செய்ய, அல்லது, புதிய ஆதார் அட்டை வாங்க விரும்பும் கர்கோரெம் மக்களுக்கு உதவுவதற்காக, வெவ்வேறு பகுதிகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஆதார் அட்டைப் புதுப்பிப்பு முகாம் நடத்தப்படுகிறது. முதல் 3 முகாம்களில் 70-க்கும் மேற்பட்டவர்கள் பலன் பெற்றார்கள்.





## RID 3231

### RC குடியாத்தம்

ஆதி மருத்துவமனை, நெஞ்சிற்கினிய நண்பர்கள் குழு என்ற NGO உடன் இணைந்து, நடமாடும் மார்பகப் பரிசோதனை முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

## RID 3131

### RC புனே கொத்ருட்

இந்தச் சங்கம் எல்கே கெமிக்கல்ஸ் உதவியுடன் தீனநாத் மங்கேஷ்கர் மருத்துவமனையின் NICU-வுக்கு NIRS கருவியைக் கொடையளித்தது. இந்தக் கருவி புதிதாகப் பிறந்த குழந்தைகளின் முதன்மையான உறுப்புகளின் ஆக்சிஜன் நிலைகளைக் கண்காணிக்கும்.



## RID 3233

### RC சென்னை வெர்வ்

ஆதரவற்றோர் இல்லம் ஒன்றில் உள்ள மூத்த குடிமக்களுக்கு அழகுக் கலைஞர்கள் பெடிக்யூர், மேனிக்யூர் வழங்கி, தலைமுடியை வெட்டி அழகுபடுத்தினார்கள். அந்தச் சிறப்பு இல்லத்தில் எங்கும் மகிழ்ச்சி துள்ளியது. நெஞ்சைத் தொடும் கதைகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன, பாடல்கள் பாடப்பட்டன, சிலர் நடனமாடினார்கள்.



## RID 3234

### RC மெட்ராஸ் மெட்ரோ

லக்னோவைச் சேர்ந்த RPF ஆய்வாளர் சந்தனா சின்ஹா, டெல்லியைச் சேர்ந்த விலங்குகள் நல ஆர்வலர் ஜாக்ரிதி மிஸ்ரா, ஈரோட்டைச் சேர்ந்த சமூக ஆர்வலர் நவீன் குமார் மற்றும் பெங்களூருவைச் சேர்ந்த டாக்டர் சுனில்குமார் ஹெப்பி ஆகியோர் ஸ்பிரிட் ஆஃப் இந்தியா விருதுகள் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# கொலஸ்ட்ரால்: அமைதியாக உயிரைப் பறிக்கும் ஆபத்து

கீதா மத்தாய்

கொலஸ்ட்ரால் என்றால் ரத்தக் குழாய்களை அடைத்துவிடும் ஒரு தீங்கு விளைவிக்கும் கொழுப்பு என்ற எண்ணமே பலருக்கு உள்ளது. ஆனால் உண்மையில் கொலஸ்ட்ரால் என்பது நமது உடலுக்குத் தேவையான ஒரு முக்கியப் பொருள். உடலின் ஒவ்வொரு செல்களின் சவ்வு அமைப்பிலும் இது உள்ளது. மேலும் பல ஹார்மோன்கள் மற்றும் வைட்டமின் D உருவாகவும் கொலஸ்ட்ரால் அவசியம்.

நாம் உணவு உண்ட பிறகு, உடலுக்குத் தேவைக்கு அதிகமான சக்தி கொழுப்பாக சேமிக்கப்படுகிறது. பின்னர் உணவுக்கு இடைப்பட்ட நேரங்களில் இந்தக் கொழுப்பு உடலின் உறுப்புகளுக்கு எரிசக்தியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் ரத்தத்தில் அதிக அளவில் கொழுப்பு மற்றும் கொலஸ்ட்ரால் சுழலத் தொடங்கும்போதுதான் பிரச்னை உருவாகிறது.

ரத்தம் பெரும்பாலும் நீரால் ஆனது. கொழுப்பு நீரில் எளிதாகக் கரையாது. எனவே கொலஸ்ட்ரால் அதிகரிக்கும்போது, அது ரத்தக் குழாய்களின் உள்சுவர்களில் படியத் தொடங்குகிறது. இவ்வாறு படியும் கொழுப்புத் துகள்கள் 'பிளேக்' (Plaque) என அழைக்கப்படுகின்றன. காலப்போக்கில் இவை ரத்தக் குழாய்களை குறுகலாக்கி கடினமாக்குகின்றன.

இதனால் இதயம் உடலின் பல்வேறு உறுப்புகளுக்கு ரத்தத்தை அனுப்ப அதிகமாக உழைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ரத்த அழுத்தம் உயர்கிறது. ரத்தக் குழாய்களின் நெகிழ்வுத்தன்மை குறைகிறது. தொடர்ந்து இதயம் அதிக சுமையைச் சந்தித்தால், அது பலவீனமடைந்து இதயச் செயலிழப்புக்கும் வழிவகுக்கலாம்.

சிறுநீரகங்களுக்கு செல்லும் ரத்த ஓட்டமும் பாதிக்கப்படலாம். இதனால் சிறுநீரகங்களின் செயல்பாடு குறைந்து, உடலில் கழிவுப் பொருட்கள் தேங்க ஆரம்பிக்கும்.

கைகள் மற்றும் கால்களுக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் ரத்தக் குழாய்களும் பாதிக்கப்படலாம். இதன் விளைவாக கை, கால்கள் எப்போதும் குளிர்ச்சியாக இருப்பது, சிறிய காயங்கள் கூட தாமதமாக ஆறுவது போன்ற பிரச்னைகள் ஏற்படலாம். கடுமையான நிலைகளில் திசுக்கள் அழிந்து 'காங்கிரீன்' (Gangrene) எனப்படும் அபாயகரமான நிலை உருவாகலாம்.



இதயத்திற்கு ஆக்சிஜன் நிறைந்த ரத்தத்தை வழங்கும் கரோனரி ரத்தக் குழாய்கள் அடைபட்டால், இதய தசைகளுக்கு ஆக்சிஜன் கிடைக்காமல் அவை சேதமடையும். இதுவே கரோனரி தமனி நோய் அல்லது மாரடைப்பிற்கு காரணமாகிறது. கடுமையான மாரடைப்பு திடீர் மரணத்திற்கும் வழிவகுக்கலாம்.

அதேபோல் மூளைக்கு ரத்தம் கொண்டு செல்லும் தமனிகள் குறுகினால் பக்கவாதம் ஏற்படலாம். இதனால் நினைவிழப்பு, பேச்சுக் குறைபாடு, குழப்பம், உடல் உறுப்புகள் செயலிழத்தல் அல்லது நிரந்தர ஊனமுற்ற நிலை போன்ற விளைவுகள் ஏற்படலாம். மூளைக்கு செல்லும் ரத்த ஓட்டம் குறைவதால் வாஸ்குலர் டிமென்ஷியா எனப்படும் நினைவாற்றல் சிதைவு நோயும் ஏற்படக்கூடும்.

கொலஸ்ட்ரால் குறித்த விழிப்புணர்வு அதிகரித்திருந்தாலும், பலர் தங்களது கொலஸ்ட்ரால் அளவை ஒருபோதும் பரிசோதனை செய்துகொள்வதில்லை. இதனால் தான் அதிக கொலஸ்ட்ரால் 'அமைதியான கொலையாளி' என்று அழைக்கப் படுகிறது. பல ஆண்டுகள் எந்த அறிகுறியும் இல்லாமல் இருக்கும். பலருக்கு மாரடைப்பு அல்லது பக்கவாதம் ஏற்பட்ட பிறகோ அல்லது சாதாரண உடல் நலப் பரிசோதனையின் போதோ தான் இந்தப் பிரச்னை தெரியவருகிறது.

அதிக கொழுப்பு அளவைக் கண்டறிவதற்கான ஒரே வழி 'லிப்பிட் புரொஃபைல்' (Lipid Profile) எனப்படும் ரத்தப் பரிசோதனை. பொதுவாக 9 முதல் 12 மணி நேரம் வரை உண்ணாவிரதம் இருந்து இந்தப் பரிசோதனையை மேற்கொள்வது சிறந்தது.

### யார் எப்போது பரிசோதனை செய்ய வேண்டும்?

❖ 9 முதல் 11 வயதுக்குள் ஒருமுறை
❖ 17 முதல் 21 வயதுக்குள் மீண்டும் ஒருமுறை

அதன் பிறகு ஒவ்வொரு 4 முதல் 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை

நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன், சிறுநீரக நோய் அல்லது குடும்பத்தில் இதய நோய் வரலாறு உள்ளவர்கள் அடிக்கடி பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.



### விரும்பத்தக்க கொழுப்பு அளவுகள்

- மொத்த கொலஸ்ட்ரால்: 200 mg/dL-க்கும் குறைவாக
- டிரைகிளிசரைடுகள்: 150 mg/dL-க்கும் குறைவாக
- HDL (நல்ல கொலஸ்ட்ரால்): 60 mg/dL-க்கும் அதிகமாக
- LDL (கெட்ட கொலஸ்ட்ரால்): 100 mg/dL-க்கும் குறைவாக
- கொலஸ்ட்ரால் / HDL விகிதம்: 4-க்கும் குறைவாக

கொலஸ்ட்ரால் ரத்தத்தில் தனியாகச் செல்லாது. 'லிப்போபுரோட்டீன்' எனப்படும் புரதங்களுடன் இணைந்தே பயணிக்கிறது.

LDL (Low Density Lipoprotein) என்பது 'கெட்ட கொலஸ்ட்ரால்' எனப்படுகிறது. இது ரத்தக் குழாய்களின் சுவர்களில் கொலஸ்ட்ராலைப் படியச் செய்கிறது.

HDL (High Density Lipoprotein) என்பது 'நல்ல கொலஸ்ட்ரால்'. இது அதிகப்படியான கொலஸ்ட்ராலை அகற்றி கல்லீரலுக்குக் கொண்டு சென்று உடலிலிருந்து வெளியேற்ற உதவுகிறது.

### கொலஸ்ட்ராலை உயர்த்தும் நோய்கள்

❖ நீரிழிவு
❖ தைராய்டு சுரப்பி குறைபாடு
❖ நாள்பட்ட சிறுநீரக நோய்
❖ நாள்பட்ட கல்லீரல் நோய்
❖ HIV / AIDS

### இந்த நோய்களும் முறையாக சிகிச்சை பெற வேண்டும்.

சிலருக்கு மரபணுக் காரணங்களாலும் கொலஸ்ட்ரால் அதிகரிக்கலாம். ஆனால் பெரும்பாலான குடும்பங்களில் இது மரபு காரணமாக அல்ல; தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்படும் தவறான உணவுப் பழக்கவழக்கங்களே முக்கிய காரணமாக இருக்கின்றன.

### கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்த என்ன செய்யலாம்?

❖ பழங்கள், காய்கறிகள், முழுத் தானியங்கள், பயறு வகைகள் அதிகம் சாப்பிடுங்கள்.
❖ சர்க்கரை, வெள்ளை மாவு உணவுகள் மற்றும் உப்பைக் குறையுங்கள்.
❖ செறிவூட்டப்பட்ட கொழுப்புகளைக் குறைத்து, டிரான்ஸ் கொழுப்புகளைத் தவிர்க்கலாம்.
❖ மீன், பருப்பு வகைகள், ஆலிவ் எண்ணெய் போன்ற ஆரோக்கியமான கொழுப்புகளைத் தேர்வு செய்யுங்கள்.
❖ உடல் எடையை கட்டுப்பாட்டில் வைத்திருங்கள்.
❖ வாரத்தின் பெரும்பாலான நாட்களில் குறைந்தது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யுங்கள்.

புகைப்பிடிப்பதை நிறுத்துங்கள். மதுபானத்தை அளவோடு மட்டுமே அருந்துங்கள்.

### மருந்து சிகிச்சை

உணவுக் கட்டுப்பாடு மற்றும் வாழ்க்கைமுறை மாற்றங்களே முதன்மையான சிகிச்சை. அவை போதுமான பலன் தரவில்லை என்றால் மருத்துவர் மருந்துகளை பரிந்துரைக்கலாம்.

ஸ்டேட்டின் (Statin) வகை மருந்துகள் LDL கொலஸ்ட்ராலை குறைப்பதில் மிகவும் பயனுள்ளதாக உள்ளன. டிரைகிளிசரைடுகளை குறைக்க ஃபெனோஃபைப்ரேட், ஜெம்ஃபைப்ரோசில் போன்ற மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒமேகா-3 கொழுப்பு அமிலங்களும் உதவுகின்றன.

இன்றைய மருத்துவ முன்னேற்றங்களில், PCSK9 போன்ற மரபணுக்களை இலக்காகக் கொண்டு செயல்படும் புதிய சிகிச்சை முறைகளும் நம்பிக்கை அளித்து வருகின்றன.

40 வயதிற்கு மேல் கொலஸ்ட்ரால் அதிகரிப்பது பொதுவாகக் காணப்பட்டாலும், இளம் வயதினரையும் இது பாதிக்கக்கூடும். அறிகுறிகள் இல்லாததால் இதை அலட்சியப்படுத்தக் கூடாது. முறையான பரிசோதனை, ஆரோக் கியமான வாழ்க்கை முறை மற்றும் சரியான சிகிச்சை மூலம் மாரடைப்பு, பக்கவாதம், சிறுநீரக நோய்கள் மற்றும் அகால மரணம் போன்றவற்றைத் தடுக்க முடியும். கொலஸ்ட்ராலை கட்டுப்படுத்துவது, நீண்ட ஆயுளுக்கான முக்கிய முதலீடாகும்.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவர் மற்றும் Staying Healthy in Modern India என்ற புத்தகத்தின் ஆசிரியர் ஆவார்.

# மலைகளில் ஒலிக்கும் சத்தம்

*துப்பாக்கிச் சத்தமாக மாறியபோது, உயிர் பிழைப்பதற்கான ஒரு வாய்ப்பை அளித்த இடம் இன்டர்-கான்டினென்டல் காபூல்*

“அவ்வப்போது ஒரு அரபு விருந்தினர் அங்கு வருவார். அவர் ஒருபோதும் முன்வாசல் வழியாக வரமாட்டார். அவருக்காகவும் அவரைச் சுற்றியிருந்தவர்களுக்காகவும் மட்டும் பயன்படுத்தப்பட்ட அவசரகால வெளியேறும் வழி வழியாகவே வருவார். அந்த ஹோட்டலுக்குள் அவருக்கென தனியாக இன்னொரு ஹோட்டல் இருப்பது போலவே இருந்தது.”

இந்த விருந்தினர் யார் என்பதை யூகிப்பது கடினமல்ல - ஒசாமா பின் லாடன். அவரும் காபூலின் மிகச் சிறந்த ஹோட்டல்களில் ஒன்றான இன்டர்-கான்டினென்டல் காபூலில் தனது நடவடிக்கைகளை எந்தத் தயக்கமும் இல்லாமல் நடத்தினார்.

மெதுவாக உயர்ந்து செல்லும் மலையின் உச்சியில் அமைந்திருந்த இந்த ஹோட்டல், 1969ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. அப்போதைய பிரதமர் நூர் அகமது எடிமாடி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். காபூலில் திறக்கப்பட்ட மிகப் பெரிய ஹோட்டலாக அது விளங்கியது. இன்டர்-கான்டினென்டல் ஹோட்டல் சங்கிலியின் 48வது அங்கமாக இருந்த இது, அந்த சங்கிலியின் பெருமைமிகு மணியாகக் கருதப்பட்டது.

உயர்தர உணவு, சிறப்பான விருந்தோம்பல், அழகான கட்டமைப்பு, உலகின் பல பகுதிகளில் இருந்து வந்த விருந்தினர்கள் என அது சர்வதேசத் தன்மை கொண்ட ஒரு இடமாக இருந்தது. பல்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றாகச் சந்திக்கும் இடமாகவும் அது திகழ்ந்தது.



சந்தியா ராவ்

லைஸ் டூசெட் எழுதிய A People’s History of Afghanistan என்ற இந்த நூல், ஒரு ஹோட்டலின் வரலாற்றை மட்டும் பதிவு செய்யவில்லை. அது ஒரு நாட்டின் மக்களின் வாழ்க்கை, அவர்களின் கனவுகள், இழப்புகள், அச்சங்கள் மற்றும் நம்பிக்கைகளின் வரலாறாக உள்ளது.

இன்டர்-கான்டினென்டலில் நீண்ட காலம் பணியாற்றிய ஹஸ்ரத், அபிதா, குடூஸ், அமனுல்லா, சாதெக் போன்ற பல சாதாரண ஊழியர்களின் வாழ்க்கைக் கதைகள் மூலம், ஆப்கானிஸ்தானின் அரசியல் மாற்றங்கள் எவ்வாறு மக்களின் அன்றாட வாழ்க்கையை பாதித்தன என்பதை ஆசிரியர் நமக்கு காட்டுகிறார்.

ஒரு விமர்சகர் இந்த நூலை “ஆப்கானிஸ்தானுக்கும் அதன் மக்களுக்கும் எழுதப்பட்ட ஒரு அன்புக் கடிதம்” என்று குறிப்பிட்டுள்ளார்.

1988ஆம் ஆண்டு காபூலுக்கு வந்த லைஸ் டூசெட், சோவியத் படைகள் வெளியேறிய காலத்தை செய்தியாக பதிவு செய்ய வந்தார். பல ஆண்டுகள் நீடித்த ஆக்கிரமிப்புக்குப் பிறகு ஒரு புதிய காலம் தொடங்குமா என்ற எதிர்பார்ப்பும், அதே நேரத்தில் ஆபத்தும் நிறைந்த காலம் அது.

அவர் ஹோட்டலில் பணியாற்றிய பலருடன் நெருக்கமாக பழகினார். அறை உதவியாளர்கள், மேலாளர்கள், சமையல்காரர்கள், பரிமாறுபவர்கள்,




பாதுகாப்பு ஊழியர்கள் என ஒவ்வொருவரின் வாழ்க்கையும் அந்த நாட்டின் பெரிய வரலாற்றின் ஒரு பகுதியாக மாறியது.

அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த இன்டர்-கான்டினென்டல், காலப்போக்கில் சிதைவடைந்தாலும், பல அரசியல் நிகழ்வுகளுக்கும் சந்திப்புகளுக்கும் சாட்சியாக இருந்தது. பழங்குடித் தலைவர்கள், கம்யூனிஸ்டுகள், முஜாஹிதீன்கள், தாலிபன்கள், அதிபர்கள் என பல தரப்பினரும் அந்த ஹோட்டலின் அரங்குகளில் சந்தித்தனர்.

இந்த நூல் சுமார் 50 ஆண்டுகால ஆப்கானிஸ்தானின் பயணத்தை எடுத்துச் செல்கிறது. மன்னராட்சி, ஆட்சிக் கவிழ்ப்புகள், சோவியத் ஆக்கிரமிப்பு, அமெரிக்கப் படையெடுப்பு, தாலிபன்களின் எழுச்சி மற்றும் மீள்வருகை என அந்த நாடு பல மாற்றங்களை சந்தித்தது.

2021ஆம் ஆண்டு நடந்த ஒரு திருமண நிகழ்ச்சியுடன் புத்தகம் தொடங்குகிறது. அனைவரும் அழகாக அணிந்து கொண்டு, இசை, நடனம் மற்றும் உணவுடன் கொண்டாட்டத்துக்கு தயாராக இருக்கிறார்கள். ஆனால் அந்த






மகிழ்ச்சியின் பின்னால் ஒரு பய உணர்வு உள்ளது.

திடீரென மலையின் மீது ஒரு வாகனம் தெரிகிறது. அதில் பறக்கும் வெள்ளைக் கொடி அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. டிஜே நபிலா தன்னை மூடிக்கொள்ள நீளமான துணி ஒன்றைக் கேட்கிறார். பெண்கள் தங்கள் பைகளில் இருந்து துப்பட்டாக்களை அவசரமாக எடுத்துக் கொள்கிறார்கள்.

மணமகன் மணமகளின் கையைப் பிடித்துக்கொண்டு விருந்தினர்களுடன் வெளியேறுகிறார். மேசைகளில் பரிமாறப்பட்ட மதிய உணவு இன்னும் சூடாகவே இருக்கிறது. ஆனால் தாலிபன்கள் மீண்டும் வந்துவிட்டனர்.

காபூல் விமான நிலையத்தில் நாட்டை விட்டு வெளியேற ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த பயங்கரமான காட்சிகளையும் லைஸ் டூசெட் நேரில் பார்த்தார். தொலைக்காட்சிகளில் மீண்டும் மீண்டும் காட்டப்பட்ட அந்தக் காட்சிகள், ஒரு நாட்டின் துயரத்தை உலகிற்கு எடுத்துக் காட்டின.

ஆரம்ப காலங்களில் இன்டர்-கான்டினென்டல் செல்வந்தர்களுக்கும் முக்கிய விருந்தினர்களுக்கும் உரிய இடமாக இருந்தது. பின்னர் அது செய்தியாளர்களுக்கும் பாதுகாப்பான தளமாக மாறியது. பெண்களும் பல்வேறு பணிகளில் சுதந்திரமாக வேலை செய்தனர். ஹோட்டல் ஊழியர்கள் ஆப்கானிஸ்தானின் பல இன மற்றும் பழங்குடி மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

1973க்குப் பிறகு அரசியல் மாற்றங்கள் தீவிரமடைந்தன. சோவியத் படைகள் நுழைந்த போது, பழைய ஆப்கானிஸ்தானின் அடையாளங்கள் அழிக்கப்படத் தொடங்கின. அரச குடும்பத்தின் நினைவுகள், புத்தகங்கள், உடைகள், பழைய வாழ்க்கை முறைகள் அனைத்தும் தாக்குதலுக்குள்ளானது. இருந்தாலும் ஹோட்டல் ஊழியர்கள் ஆபத்துகளையும் பொருட்படுத்தாமல் செய்தியாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவினர்.

“சிவப்பு ஆண்டுகள்” என அழைக்கப்பட்ட அந்தக் காலத்தில், பொறியாளராக வேண்டும் என்ற கனவு கொண்ட அமனுல்லாவின் வாழ்க்கையையும் நாம் பின்தொடர்கிறோம். போர், அரசியல் மாற்றங்கள் மற்றும் தாலிபன் ஆட்சி என பல சோதனைகளைக் கடந்து அவர் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்.

லைஸ் டூசெட் கூறுவது போல, வரலாறு என்பது வெறும் குண்டுகளின் சத்தமும் துப்பாக்கிக் குண்டுகளின் ஓசையும் அல்ல. அது ஒரு தாயின் கவலையான கண்கள், ஒரு வீரனின் பாடல், மனிதர்களுக்கிடையேயான அன்பு, துணிவு மற்றும் நம்பிக்கையின் கதையாகும்.

ஆப்கானிஸ்தானின் கதை நமக்கு ஒரு உண்மையை நினைவூட்டுகிறது - ஒரு நாட்டின் வரலாறு அதன் தலைவர்களால் மட்டுமல்ல; சாதாரண மக்களின் வாழ்க்கைக் கதைகளாலும் உருவாகிறது.

இன்றும் இன்டர்-கான்டினென்டல் காபூலின் கதவிலும் கூரையிலும் இருக்கும் அந்த “K” எழுத்து, காலத்தின் சோதனைகளைக் கடந்து நிற்கும் மனித மன உறுதியின் அடையாளமாகத் திகழ்கிறது.

கட்டுரையாளர் குழந்தைகள்
எழுத்தாளர் மற்றும்
மூத்த பத்திரிகையாளர்.

# Subscribe NOW!

## to Rotary News Print Version & e- Version For the Rotary year 2026 – 2027

**Annual Subscription (India)**

| Print version | e-Version |
|---|---|
| ₹600/- | ₹360/- |

Print version ☐ e- Version ☐

| | English | Hindi | Tamil |
|---|---|---|---|
| No. of Copies | | | |

For every new member the pro-rata is **₹50** a month for print version and **₹30** for E-version.

Payments can be made online at

**HDFC Bank, Montieth Road, Egmore, Chennai.**
**Rotary News Trust**
**SB A/c No 50100213133460**
**IFSC: HDFC0003820**

Scan here to pay

Email us the UTR Number, Club Name, President/ Secretary's name, Amount and Date of Transfer.

Update the correct mailing address and contact details of your members directly to *Rotary News* every year to receive the magazine. RI does not share member details with us. Intimate language preference (English/Hindi/ Tamil) against each member's name.

Rotary Club of .................................................. RI District ..............................

Name of the President/Secretary ..................................................

Address ..................................................

..................................................

..................................................

City .............................. State .............................. PIN ☐☐☐☐☐☐

STD Code .............................. Phone: Off. .............................. Res. ..............................

Mobile .............................. E-mail ..............................

Cheque/DD No. .............................. Dated .............................. for Rs. ..............................

Drawn on ..................................................

in favour of "**ROTARY NEWS TRUST**" is enclosed.

Date: President/Secretary

Mail this form to:

Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, -98400 78074, e-mail: rotarynews@rosaonline.org

# ரோட்டரி நியூஸ் சந்தா விதிமுறைகள்

1. சந்தா ரோட்டரி ஆண்டுக்கானது (ஜூலை முதல் ஜூன் வரை).
2. ஒவ்வொரு ரோட்டரியனும் ஒரு ரோட்டரி இதழுக்குக் கண்டிப்பாகச் சந்தா செலுத்தவேண்டும்.
3. முழு ஆண்டுக்கான சந்தாவைப் பரிந்துரைக்கப் பட்ட படிவத்தில் ஜூலை மாதத்தில் அனுப்ப வேண்டும்
4. ஜூலைக்குப் பிறகு சேர்கிறவர்கள் மீதமுள்ள ரோட்டரி ஆண்டுக்கு அச்சு இதழ் ஓர் இதழுக்கு ரூ.40 மற்றும் மின் இதழ் ஓர் இதழுக்கு ரூ.27 என்ற விலையில் பணம் செலுத்தலாம்.
5. ரோட்டரி நியூஸ்-உடன் சங்கத்துக்கு உள்ள சந்தாக் கணக்கு தொடர்ந்து செயல்படும் கணக்காகும். அது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாத முடிவில் முடிவடைவதில்லை.
6. அனைத்து உறுப்பினர்களுடைய பெயர்கள், அவர்களுடைய முழு அஞ்சல் முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மொபைல் எண், மின்னஞ்சல் ID ஆகியவற்றைப் படிவம் மற்றும் DD அல்லது காசோலையுடன் அனுப்பவேண்டும். GPAY அல்லது இணைய வங்கிச் சேவை வழியாகவும் செய்யலாம். நீங்கள் இணையத்தில் பணம் செலுத்தும்போது, UTR எண், உங்கள் சங்கத்தின் பெயர், செலுத்திய தொகையை உடனடியாக வாட்ஸாப் (9840078074) அல்லது மின்னஞ்சல் (*rotarynews@rosaonline.org*) மூலம் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். இதைச் செய்யாவிட்டால், உங்கள் பணம் செலுத்தல் எங்கள் கணக்குகளில் தோன்றாது; உங்கள் சங்கம் செலுத்தவேண்டிய தொகை நிலுவையில் உள்ளது என்று காண்பிக்கப்படும்.
7. உங்கள் உறுப்பினர்களுடைய அஞ்சல் முகவரி, தொடர்புத் தகவல்களை ஒவ்வோர் ஆண்டும் எங்களுக்கு நேரடியாகத் தெரிவியுங்கள். RI அலுவலகம் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை.
8. உறுப்பினர்கள் தங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பும் சந்தாதாரர்கள் பட்டியலில் தங்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவேண்டும். நீங்கள் பணம் செலுத்திவிட்டீர்கள், ஆனால், உங்கள் பெயரை உங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பவில்லை என்றால், உங்களுக்கு இதழின் பிரதி கிடைக்காது அல்லது உங்கள் சங்கம் சந்தாவை மின் இதழுக்கு சேர்த்துள்ளதா என்று உறுதிபடுத்திக்கொள்ளுங்கள்.
9. உறுப்பினர் நிலையில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிச் சங்கங்கள் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.
10. எங்களிடம் உள்ள பட்டியலின்படி நாங்கள் அனுப்பும் இதழ்களின் எண்ணிக்கைக்கு சங்கங்கள் பணம் செலுத்த வேண்டும்.
11. சங்கங்கள் செலுத்தாத தொகைகள் அந்த சங்கங் களுக்கு நிலுவைத் தொகையாகக் காண்பிக்கப்படும். அதன் பிறகு பெறப்படும் தொகையாவும் முந்தைய நிலுவைத் தொகைகளுக்கு சரி செய்யப்படும்.
12. சங்கங்கள் எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் பட்டியலை நாங்கள் அவ்வப்போது RIன் தரவுகளுடன் சரி பார்க்கிறோம். விடுபட்ட சந்தாதாரர்களைக் கண்டறிகிறோம்.
13. நடப்பு ரோட்டரி ஆண்டிற்கான சந்தாவை அச்சுப் பதிப்பிலிருந்து மின்னணுப்பதிப்பிற்கு மாற்றக்கோரும் விண்ணப்பத்தை, குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னதாகவே எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட பிரதிகளுக்கு அச்சுப் பதிப்பிற்கான சந்தாக் கட்டணமே பொருந்தும்; அதே வேளையில், ஆண்டின் மீதமுள்ள காலத்திற்கு மின்னணுப் பதிப்பிற்கான கட்டணம் விகிதாச்சார அடிப்படையில் கணக்கிடப்பட்டுப் பொருந்தும்.
14. உறுப்பினர் ஒருவர் ஒரு மாதத்துக்கு இதழைப் பெறாவிட்டால் எங்களுக்கு அதை உடனடியாகத் தெரிவியுங்கள்.
15. சில பகுதிகளில் தபால் வழங்கல் பிரச்சனைகள் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சங்கங்கள் பிரதிகளை மொத்தமாகப் பெறத் தேர்ந்தெடுக்கலாம். அதற்குக் கூடுதல் கட்டணங்கள் பொருந்தும்.

## சந்தா செலுத்தாத சங்கங்கள் RI-ஆல் நீக்கப்படும்

ஜூலை 1, 2022 முதல், ரோட்டரி பத்திரிக்கையை சந்தா செலுத்தி வாங்காத ரோட்டரி சங்கங்களை RI வாரியம் நீக்கம் செய்யும் என அதன் ரோட்டரி கொள்கை கோட்பாட்டில் சேர்த்துள்ளது. இணங்காத சங்கங்கள் குறித்த காலாண்டு அறிக்கை, அந்தந்த மாவட்ட ஆளுனர்களுக்கு தெரிவித்த பிறகு, எங்கள் அலுவலகம் மூலம் RIக்கு அனுப்பப்படுகிறது. இந்த சங்கங்களுக்கு **90 நாள் அவகாசம்** வழங்கப்படும், அதன் பிறகு சந்தா செலுத்தாத சங்கம் RI-ஆல் இடை நீக்கம் செய்யப்படும்.


180 நாட்களுக்கு இடைநிறுத்தப் பட்ட மற்றும் இணங்காத சங்கங் களை, ரோட்டரி நியூஸ், RIக்கு தெரிவித்த பிறகு, "போர்டு அதன் விருப்பப்படி இந்த சங்கங்களை நீக்கம் செய்யலாம்" என்று ஒரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்பும்.

சங்கத்தலைவர்களே, தயவு செய்து உங்கள் உறுப்பினர்களை ரோட்டரி நியூஸ்-ன் சந்தா செலுத்தி இந்தியாவில் ரோட்டரி செயல்பாடுகளின் முழு விவரத்தையும் பெற செய்யுங்கள். உங்கள் PELS/GELS பாடத்திட்டத்தில் கட்டாய சந்தா பற்றிய தகவலைச் சேர்க்க RI பரிந்துரை செய்துள்ளது.



# கலவையின் பல சுவைகள்

LBW



TCA ஸ்ரீனிவாச ராகவன்

சமீபத்தில் தொலைக்காட்சியில் மிகவும் பிரபலமான ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தேன். அதில் சிலர் ஒரு உணவு வகையைத் தயாரிக்கும் போட்டியில் கலந்து கொண்டிருந்தனர். இரண்டு வெவ்வேறு சுவைகளை ஒரே உணவில் இணைத்து ஒரு புதிய உணவு வகையை உருவாக்குவதுதான் அந்தப் போட்டியின் நோக்கம்.

இந்தியாவில் இதை நாம் "கலவை உணவு" (Fusion) என்று அழைக்கிறோம். ஓய்வு பெற்ற கொரிய ஆய்வுப் பேராசிரியரான என் மனைவியிடம், நூடுல்ஸ் சூப்புடன் சாம்பாரை கலந்து பார்த்தால் எப்படி இருக்கும் என்று கேட்டேன். அவர்கள் தரும் சூப் பொடிக்குப் பதிலாக சாம்பார் பொடியைப் போடலாம் அல்லவா என்றேன்.

என் மனைவி, என்னையும் என் யோசனையையும் முற்றிலும் முட்டாள்தனமானது என்று அவர் நிராகரித்தாலும், ஒரு நாள் அவர் வீட்டில் இல்லாதபோது அதை முயற்சி செய்து பார்த்தேன். அதன் சுவை அவ்வளவு மோசமாக இல்லை. உண்மையில், ஹக்கா நூடுல்ஸை சாதம், இட்லி அல்லது வடையுடன் சேர்ப்பதற்குப் பதிலாக சாம்பாருடன் ஏன் சேர்க்கக் கூடாது என்று நான் யோசிக்கிறேன்.

இதைப் போலவே எல்லா உணவு முறைகளிலும் செய்யலாம். குல்ச்சாவை எத்தியோப்பியாவின் இன்ஜெரா ரொட்டியுடன், தோசையை மெக்சிகோவின் மோல் பொப்லானோ சாஸுடன், பேக் செய்யப்பட்ட பீன்ஸை பிரியாணியுடன் சேர்த்துப் பார்க்கலாம். கருத்து புரிகிறதல்லவா? முயற்சி செய்யாமல் எதையும் பெற முடியாது.

உணவுடன் மட்டும் ஏன் நிறுத்த வேண்டும்? இசையிலும் கலவை சாத்தியமே. உலகில் ஏழு முக்கியமான ஸ்வரங்கள்தான் உள்ளன. ஆனால் வெவ்வேறு இசை முறைகளில் அவை வெவ்வேறு விதமாக இணைக்கப்படுகின்றன.

ஒரு உலகளாவிய குளிர்பான நிறுவனம் கூட இத்தகைய இசையைப் பயன்படுத்தி தனது விளம்பரத்தை உருவாக்குகிறது. பெரும்பாலும் அதன் முடிவு சிறப்பாக இருப்பதில்லை. ஆனால் சில சமயம், உணவைப் போலவே, இசைக் கலைஞர்கள் மனதை கவரும் ஒரு விளைவை உருவாக்கி விடுகிறார்கள்.

உணவில் பொருட்களின் சரியான அளவு சுவையை தீர்மானிப்பது போல, இசையிலும் தாளம் மற்றும் ராகத்தின் விகிதமே அது சிறந்ததா அல்லது சாதாரணமானதா என்பதை முடிவு செய்கிறது.

எழுபதுகளில் இருப்பவர்கள், முதன்முதலில் கலவை இசைக்கான முயற்சியை சிதார் மேதை ரவி சங்கரும் பாப் இசையின் ஜாம்பவான்களான பீட்டில்ஸ் குழுவினரும் செய்ததை நினைவில் வைத்திருக்கலாம். அந்தப் பாடலுக்கு "நார்வேஜியன் வுட்" என்று பெயர். அதில் சிதார் இசை முக்கிய இடம் பெற்றது.

அது உலகளவில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. இன்றும் அது கலவை இசையின் சிறந்த படைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அதன் பிறகு இதுபோன்ற பல பாடல்கள் உருவாகின.

எனக்கு மிகவும் பிடித்தவை, ஓபரா பாடலும் இந்திய பாரம்பரிய ராக இசையும் இணைந்து வரும் நிகழ்ச்சிகள்தான். தனித்தனியாக இருந்தாலும் ஒன்றாக இணைந்தவை.

இரண்டு தமிழ் இசைக்கலைஞர்கள் இதை அற்புதமாகச் செய்கிறார்கள்.

எழுத்திலும் கலவை சாத்தியம் என்பதை சல்மான் ருஷ்டி தனது முதல் பிரபலமான நாவலான "மிட்நைட்ஸ் சில்ட்ரன்" மூலம் நிரூபித்தார்.


ஹிந்தி அல்லது உருது வாக்கியங்களை ஆங்கில எழுத்துக்களில், தனியாகக் காட்டாமல் இயல்பாக இணைத்து எழுதுவது தான் அதன் சிறப்பு. வார்த்தைகள் ஹிந்தி. எழுத்து முறை ஆங்கிலம். சிந்தனைகளும் சொற்றொடர்களும் கிழக்கு மற்றும் மேற்கு கலாச்சாரங்களின் கலவையாக இருந்தன.

அதன் தாக்கம் மிகவும் வசீகரமானது. பல எழுத்தாளர்கள் இதை முயற்சி செய்துள்ளனர். ஆனால் கலவை எழுத்தின் சிறந்த கலைஞராக ருஷ்டி இன்னும் தனித்துவமாகத் திகழ்கிறார். மற்றவர்களின் முயற்சிகள் செயற்கையாகத் தோன்றும் நிலையில், அவர் அதை மிகவும் இயல்பாகச் செய்கிறார்.

மொழியிலும் கலவை என்பது பல காலமாக நடந்து கொண்டிருக்கிறது. நான் வட இந்தியாவில் வளர்ந்தபோது ஹிந்தி, ஆங்கிலம், தமிழ், பஞ்சாபி ஆகிய மொழிகளின் கலவையில் பேசினேன். பின்னர் பெங்காலியும் சேர்ந்தது.

என் பேரக்குழந்தைகள் ஐரோப்பாவின் ஒரு பகுதியில் வாழ்கின்றனர். அங்கு பிரெஞ்சு மொழிதான் முக்கிய மொழி. வீட்டில் அவர்களின் பெற்றோர் அவர்களுக்கு ஹிந்தியும் ஆங்கிலமும் கற்றுக் கொடுக்கிறார்கள். அவ்வப்போது குழந்தைகள் மூன்று மொழிகளையும் ஒரே நேரத்தில் கலந்து பேசுகிறார்கள்.

அதன் விளைவு சில நேரங்களில் குழப்பமாகவும், எரிச்சலூட்டுவதாகவும், சில நேரங்களில் மிகவும் நகைச் சுவையாகவும் இருக்கும்.■


LEADERSHIP
THAT INSPIRES
SERVICE THAT
TRANSFORMS
TOGETHER , LETS CREATE
A BETTER TOMORROW
Rtn.Gandhi Krishnan
DISTRICT GOVERNOR
2026-27
ROTARY DISTRICT 3212
WISHING YOU EVERY SUCCESS AS YOU BEGIN YOUR JOURNEY
AS ROTARY DISTRICT GOVERNOR
WITH BEST COMPLIMENTS FROM
AsquareAB
APPLIED AI ARCHITECTURE
BUILDS PRACTICAL AI PRODUCTS
FOR HEALTHCARE AND ENTERPRISE SYSTEMS.
AI SOLUTIONS
HOSPITALS
CLINICS
DOCTORS
SOFTWARE PRODUCTS
Call Us
+91 72999 12108
Email Us
info@asquareab.com
Visit Our Website
www.asquareab.com
BOOK A LIVE DEMO TODAY!
See the difference AI can make in your clinical workflow.
SECURE. COMPLIANT. TRUSTED.
Built for Healthcare.
Backed by Technology.
For Hospitals.
For Doctors.
For Better Care.

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹50

ADVT.

